
கல்கி
KALKI
23.6.1963
30 காசு


ஒவ்வொரு குடும்பமும்
வாங்கக்கூடிய
உயர் ரக
டால்கம் பவுடர்!
Pond's
Dreamflower talc
Dreamflower talc
பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் டால்க்
குளுமையானது, நறுமணமிக்கது,
புத்துணர்ச்சி யூட்டுவது
பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் டால்க் குடும்பத்தினர் அனைவரும் எல்லாப் பருவ காலங்களிலும் உபயோகிக்க ஏற்ற உன்னத டால்கம் பவுடர். இதமளிக்கும் துல்லிய பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் டால்க் வறுத்தெடுக்கும் கோடையிலும் உங்களை நாள் முழுவதும் சுகமாக இருக்க உதவும். புழுக்கமான காலத்திலும் இனிய நறுமணமுள்ள பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் டால்க் வியர்வையை உறிஞ்சி உங்களை நாள் பூராவும் சுகந்தமான புத்துணர்ச்சியுடன் வைக்கும்!
உங்கள் குடும்பத்தினருக்காக ஒரு டின் பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் டால்க் இன்றே வாங்குங்கள்—இப்பொழுது 3 சைஸ்களில் கிடைக்கிறது!
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. வில் இணைக்கப்பட்டது)

கல்கி



படவிளக்கம் 75ம் பக்கம் பார்க்க

பொருளடக்கம்

சோபகிருது, ஆனி 9உ
ஜுன், 23உ 1963

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பலே, விற்பனையாளரே!

எமதுடைய ரகங்களை வாங்கிவைத்து, விற்பனை செய்து, அவற்றின் பெயரும் புகழும் பரவப் பேருதவி புரிகின்றீர்கள். உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்கும் இடையே இன்றியமையாத இணைப்பாக விளங்கும் உங்கள் பணியே பணி. நம் நாட்டு சிகரெட்டுத் துறை வேற்றுநாட்டு ஏகபோக உரிமையாளர்களின் ஆதிக்கத்திலிருப்பதனால், இந்திய சிகரெட்டுத் தொழிலுடன் ஒத்துழைப்பதிலே சில இடர்களை நீங்கள் எதிர்ப்படுகிறீர்கள். நல்லவேளையாக அவை உங்கள் மனவுறுதியைத் தகர்ப்பதற்கு மாறாக உங்களுக்கு ஊக்கமூட்டியே வருகின்றன. நாட்டுப் பற்றுமிகுந்த நல்லவர்களுக்கு அடையாளமாக நீங்கள் தூண்டுதல்களையும் தடைகளையும் மீறி, சொந்த சிகரெட்டுத் தொழிலுக்கு ஆதரவு அளித்துவருகிறீர்கள். அஞ்சாமையும் ஆர்வமும் சலியாமுயற்சியும் சாதனையுமே உருவகமான தங்களைத் தாயகத்து சிகரெட்டுத் தொழிலைத் தாங்கும் தூணாகக் கருதுகின்றோம். உங்கள் ஒத்துழைப்பையே கொழுகொம்பாகக் கொண்டு இத் தொழில் வளர்ச்சி பெற்று, வருங்காலத்தில் வளமை காணப் போவது உறுதி.

சுதேசி சிகரெட்டுகளை விற்பனை செய்து விதேச நாணயமாற்றினைக் காப்பாற்றுக.



கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்., பம்பாய்-56.
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 62 TAM. Grant Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 47

பிரதமரின் பிரசங்கம்

ஓரிரண்டு விழாக்களில் கலந்து கொள்வதற்காகப் பிரதமரைச் சென்னைக்கு வரவழைத்துக் காங்கிரஸுக்குக் கட்சிப் பிரசாரம் செய்கிற கைங்கரியம் ஏராளமான பொருட் செலவில் சென்ற வாரம் விமரிசையாக நடந்தேறியது. பொதுப் பணத்தில் சென்னைப் பயணம் மேற்கொண்ட ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்கள் சென்னை கடற்கரையில் வெகு நீண்ட பிரசங்கம் ஒன்று நிகழ்த்திச் சுதந்திரக் கட்சியைக் கண்டித்தார்; மக்கள் சபை உப தேர்தல்களில் தாம் அடைந்த தோல்வியைப் பூசி மெழுகினார்; ஆட்சிமொழி விஷயத்தில் தம் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாகத் தொடர்பில்லாமல் ஏதேதோ கூறினார்.

சுதந்திரக் கட்சியைப் பற்றிப் பிரதமர் கூறுவதைக் குறித்து நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. 'பொய்த் தூக்கம் தூங்குபவனை எழுப்ப முடியாது' என்ற நியாயப்படி, வேண்டுமென்றே 'சுதந்திரக் கட்சிக் கொள்கைகளைப் புரிந்து கொள்ள மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் பிரதமருக்கு அதை நாம் தெளிவுபடுத்துவது இயலாத காரியம். அவர் புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் கட்சிக் கொள்கைகளை மக்கள் புரிந்து கொள்கிறார்கள்; மந்திரவாதி உண்டாக்கிய அபாயத் தூக்கத்திலிருந்து அவர்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள்!

சமீபத்திய மக்கள் சபை உப தேர்தல்களைப் பற்றிப் பேசிய பிரதமர், வேறு வேறு கொள்கைகளை உடைய 'அவியல் கூட்டம்' ஒன்று சேர்ந்து காங்கிரஸை வெற்றிகண்டது ஓர் உண்மை வெற்றி அல்ல என்று கூறிக் கண்டித்திருக்கிறார். அப்படி வெவ்வேறு கொள்கைகளை உடைய கட்சிகள் ஏன் தங்கள் வேற்றுமைகளை மறந்து இவ்வளவு தீவிரமாகக் காங்கிரஸை எதிர்த்தன என்பதைப் பிரதமரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரதமர் சொல்வதுபோல் இவை ஒன்று சேர்ந்தது அதர்மமல்ல; காங்கிரஸின் அதர்ம ஆட்சி முறையை, முக்கியமாகத் தேர்தல்களில் அது கையாளுகிற அதர்ம வழிகளைக் கண்டு எல்லாக் கட்சிகளுமே கொதிப்படைந்ததால்தான் இந்த அநீதத்தை எப்படியேனும் முறியடிக்க வேண்டுமென்று தங்களுடைய பரஸ்பர வித்தியாசங்களை மறந்து அவை ஒன்று சேர்ந்தன. ராஜ்ய மந்திரிகளும், மத்திய மகா மந்திரிகளும், அரசாங்க அதிகாரிகளும் தேர்தல் தொகுதியில் பட்டாளமாகத் திரண்டு வந்து, நிர்வாகம் தங்களிடமிருப்பதால் தொகுதி மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தருவதாக வாக்களித்து, உடனுக்குடனேயே வாக்கைக் காரியத்திலும் நிறைவேற்றிக் காட்டுகிறார்கள். இது லஞ்சம் தவிர வேறல்ல. இதை எதிர்க்கட்சி அபேட்சகர்கள் யாரேனும் செய்ய முடியுமா? இந்நிலையில் காங்கிரஸை எதிர்த்து எந்தக் கட்சி தனியாக நிற்க முடியும்? எதிர்க்க இயலாது என்பதால் அக்கிரமத்தைத் தன்னிச்சையாக விடத்தான் முடியுமா? அப்படி விடக்கூடாது என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து காங்கிரஸை எதிர்த்தன. இதற்காக எதிர்க்கட்சிகளிடையே ஏதோ பெருந்த பேச்சு வார்த்தைகளோ, விவாதங்களோ நடைபெறவில்லை. காங்கிரஸின் ஊழல் நிர்வாகம் ஒன்றே அவை எல்லாவற்றையும் எந்த ஷரத்துமில்லாமல் ஒன்று சேர்த்து வைத்தது.

எதிர்க் கட்சிகளிடையே இயற்கையாக உந்திக்கொண்டு வெளிப்பட்ட இந்த ஒற்றுமை ஒன்றே அவை கூட்டுச் சேர்ந்தது எவ்வளவு நியாயமானது என்பதற்கு அத்தாட்சி

யாகும். ஆட்சிபீடத்தில் உள்ளவர்களின் அடிவருடும் காங்கிரஸின் இரண்டாம் தரத் தலைவர்கள்தான் இதைப் புரிந்து கொள்ளாதது போல் பேசுகிறார்கள் என்றால் பிரதமர் கூட அதே மட்டத்திலிருந்து பேசுவது வியப்பாக இருக்கிறது. தமது உண்மையான அந்தஸ்துக்குப் பிரதமர் உயர வேண்டும். பிரச்னையை ஆழ்ந்து நோக்கிப் புரிந்து கொள்ள வேண்டும். தமது கட்சிக்குப் பிடித்திருக்கிற வியாதி இன்னதென்று பகுத்துப் பார்த்து அதற்கு மருந்து தேட வேண்டும். காங்கிரஸ் கட்சியானது தன்னை ஜனநாயக அமைப்புக்கு உட்பட்ட ஒரு கட்சி என்று வர்ணித்துக் கொள்கிற வரையில் தேர்தல்களில் சர்வாதிகார அக்கிரமங்களைப் பயன்படுத்திக் கொள்வதை ஒரு குற்றம் என்று ஒப்புக்கொண்டே யாகவேண்டும்.

யதேச்சாதிகார காங்கிரஸ் விரித்துள்ள அச்ச வலையிலிருந்தும், அது வீசுகிற மோக பாசத்திலிருந்தும் மக்களை விடுவித்த எதிர்க் கட்சிகள் தங்கள் வெற்றியைச் சாதனையாகக் கருதி மகிழ்வது முற்றிலும் நியாயமே. மக்கள் காங்கிரஸுக்கு எதிராகத் தொடர்ந்து மூன்று தொகுதிகளில் வாக்களித்தார்களென்றால் அது அரசாங்கத்தின் மீது நாடு முழுவதுமே கொண்டுள்ள வெறுப்புக்கு அடையாளம் என்று கருதுவது முற்றிலும் சரியே. அப்படிச் சொல்பவர்களைப் 'போதை ஏறியவர்கள்' என்று பிரதமர் சொல்வது அரசியல் அறிவு இல்லாதவர்களின் வெற்றுப் பேச்சுக்குச் சமானமேயாகும். பதினாண்டுகளாகப் பதவியில் இருப்பவர்களுக்குப் போதை தலைக்கேறியிருக்கிறதா, எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஏறியிருக்கிறதா என்பதைப் பொதுமக்கள் அறிவார்கள்.

* * *

ஆட்சி மொழிப் பிரச்னையை அற்பமான விஷயம் போலப் பேசியிருக்கிறார் பிரதமர். ராஜாஜி எழுதியதுபோல, அது ஓர் அல்பமான விஷயம் என்றால் நேருஜி இந்தச் சமயத்தில் தமது சர்க்காரைக் கொண்டு இந்தப் பிரச்னையை எழுப்பியே யிருக்க வேண்டாம். உபயோக மில்லாத தமது 'வாக்குறுதி'யை மீண்டும் நேருஜி அளித்திருப்பது பரிகாசத்துக்குரியது. 'ஆங்கிலம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பது தேசிய விரோதமானது' என்று ஹிந்தி வெறியர்கள் கூறுவதைப் பிரதமரும் கிளிப் பிள்ளை போலப் பேசுகிறார். இவ்விஷயத்தில் அவர் எவ்வளவு காரமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவருடைய உள்ளம் நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஒருவர் இந்த ரீதியில் பேச வேண்டியிருக்கிறது என்பதிலிருந்தே ஹிந்திப் பித்தர்கள் தாங்கள் மற்றவர்களுக்கு மேம்பட்ட முதல்தரப் பிரஜைகளாக இருப்பதற்கு எவ்வளவு பேராசை பிடித்திருக்கிறார்கள் என்பதை நாம் அனுமானிக்கலாம். பிரதமரின் ஆங்கில வெறுப்பு ஒரு வேஷம். ஆனால் ஹிந்தி மக்களின் பேராசை அவர்களின் உண்மையான உணர்ச்சியாகும். ஹிந்தி பேசாத மக்களுக்கும் அதை விடத் தீவிரமான எதிர்ப்பு உணர்ச்சி உண்டு. ஹிந்தி மக்களின் உணர்ச்சி நீதியில் பிறக்காதது; நம்முடைய உணர்ச்சியோ நீதியில் பிறந்தது. இதையெல்லாம் தமது மனமாரத் தீர்க்கமாக அலசிப் பார்த்திருக்கவேண்டிய பிரதமர், பிரச்னையை வேறு திசையில் மோசமாகத் திருப்பப் பார்க்கிறார்!

ஹிந்தி மக்களின் எந்த நியாயமான உரிமைகளையும் நாம் மதிக்கத் தயாராக இருக்கிறோம். ஹிந்தி மொழி ஒன்றே பாரதத்தின் **தேசிய** மொழி என்று நாமகரணம் சூட்டுவதிலும் நமக்கு ஆட்சேபனை இல்லை. இதனால் அவர்களுடைய ஆணவமும், பேராசை உணர்வும் திருப்தி பெறும் என்றால் அவ்வாறு வேண்டுமானாலும் நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் ஹிந்தியை **ஆட்சி** மொழியாக்கிப் பிரதி தினமும் மக்கள் புரிகிற அலுவல்களில் தென்னாட்டவரையெல்லாம் வடநாட்டினரைவிடப் பிரதிகூல நிலையில் தள்ளுகிற சட்டத்தை நாம் ஏற்கவே இயலாது. ஆனபடியால், பிரதமர் 'ஆங்கிலம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பதைச் சகிக்க முடியவில்லை' என்று கூறினாலும், ஆங்கிலத்தை நிரந்தரமாக்க நாம் போராடத்தான் வேண்டும்.

ஹிந்திப் பித்தர்களின் அபிமானம் போய்விடுமோ என்பதற்காகப் பிரதமர் தமது அந்தரங்கமான நீதி உணர்ச்சியைக் கைவிடக் கூடாது. அவர் தைரியமாக நியாயத்தை வற்புறுத்திப் பேசினால் ஹிந்தி பேசுகிறவர்கள் அதற்குக் கட்டுப்படுவார்கள். தேச ஐக்கியத்துக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைக் கருதி அவர்கள் நியாயத்துக்கு உடன்படுவார்கள். நாலைந்து ராஜ்யங்களை இணைக்கும் ஒரு கதம்ப மொழியை நாடு முழுவதும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது தேச பக்தியோ நேர்மையோ ஆகாது. ஹிந்தி பேசாதவர்களின் நியாயமான ஆட்சேபணையை நிர்ப்பந்தத்தின் மூலம் தகர்த்துவிடலாம் என்று எண்ணுவதைவிட, நீதிக்கும் தேச ஐக்கியத்துக்கும் பணிந்து கொடுப்பதே ஹிந்தி மக்களின் கடமையாகும். இந்தக் கடமையைப் பிரதமர் அவர்கள் உணர வேண்டும்.

என்ன சேதி?

இன்னிசைக்குப் பொன் விழா


சங்கீத ரத்னகர சங்கீத கலாநிதி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் அவர்கள் மேடைக் கச்சேரி செய்யத் தொடங்கி ஐம்பதாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அரை நூற்றாண்டு காலமாக ஒருவர் குன்றாப் புகழுடன் கச்சேரி செய்து வருவது கர்நாடக சங்கீத சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். ஸ்ரீ அய்யங்காருக்கு இசை உலகம் தனது வணக்கத்தைச் செலுத்துகிறது. நமது வணக்கங்களையும் அவருக்குத் தெரிவிக்குமுகமாக இவ்விதழ் மேலட்டையில் அவரது உருவப் படத்தை வெளியிடுகிறோம். இவ்விதழிலேயே, ஒரு மகா வித்வானும் ஒரு ரஸிகப் பிரமுகரும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் இரு கட்டுரைகளைப் பிரசுரித்து மகிழ்கிறோம்.

அரியக்குடி அவர்களின் சங்கீத வாழ்வுக்குச் சிறப்பான முறையில் பொன் விழாக் கொண்டாட, முன்னாள் சென்னை உயர் நீதிமன்றப் பிரதம நீதிபதி ஸ்ரீ பி.வி. ராஜமன்னார் தலைமையில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலேயே இந்த வைபவம் நடந்தேறும். பெரம்பூர் சங்கீத சபையினரும் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யர்களும் முன்னின்று எடுத்துக்கொண்டுள்ள நன்முயற்சி இது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பிரபலஸ்தர்கள் இவ்விழாக் குழுவில் பங்கு பற்றுகிறார்கள். ராஜாஜி, டாக்டர் ஸி. பி., காமராஜ நாடார், ஸி. சுப்பிரமணியம், பக்தவத்ஸலம், ஆர். வெங்கடராமன், ராமநாதபுரம் ராஜா முதலிய அரசியல் பிரமுகர்களும், ராஜா ஸர் முத்தையா செட்டியார், எஸ். அனந்தராமகிருஷ்ணன், டி. எஸ். ராஜம், வி. எஸ். தியாகராஜ முதலியார், வி. டி. ஸ்வாமி முதலிய தொழில் துறை முக்கியஸ்தர்களும், வி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டி. எல். வெங்கடராமய்யர், பிரதம நீதிபதி எஸ். ராமச்சந்திரய்யர், எஸ். வெங்கடேசுவரன், வி. வி. நரசிம்மன், டாக்டர் நாராயண மேனன் முதலிய உயர் உத்தியோகஸ்தர்களும் பாபநாசம் சிவன், ருக்மிணி தேவி, பேராசிரியர் சாம்பமூர்த்தி, டாக்டர் வே. ராகவன், பேராசிரியர் ஸ்ரீநிவாசன் ஆகிய கலைப் பெருமக்களும், முசிரி, சித்தூர், செம்மை, செம்மங்குடி, பூதலூர், ஆலத்தூர், ஜி. என். பி., மதுரை மணி, தேசிகர், துவாரம், சௌடையா, பாலக்காடு மணி, எம். எஸ்., டி. கே. பி., எம். எல். வி. முதலிய இசை விற்பன்னர்களும், ஜி. நரசிம்மன், எஸ். எஸ். வாஸன், என். ராமரத்தினம், எஸ். ஏ.பி. அண்ணாமலை, சதாசிவம் உள்ளிட்ட பத்திராதிபர்களுமாக இதுவரை நாம் கண்டிராதபடி ஒரு பெரும் குழாம் ஸ்ரீ அய்யங்காரின் பாராட்டு வைபவத்தில் பெருமையுடன் கலந்து கொள்கிறது. இதிலிருந்தே அவர் நம் நாட்டின் சகல மக்களுடைய மதிப்பையும் அன்பையும் எவ்வளவுக்குப் பெற்றிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதே சீரும் சிறப்புமாக அவர் மேலும் பல ஆண்டுகள் இசைத் தொண்டு புரியக் கலைவாணி அருள் புரிவாளாக!

ஜனசங்கம் காட்டிய பாதை

அலகாபாத்தில் கூடிய ஜனசங்கக் கட்சியின் நிர்வாகக்குழு தேசத்திலுள்ள எதிர்க் கட்சிகளுடன் இணைந்து ஆளும் கட்சிக்கு ஒருமுகமான எதிர்ப்பு நல்குவதில் தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

தேசத்திலுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து காங்கிரசுக்கு ஒருமுகமான எதிர்ப்பு நல்கினால்தான் ஆளும் கட்சியை அசைக்க முடியும் என்று ராஜாஜி நீண்ட நாட்களாகச் சொல்லி வந்திருக்கிறார். அதற்காகவே சுதந்திரக் கட்சியின் 21 அம்ச அடிப்படைக் கொள்கைகளை எந்த எதிர்க் கட்சியும் ஒப்புக்கொள்ளத் தகுந்த வகையில் அமைத்தார். அத்துடன் இந்தப் பரந்த பாரத பூமியில் பிரதேசத்துக்குப் பிரதேசம் பிரத்தியேகமான பிரச்னைகள் எழலாம்; அவற்றைச் சமாளிக்கத் தனிக் கட்சியோ கொள்கையோ எழலாம் என்ற எண்ணத்தில் 21 அம்சத்தை ஒப்புக்கொண்டு வேறு கொள்கை கொண்டவர்களும் தங்கள்



சொந்தக் கருத்துடன் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து பணியாற்றலாம்; அவர்களுக்குப் பூரண சுதந்திரமும் உரிமையும் உண்டு என்பதை வற்புறுத்தும் விதியையும் வகுத்தார். இந்த விதியைப் பார்த்தவர்கள் ஜனநாயக உலகத்துக்கே ராஜாஜி ஓர் அற்புத வழியைக் காட்டினார் என்று பாராட்டி வரவேற்றார்கள். நம் நாட்டில் உள்ள எதிர்க் கட்சிகள் இதனைப் போதிய அளவு உணர்ந்து பயன்படுத்திக் கொள்ளவில்லை. இருப்பினும், ராஜாஜி தேர்தல் காலத்திலாவது எதிர்க்கட்சிகள் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்தும், உதவியும் ஆளும் கட்சிக்குத் தோல்வியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த யோசனையைக் கடைப்பிடித்ததின் விளைவாகச் சமீபத்திய உபதேர்தல்களில் காங்கிரசுக்குத் தோல்வி கிடைத்தது.

இந்த நல்ல வேளையில் சுப சூசகமாக எதிர்க் கட்சிகள் எல்லாம் இணைய வேண்டும் என்று ஜனசங்கம் செய்துள்ள தீர்மானத்தை வரவேற்கிறோம். ஜனசங்கம் காட்டிய பாதையைப் பின்பற்றி மற்றக் கட்சிகளும் இணைந்தால் இந்த நாட்டில் நல்ல ஜனநாயகம் உருவாகும்.

மந்திரிகள் ராஜிநாமா

லஞ்ச ஊழலில் மாட்டிக் கொண்ட ஸ்ரீ மாளவியா அவர்களும், தேர்தல் ஊழலில் கட்சியின் கைப்பாவையாகச் செய்த ஹபீஸ் முகமது இப்ராஹிம் அவர்களும் தங்கள் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துள்ளனர். தனி மனிதர்கள் என்ற முறையில் மந்திரிகளைப் பற்றி நம் மதிப்பீடு எப்படியாயினும், அவர்கள் பதவியில் உள்ளவரை பொதுமக்களின் நியாயமான அதிருப்திக்கும் சந்தேகத்துக்கும் பணிய வேண்டும் என்பதுதான் ஜனநாயக தர்மம். மக்களின் அதிருப்தியை இவ்வளவு காலம் வளர்க்காமல் முன்பே இம்முடிவை எடுத்திருந்தால் கௌரவமாக இருந்திருக்கும்.

இரண்டு மந்திரிகள் வெளியேறி விட்டதால் ஆள்கிற கட்சி பரிசுத்தம் பெற்றுவிடாது. எதையும் பகிரங்கமாகச் செய்கிற பரிசுத்தம் காங்கிரசுக்கு இப்போதைக்கு ஏற்படாது என்பதைப் பிரதமரவர்கள் ஸ்ரீ தாஸின் விசாரணை முடிவை மூடி மறைப்பதிலிருந்தே கணிக்கலாம். ஸுப்ரீம் கோர்ட்டு முக்கிய நீதிபதி தாம் இந்த விசாரணை செய்ய ஒப்புக் கொண்ட போதே இந்த நிபந்தனையை வற்புறுத்தினார் என்று நேரு அவர்கள் சமாதானம் சொல்லுகிறார். அத்தகைய தவறான நிபந்தனையை வற்புறுத்தாத வேறு ஒருவரை விசாரிக்கச் செய்திருக்க வேண்டுமே ஒழிய அந்த நிபந்தனைக்குத் தாமும் ஒப்பியது பெரிய தவறு.

அபய வாக்குக்கு அபாயம்!

ஹிந்தித் திணிப்பைப் பற்றித் திரு காமராஜ் சென்னை கடற்கரையிலும் வேறு பல இடங்களிலும் தமிழர்களுக்கு அபயப் பிரதானம் அளித்தார். "இப்பொழுது ஒரு அபாயமும் இல்லை. ஹிந்தி திணிக்கப்படமாட்டாது. நான் பார்த்துக் கொள்கிறேன். ஹிந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்த படித்தவர்களின் நலனுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்வேன்" என்றெல்லாம் வீரமுழக்கம் செய்தார்.

ஆனால் மதுரையில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் சென்ற ஜூன் மாதம் 3-ம் தேதி முதன் மந்திரி பேசியபோது,

> "இப்போதிலிருந்தே ஹிந்தியைப் படியுங்கள். படிக்காவிடில், பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஆங்கிலத்தைப் படிக்காதவர் எப்படிச் சிரமப்பட்டார்களோ அப்படிச் சிரமப்பட வேண்டியிருக்கும்!"

என்று போதித்து யோசனை சொல்லியிருக்கிறார். கோட்டையை விட்டுக் கொடுக்கிறார் என்பதில் இனி ஐயமில்லை.

தமிழகத்தில் நேருஜி

சமீபத்தில் தமிழகத்துக்கு நேருஜி விஜயம் செய்த காட்சிகள் சிலவற்றை வலப்பக்கத்தில் காணலாம். 1. பாரதப் பிரதமர் நேருஜி சென்னை நகரசபையில் தீரர் சத்தியமூர்த்தியின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். ஸ்ரீமதி எம். எஸ். பிரார்த்தனைக் கீதம் பாட விழா ஆரம்பமாயிற்று. 2. திரு ஆர்யா படைத்த உருவச் சிலையைக் கண்டு மகிழ்கிறார் பாரதப் பிரதமர். மேயர் குசேலர் பெருமிதத்துடன் காணப்படுகிறார். 3. சென்னை ராஜபவனில் கவர்னர் அளித்த விருந்தில் பிரதமர் ராஜாஜியோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். 4, 7. திருவொற்றியூர் ரப்பர் தொழிற்சாலையில் நேருஜி ரப்பர் ஆராய்ச்சிக் கழகத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். 5. சென்னை நகரசபையில் வரவேற்பு. 6. பாண்டிச்சேரி நகரசபை வரவேற்பில் மேயர் குபேர், நாராயணர் உருவம் பதித்த வெள்ளிப் பேழையை நேருஜிக்குப் பரிசளித்தார். 8. தெப்பவெளியில் காங்கிரஸ்களைப் பார்வையிடுகிறார் பிரதமர்.


1
2
3
4
5
6
7
8



11

எங்கும் எல்லாவற்றிலும் என்றும் நின்று அருளும் பரம்பொருள் இந்த மனித உள்ளத்துக்குள்ளேயே கோயில் கொண்டு நிற்கிறது என்பதைப் பாடுகிறார் ஆழ்வார். தம்முடைய நெஞ்சை நோக்கிப் பாடுகிறார் :

> உளன்கண்டாய் நல்நெஞ்சே
> உத்தமன் என்றும்
> உளன்கண்டாய்—

[உளன் கண்டாய் – இருக்கிறான், சந்தேகமில்லை. என்றும் – நிரந்தரமாக, எக்காலத்திலும்.]

'உளன் கண்டாய்' என்று சொல்வது, இறைவன் இல்லை என்று சொல்லுகிற நாஸ்திகர்களைப் பார்த்துப் பேசுகிற வார்த்தையில்லை. பயமோ தளர்ச்சியோ வேண்டாம் என்றும், அருள் செய்யப் புருஷோத்தமன் இருக்கிறான் என்றும் தம்முடைய உள்ளத்தை நோக்கிச் சொல்லுகிறார்!

நெஞ்சமே! சர்வேசுவரன் இருக்கிறான், சந்தேகம் வேண்டாம். அவன் என்றும் அண்மையிலேயே இருக்கிறான்.

> உளன்கண்டாய் நன்னெஞ்சே
> உத்தமன் என்றும்
> உளன்கண்டாய் உள்ளுவார்
> உள்ளத்து—உளன்கண்டாய்

[உள்ளுவார் – தியானிப்பவர்களுடைய. உள்ளத்து – இதயத்திலே. உளன் கண்டாய் – அவன் இருக்கிறான்.]

தன்னைத் தியானித்தால் போதும், பக்தர்களுடைய உள்ளத்தில் அவன் இருக்கிறான்.

> வெள்ளத்தின் உள்ளானும்
> வேங்கடத்து மேயானும்
> உள்ளத்தின் உள்ளான்என்று
> ஓர்

[வெள்ளத்தின் உள்ளானும் – திருப்பாற்கடலிலே சயனித்துள்ள நாராயணனும். வேங்கடத்து மேயானும் – திருவேங்கட மலையிலே பொருந்தி விருப்பவனுமாகிய வேங்கடேசன். உள்ளத்தின் உள்ளான் – இதயத்துக்குள் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கிறான். என்று ஓர் – என்பதை மறவாமல் நினைவிலே கொள்ளுவாயாக!]

பாற்கடலிலும் வேங்கடமலையிலும் காட்சி தருகிற மூர்த்தி, மனித உள்ளத்திற்குள் உணர்வு நிலையிலே நின்று அருள்கிறான். எந்தத் துக்கமோ கஷ்டமோ ஏற்பட்டாலும், அவன் அருளைத் தேடுவாயாக, நிச்சயமாகப் பெறுவாய். பாற்கடலுக்கும் போக வேண்டியதில்லை. வேங்கட மலையும் ஏற வேண்டியதில்லை. கொஞ்சம் தியானித்தாயானால் உள்ளத்திற்குள்ளேயே காண்பாய் என்று சொல்கிறார்.

நெஞ்சை முன்னிலைப் படுத்திப் பேசும்போது 'உள்ளுவார்' என்று படர்க்கையில் வைத்துச் சொன்னதன் கருத்து என்னவென்றால், தியானிப்பவர்களின் தகுதி எதுவாக இருந்தாலும், தியானித்த மாத்திரத்தில் பகவான் அருள்வான் என்பதைக் காட்டுவதற்காக!

> உளன்கண்டாய் நன்னெஞ்சே
> உத்தமன் என்றும்
> உளன்கண்டாய் உள்ளுவார்
> உள்ளத்து—உளன்கண்டாய்
> வெள்ளத்தின் உள்ளானும்
> வேங்கடத்து மேயானும்
> உள்ளத்தின் உள்ளான்என்று
> ஓர்!

இந்தப் பாடலோடு ஒப்பிட்டு அனுபவிக்க வேண்டிய வேறு பாடல்கள் இரண்டு பேயாரும் திருமழிசையாரும் பாடியிருக்கிறார்கள். இந்த மூன்று பாடல்களிலும் முதல் இரண்டு அடிகளும் அப்படியே ஒன்று போலவே இருக்கின்றன. மூன்றாவது நான்காவது அடிகளே மாறியுள்ளன. பேயாழ்வார் பாடல் வருமாறு :

உளன்கண்டாய் நன்னெஞ்சே
உத்தமன் என்றும்
உளன்கண்டாய் உள்ளுவார்
உள்ளத்து — உளன்கண்டாய்
விண்ஒடுங்கக் கோடுஉயரும்
வீங்குஅருவி வேங்கடத்தான்
மண்ஒடுங்கத் தான்அளந்த
மன் !

[விண்ஒடுங்க-வானமே மறையும்படியாக. கோடு உயரும் - சிகரம் உயர்ந்து நிற்கும். வீங்கு அருவி - பொங்கி விழும் அருவிகளை உடைய. வேங்கடத்தான் - திருவேங்கட மலையிலே யுள்ள சுவாமி. மண் ஒடுங்க - பூமி முழுதும் அடங்கும்படியாக. தான் அளந்த-தன் திருவடிகளால் அளந்த. மன் - திருவிக்கிரம அவதாரம் எடுத்த எம்பெருமான்.]

இனி, திருமழிசை ஆழ்வார் பாடல்:

உளன்கண்டாய் நன்னெஞ்சே
உத்தமன் என்றும்
உளன்கண்டாய் உள்ளுவார்
உள்ளத்து — உளன்கண்டாய்
தன்ஒப்பான் தானாய்
உளன்காண், தமியேற்கும்
என்ஒப்பார்க்கு ஈசன்
இமை !

[அவன்தான் அவனுக்கு நிகர். வேறொருவர் இல்லை! தன் ஒப்பான் - தன்னையே ஒப்பாக உடையவன். அதாவது தனக்கு ஒப்பாக வேறொன்று இல்லாதவன். தானாய் உளன்-நிராலம்பமாய் நிற்கிறவன். அதாவது. தனக்குத்தானே வேறு பற்றின்றி நிற்பவன். அப்படிப்பட்டவன், தமியேற்கும்-அடியேனுக்கும். என் ஒப்பார்க்கு-என்னைப் போன்ற பேதையர்களுக்கும். ஈசன் இமை-அவனே காவலன் என்று. உறுதியோடு இருப்பாயாக! இமை-உணர்ந்து நிம்மதியாக இரு!]

உளன்கண்டாய் நன்னெஞ்சே
உத்தமன் என்றும்
உளன்கண்டாய் உள்ளுவார்
உள்ளத்து — உளன்கண்டாய்
தன்ஒப்பான் தானாய்
உளன்காண், தமியேற்கும்
என்ஒப்பார்க்கு ஈசன்
இமை !

ஆட்சிமொழி — கருத்தரங்கு

[ஆட்சி மொழிச் சட்டம் இயற்றப்பட்டு விட்டாலும் பிரச்னை தீர்ந்து விடவில்லை. பரிகாரம் தேட வேண்டியது அவசியம். 'இந்தியாவின் ஆட்சிமொழி: ஆங்கிலமா? ஹிந்தியா?' என்ற கருத்தரங்கு இந்த இதழில் ஆரம்பமாகிறது. நான்கு அறிஞர்களின் கட்டுரைகள் வெளியாகின்றன. தொடர்ந்து ஐந்தாறு வாரங்களுக்குப் பல அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து இவ் விஷயத்தை ஆராய்வார்கள். இவற்றிலிருந்து மக்களிடையே இப்போதுள்ள உறக்கம் நீங்கி விழிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.
— ஆசிரியர்]




பட்சபாதச் சட்டம்

ராஜாஜி

எல்லா மக்களும் சம வாய்ப்புக்கள் பெற்றிருக்க வேண்டும், ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது என்பதுதான் நம்மை ஆள்கிற காங்கிரஸ் கூட்டத்தின் சோஷலிஸ தாரக மந்திரம். ஆனால் ஆட்சி மொழி விஷயத்தில் மட்டும் இதற்கு முழுவதும் நேர்மாறாக, இதுவரையில் இல்லாத பெரும் ஏற்றத் தாழ்வுகளைப் புதிதாக உண்டாக்கியிருக்கிறார்கள். ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவதால் தென் நாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்களை ஒரே வீச்சில் ஹிந்தி மொழிக்காரர்களுக்குச் சமமான வாய்ப்பில்லாமல் செய்திருக்கிறார்கள். நம்முடைய சோஷலிஸ சர்க்காரால் பணக்காரர்கள் மேலும் பணக்காரராவதையும், ஏழைகள் ஏழைகளாகவே இருப்பதையும் தடுக்க முடியவில்லை என்றால் இதுவரை இல்லாத ஏற்றத் தாழ்வுகளையாவது சிருஷ்டிக்காமல் இருக்கக் கூடாதா?

சமத்துவம் நாசமாகிறது



'ஹிந்தி நமது மக்களின் மொழி; சர்க்கார் மொழியும் மக்களின் மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும்' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் ஹிந்தி எந்த மக்களின் மொழி? நாடு முழுவதும் உள்ள மக்களின் மொழியா அது? இல்லை. அது தென் இந்தியாவில் உள்ள பல கோடி மக்களின் மொழி அல்லவே அல்ல. தென் இந்தியாவில் உள்ள படித்தவர்-படிக்காதவர் யாருமே அந்த மொழியைப் பேசவில்லை; புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். வட இந்தியாவில் அடுத்தடுத்து உள்ள நாலு ராஜ்யங்களின் மொழிதான் அது. சத வீதக் கணக்குகள் எப்படி யானாலும் ஹிந்தி பேசுவோர் நாடு முழுவதும் பரவியிருக்கவில்லை. ஒரே பிரதேசத்தில்தான் குவிந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாஷையை ஆட்சி மொழியாக்குவதால் நாட்டின் ஒரு பகுதியில் உள்ள மக்கள் மற்றப் பகுதிகளிலுள்ளவர்களைவிடப் பெருத்த அநுகூல நிலையை அடைவார்கள். ஆங்கிலம் அறிந்தவர்களைவிட ஹிந்தி அறிந்தவர்கள் அதிகமாக இருக்கலாம். ஆனால் ஆங்கிலம் நாடு முழுதும் சமமாகப் பரவியிருக்கிறது. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதால் எந்தப் பகுதி மக்களும் மற்றவர்களைவிட அநுகூல நிலையிலோ, பிரதிகூல நிலையிலோ இல்லை. இப்போது அரசாங்க விவகாரங்களில் எல்லாரும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் சம வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். ஹிந்தித் திணிப்பின் மூலம் இந்தச் சமத்துவத்தை நாசமாக்கப் பார்க்கிறார்கள்.

பயன் கருதிப் படிப்பது ஆங்கிலம்...



'முன்பு ஆங்கிலத்தை நிர்ப்பந்தத்தின் மேல் படிக்கவில்லையா? அதே போல் இப்போது ஹிந்தியைப் படிப்பதில் சிரமம் என்ன?' என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆங்கில ஆட்சியாளரின் நிர்ப்பந்த முறை பற்றி இப்போது பேசுவதில் பொருள் இல்லை. அவர்களுடைய ஆட்சி முடிந்துபோய், அவர்கள் இந்நாட்டை விட்டுப் போயாகி விட்டது. ஆங்கில பாஷை மட்டும் இங்கு தங்கியிருக்கிறது. இன்று ஆங்கிலத்தை அதன் பயனைக் கருதித்தான் படிக்கிறோமே அன்றிப் பலாத்காரத்துக்கு அடங்கிப் படிக்கவில்லை.

ஹிந்தி விஷயம் வேறு. ஹிந்தி மொழி பேசுகிறவர்களும், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களும் ஒரு மெஜாரிட்டியாகச் சேர்ந்து

கொண்டு, தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை வைத்துப் பலாத்காரத்தினால் அந்த மொழியை நம்மேல் திணிக்கிறார்கள். ஆங்கிலேய ஆட்சியின் போது ஆட்சியாளர்கள் மேலும், அவர்களுடைய மொழியின் மேலும் ஏற்பட்ட வெறுப்பு உணர்ச்சிதான் இப்போது மீண்டும் நம்முடைய நிகழ்கால ஹிந்தி ஆட்சியாளர் மேலும் ஏற்படும்.

நம் நாட்டின் மெஜாரிட்டியினர் மீது துவேஷத்தை உண்டாக்குவதற்கு ஹிந்தி மொழித் திணிப்பைப் போல் வேறெதுவும் கிடையாது. இன்று எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஆட்சி மொழியை ஒரு சாராருக்கு விசேஷச் சலுகை தருகிற முறையில் மாற்றி, செயற்கையாக ஓர் ஏற்றத் தாழ்வை உண்டாக்குவது பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லையில்லாத இதய தாபத்தை உண்டாக்கி அவர்களைத் தீவிரமாகத் துன்புறுத்தும். தங்களைக் கீழ்த்தரக் குடிமக்களாக்குகிற ஆட்சி மொழிப் பட்சபாதச் சட்டம் மக்களைக் கொதிப்படையச் செய்யும். துவேஷம் தலைதூக்கும். தேச ஐக்கியத்துக்கு ஆபத்து ஏற்படும். இதற்கு இடமளிப்பது நீதியா? புத்திசாலித்தனமா?


....திணிக்கப் படுவது ஹிந்தி

ஒற்றுமையை வளர்க்கும் ஒரே மொழி

ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன்



[ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் கல்வித் துறையில் நீண்ட காலம் ஈடுபட்டுள்ளவர். எதிராஜ் பெண்கள் கல்லூரியின் தலைவியாக முன்னாளில் பணியாற்றியவர். அமெரிக்கத் தகவல் நிலையத்தில் பணிபுரியும் ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் சமீப ஆண்டுகளில் ஹிந்தி மொழி அடைந்துள்ள வளர்ச்சி பற்றித் திருப்திப்பட்டாலும் ஆங்கிலத்தின் அவசியத்தை ஒப்புக்கொண்டு, ஆங்கிலத்தையும் நமது நாட்டு தேசிய மொழிகளின் ஒன்றாகச் சேர்க்க வேண்டும்; அதற்குச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிறார்.]

ஆட்சி மொழி மசோதாவை அரசியல் கோணத்திலிருந்து நான் அணுகப் போவதில்லை. கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கண் கொண்டே ஆராய்கிறேன்.

ஹிந்தி பேசாத மக்களுக்கு எதிர்காலம் ஆபத்துக்கள் நிறைந்ததாகத்தான் இருக்கப் போகிறது என்பதை யாருமே மறுக்க முடியாது. அடுத்த தலைமுறையினருக்கே பயத்தை உண்டாக்கும்படி சில அறிவிப்புக்கள் அமைந்துள்ளன. தேசிய ஒருமைப்பாட்டுக்கு மொழி வேற்றுமைகள் முக்கியமல்ல என்று கருதினாலும் இவ்வேற்றுமைகளை வளர விட்டால், காலப் போக்கில் இவை ஒரு பெரும் பிரச்னையாகவே ஆகும். ஒவ்வொரு பிரஜையின் உரிமைகளை அவர் எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், பாதுகாத்தே தீர வேண்டும். இதை எல்லோரும் நன்கு உணர வேண்டும்.

அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கப்பட்டபோது நாட்டு மக்களின் மன ஒற்றுமையை வளர்க்க ஆங்கில மொழியைத்தான் எல்லாரும் கையாண்டனர் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகில் பரவலாகப் பொதிந்து கிடந்த பலாத்கார சக்திகளை சத்தியாக்கிரஹம், அஹிம்ஸை முதலிய உயர் கருத்துக்களைக் கொண்டு சாத்விக முறைக்கு மாற்றிய காந்திஜி தமது வலிமையுள்ள கருவியாக ஆங்கிலத்தைத்தான் மேற்கொண்டார். நாட்டு மக்களின் ஒரு பகுதியினராகிய வங்காளியர்கள் மட்டுமின்றி நாட்டின் மற்றப் பகுதியினரும் உலக மக்களும் தமது உயர் கவிதைகளையும் கற்பனைகளையும் படித்துச் சுவைத்து இன்புற வேண்டும் என்று கவி டாகுர் தாமே தமது இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அளித்தார். தேசமக்களின் ஒரு பகுதியினரான ஆங்கிலோ இந்தியர்களும், இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட பிற நாட்டவரும் தமது தாய்மொழியாக ஆங்கிலத்தைத்தான் போற்றுகின்றனர். தங்களின் தாய்மொழி உரிமையை அவர்களுக்கு அளித்தல் அவசியம்; ஆகவே, முதல் நடவடிக்கையாக, இந்திய அரசியல் சட்டத்தில் மொழி சம்பந்தப்பட்ட ஷரத்துக்களைத் திருத்தி, நாட்டின் தேசிய மொழிகளில் ஆங்கிலமும் ஒன்றாக நிரந்தரமாக இருப்பதற்கு வகை செய்ய வேண்டும்.

சென்ற பதினைந்தாண்டுகளில் பிராந்திய மொழிகள் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றன. அவற்றுடன் ஹிந்தியும்கூட வளர்ந்து




காந்தியும் தாகூரும் கையாண்ட மொழி

வந்துள்ளது. எனினும் அதற்கு இலக்கிய வளம் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். உயர் கல்வி ஸ்தாபனங்களிலும், இலக்கியத் துறைகளிலும் ஹிந்தி மொழி சிறிதும் பயன்படாது. விஞ்ஞானம், பௌதிக இயல் சம்பந்தப்பட்ட ஆங்கிலப் புத்தகங்கள் அனைத்தையும் ஹிந்தி மொழியில் பெயர்த்தளிப்பதாக வைத்துக் கொண்டாலும் (இந்த முயற்சியே கைகூடாதது என்று நிபுணர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்)

முன்னேற்றத்துக்குத் தடை

நமது மக்களின் முன்னேற்றம் நிச்சயமாகப் பின்தங்கித்தான் செல்லும். நம்முடைய கற்பனைகளும், சிந்தனைகளும் வளம் பெற முடியாது. ஆங்கிலத்தை ஹையர் எலிமெண்டரி படிப்பின் ஆரம்ப கட்டத்திலும் நடுத்தரப் பள்ளி வகுப்புகளிலிருந்தும் ஏழு, அல்லது எட்டு வயதுக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்துப் பழக்கி விட்டால், அவர்கள் கல்லூரிப் படிப்பு நிலைக்கு வரும் போது ஆங்கிலமொழியில் நல்ல வாகவம் பெற்று விடுவர். இப்போது இப்படித்தான் நடந்து வருகிறது. அப்படிச் செய்வதுதான் விரும்பத் தக்கது. ஆங்கிலம் இல்லாமல், ஆங்கிலத்தில் நல்ல அறிவு இல்லாமல், நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களும் இதர வருங்காலத் திட்டங்களும் சிதறிப் போகும். நமது உள்நாட்டு நிபுணர்களைக் கொண்டு, அவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்க முடியாது. அயல்நாடுகளில் பயிற்சி பெற்று, கல்விபயின்று தேர்ந்தவர்களால்தான் முடியும். ஓரிரண்டு நாட்டினர், இதர நாடுகளின் சம்பந்தமின்றி, தமது சொந்தப் பண்பு, சொந்த மொழி, சொந்த சிந்தனைகளைக் கொண்டே முன்னேற்றமடையப் பரிசோதனைகளைச் செய்து பார்த்திருக்கின்றனர். இதில் அவர்கள் வெற்றி கண்டனரா என்பது சந்தேகமே. ஆனால் பாரத நாட்டைப் பொறுத்தமட்டில், உண்மை அறிவை உலகத்தில் எந்தப் பாகத்திலிருந்தும் நாம் வரவேற்கவே செய்கிறோம். இதுவே யுக்தமானது. இதை இப்படியே தொடர்ந்து செய்து வரவேண்டும். உயர் அறிவுக்கு இட்டுச் செல்லும் நெடுஞ்சாலையானது இரு பாதைகளை உடையது. அயல்நாடுகளிலிருந்து புதுப் புது நுட்பங்களும், விஞ்ஞான முன்னேற்றங்களும், புதுப் புது சிந்தனைகளும் ஓர்

இணைப்புப் பாலம்



இணைப்புப்பாலம் மூலம் நமக்குச் சதா கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. மற்றொன்றின் மூலம் நாம் நமது நாட்டின் பெருமைகளை — குறிப்பாக, தத்துவத் துறையிலும், கணிதத் துறையிலும், சுத்த விஞ்ஞானத்திலும், பஞ்ச சீலம், உலக சமாதானம் போன்ற கருத்துக்கள் மூலமும் — உலகினுக்கு அளித்து வருகிறோம். இப்படி வெளி உலகத்து அறிவுச் செல்வத்தை நாம் பெறுவது, நமது சிந்தனைச் செல்வத்தை வெளி உலகுக்கு அளிப்பது—என்ற இரண்டுமே ஆங்கில மொழி மூலம்தான் நடைபெறுகிறது. ஆங்கிலத்தின் மூலம்தான் சர்வதேச சிந்தனையின் ஒருமைப்பாடே ஜீவன் பெற்று வளர்கிறது.

மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண, சட்ட விரோதமான செயல்களான பகிஷ்காரம், சட்ட மன்றங்களிலிருந்து வெளி நடப்பு, மறியல் முதலியவற்றை உபயோகப்படுத்தக் கூடாது என்பதே என் கருத்து. ஏனெனில் இது அரசியல் பிரச்னை அல்ல என்பது என் கருத்து. தனி மனிதனுடைய பிரச்னையே ஆகும்.

உணர்ச்சி வேறு, உண்மை வேறு. இரண்டும் ஒன்றுக்கொன்று மாறு பட்டவை. பாரதப் பிரதமர் ''நம்முடைய சக்திகளைச் சின்ன விஷயமாகிய மொழிப் பிரச்னைச் சண்டையில் விரயமாக்கக் கூடாது'' என்று சொல்லுகிறார். உண்மைதான். ஆனால் அதை அவரே நடைமுறையில் செயல் படுத்தட்டுமே! நாட்டின் பிரதம மந்திரி என்ற முறையில் அவரும், நாட்டின் தலைவரும் யூனியன் அரசாங்கத்தின் பிரதிநிதியுமான ராஷ்டிரபதியும், ஹிந்தி தெரிந்தவர்களுக்கு மட்டும் உத்தியோகங்களிலும், பதவி உயர்வுகளிலும், இதர வகை முன்னேற்றங்களிலும், விசேஷச் சலுகைகள்

உறுதி கூறட்டும்

கொடுக்கப்பட மாட்டாது என்று உறுதி கூறட்டும். எல்லாப் பிரஜைகளும், எல்லா வகையிலும் சமமான வாய்ப்புப் பெறுவார்கள் என்றும், ஆங்கிலம் இதர தேசிய மொழிகளுடன் ஒன்றாக அங்கீகரிக்கப்படும் என்றும், எங்கெல்லாம் அம்மொழியின் உதவி தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆங்கிலம் நிர்வாக நடவடிக்கைகளில் கூட்டாகச் செயல்படும் என்றும் உறுதி கூறட்டும்.

கண்டனத்தைக் காட்டிலும் அநுதாபமான நடவடிக்கைகள் பயன்தரக் கூடியவை. ஹிந்தி மொழியைப் பரப்புவதற்குக் கூடப் பலாத்காரத்தைவிட உற்சாகம் அளிப்பதின் மூலம் செயலாற்றுவது நன்மைதரக் கூடும். எதிர்ப்பு எதையுமே ஸ்தம்பிக்கச் செய்து விடுகிறது. ஆட்சி மொழி மசோதா நிறைவேறி விட்டபடியால், இப்போது அதைத் தொடர்ந்து அரசியல் சட்டத்திலுள்ள மொழி சம்பந்தமான ஷரத்துக்கள் திருத்தப்பட வேண்டும். இதற்குப் பிரதமர், தமது சொந்த ஹோதாவிலன்றி, அதிகார பூர்வமாகத் தமது நல்லெண்ணத்தைத் தெரிவிக்கட்டும்.

இதைச் செய்வதற்கு உசிதமான காலமும், சமயமும் இப்போதுதான். இதைக் கைவிடக் கூடாது. கைவிட்டு விட்டால், மறுவாய்ப்புக் கிடைக்காமல் போகலாம். பிரதமர் இதைக் கவனிப்பாராக!

கேலிக் கூத்து

ஃப்ராங்க் அந்தோனி



[திரு ஃப்ராங்க் அந்தோனி மக்கட் சபை அங்கத்தினர். மக்களின் பிரதிநிதி என்ற முறையில் ஆங்கிலம், அரசாங்க மொழியாக இல்லாது போனால் என்னென்ன விளைவுகள் நேரலாம் என்பதை உணர்ந்து எடுத்துச் சொல்லுகிறார். ஆங்கிலோ இந்தியர்கள் சங்கத்தின் தலைவராக உயர்தொண்டாற்றி வருபவர். ஆட்சிமொழி பற்றி நெடுங்காலமாகவே ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளவர். அவர் அறிவும், வாதமும் எல்லோரும் ஏற்கக்கூடியவை.]

'ஆட்சி மொழி மசோதாவைத் தீவிர ஹிந்திவாதிகள், தீவிர ஆங்கில வாதிகள் இரு சாராருமே கண்டனம் செய்திருக்கிறார்கள். இதுவே இம் மசோதா நியாயமானது, இரு பக்கத்துத் தீவிரவாதிகளுக்கும் ராஜிசெய்து வைக்கும் சரியான ஏற்பாடு என்பதைக் காட்டுகிறது' என்று விநோதமாக வாதம் செய்கிறது அரசாங்கம். உண்மையிலேயே ஆட்சி மொழி மசோதா ஒரு ராஜித் திட்டம்தான். ஆனால் தீவிர ஹிந்திவாதிகளுக்கும் ஆங்கில வாதிகளுக்குமிடையே அல்ல. காங்கிரஸுக்குள்ளும் வெளியிலுமுள்ள ஹிந்தி வெறியர்களின் இடைவிடாத வற்புறுத்தலுக்குப் பிரதமர் தமது வாக்குறுதியை ராஜி செய்ததன் விளைவே இந்த மசோதா.

'மக்கள் எவ்வளவு காலத்துக்கு ஆங்கிலம் வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதுவரை அதை ஹிந்திக்கு மாற்றுமொழியாக **(Alternate Language)** வைத்துக் கொள்ள வேண்டும் என்பது என் கருத்து. அவ்வாறு எவ்வளவு காலத்துக்கு ஆங்கிலம் வேண்டும் என்பதை ஹிந்தி அறிந்த மக்களின் முடிவுக்கு விடமாட்டேன்; ஹிந்தி அறியாத மக்களின் முடிவுக்கே இந்தக் கால நிர்ணயத்தை விடுவேன்' என்று 1959ம் ஆண்டு ஆகஸ்டு ஏழாந் தேதி பிரதமர் கொடுத்த வாக்குறுதியை இப்போதைய மசோதா 'தீர்க்க'ச் செய்திருப்பது மட்டுமல்ல; அந்த வாக்குறுதியை ஒரு கேலிக் கூத்தாகவே ஆக்கி யிருக்கிறது.



பிரதமரின் வாக்குறுதி

ஆட்சி மொழி மசோதாவில் பிரதமரின் வாக்குறுதி உள்ளடங்கியுள்ளது என்று அரசினர் கூறும்போது, நான் இவ்வாறு சொல்வது ஏன் என்பது மசோதாவின் மூன்றாவது பிரிவைப் படித்தால் தெரிய வரும்.

அரசியல் நிர்ணயச் சட்டம் அமுலுக்கு வந்து பதினைந்து ஆண்டுகளான பின்பும், ஆங்கில மொழியை ஹிந்தி மொழியுடன் கூட,

(அ) அதுவரையில் ஆங்கில மொழி எந்தெந்த நிர்வாக அலுவல்களுக்குப் பயனாகி வந்ததோ அந்த எல்லா அலுவல்களுக்கும்,

(ஆ) பாராளு மன்றத்தின் விவகாரங்களை நடத்துவதற்கும்

தொடர்ந்து உபயோகப்படுத்தலாம் என்கிறது மசோதாவின் மூன்றாவது பிரிவு.


ஹிந்திக்கு மாற்று மொழியாக ஆங்கிலம் **இருக்கும்** என்று பிரதமர் சொன்னது ஹிந்தியுடன் கூட ஆங்கிலமும் **இருக்கலாம்** என்று மசோதாவில் மாறியிருப்பதை எளிதில் கண்டுகொள்ளலாம். 'ஹிந்தியுடன் கூட' என்ற சொற்றொடரை, 1965-ம் ஆண்டு ஜனவரி 26லிருந்தே (அரசியல் நிர்ணயச் சட்டம் கூறும் பதினைந்தாண்டு வரம்பு) ஹிந்தியை ஆட்சிமொழியாகத் திணிப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள இடமேற்படுகிறது. 'ஹிந்தியுடன் கூட' என்பதால் ஹிந்திக்குத்தான் முதலிடம் என்று ஏற்படுகிறதல்லவா? இதுவல்ல பிரதமர் அளித்த வாக்குறுதி.

படும் — படலாம்

ஆங்கிலத்தின் உபயோகம் நீடிக்கப்படும் **(Shall continue to be used)** என்பதற்குப் பதில் ஆங்கிலத்தின் உபயோகம் நீடிக்கப்படலாம் **(May continue to be used)** என்று சட்டம் செய்திருக்கிறார்கள். 'நீடிக்கலாம்' என்னும்போதே 'நீடிக்கப்படாமலும் இருக்கலாம்' என்பது தொக்கி நிற்கிறது. ஆனால் பிரதமர் இதை மறுத்துப் 'படலாம்' என்றால் 'படும்' என்றுதான் பொருள் என்கிறார். உள்துறை மந்திரிக்கு இவ்விதப் பிரமை ஏதும் இல்லை. 'நீடிக்கப்படலாம்' என்னும்போதே 'நீடிக்கப்படாமலும் இருக்கலாம்' என்றுதான் அவர் பொருள் கொள்கிறார். பிரதமரின் பிரமை நம்முடைய துர்ப்பாக்கியமாகும்.

பாராளுமன்றமானது குறிப்பிட்ட பதினைந்தாண்டுகளுக்குப் பின்னரும் ஆங்கில மொழியை உபயோகிப்பதற்குச் சட்டப்படி வழி செய்யலாம் என்று

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 343வது பிரிவின் மூன்றாவது ஷரத்து கூறுகிறது. இதன் வெளிப்படையான பொருளின்படி இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் ஆங்கிலமே பிரதான ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று பாராளுமன்றம் கூற முடியும். அரசியல் நிர்ணயச் சட்டத்தின் இந்த ஷரத்தின்படி ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீடிப்பதில் பாராளு மன்றத்துக்கு எவ்விதமான தடையோ, கட்டுப்பாடோ இல்லை. 343வது பிரிவு ஆட்சி மொழி எது என்பதைப் பற்றித்தான் கூறுகிறதே ஒழிய அதற்கு மாற்று மொழி **(Alternate Language)** எது என்பதைப் பற்றிக் கூறவில்லை. ஆகையினால் பாராளுமன்றம் ஆங்கிலத்தை நிரந்தரமான, கால வரம்பற்ற மாற்று மொழியாகச் செய்வதற்கு எவ்விதமான தடையும் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படியே ஆங்கிலம் பிரதான மொழியாக இருப்பதற்கு ஒரு கால வரம்பு விதித்தாலும் கூடப் பாராளு மன்றம் வேறு விதமாக முடிவெடுக்கும் வரையில் அது எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் மாற்று மொழியாகவோ கூட்டு மொழியாகவோ **(Additional Language)** இருப்பதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்பதை நான் மக்கள் சபையில் எடுத்துக் காட்டினேன். ஆனால் ஆட்சியாளர்கள், ஹிந்தி மொழி பேசாத பகுதிகளிலுள்ள சட்டசபைகளை மட்டுமின்றி, பாராளு மன்றத்தையும் புறக்கணிக்கிற முறையில் திட்டமிட்டு இந்த மசோதாவை உருவாக்கி விட்டார்கள். இனி பத்தாண்டுகளுக்குப் பின் வரவிருக்கும் பாராளுமன்றத்தின் கருத்துக்கு எந்த முக்கியத்துவமும் இல்லாமல் செய்யவிருக்கிறார்கள்.



பாராளு மன்றத்தைப் புறக்கணிப்பதா?

பாராளு மன்றத்தைப் புறக்கணிக்கும் மசோதா இது என்று நான் கருதுவதற்கு இன்னொரு காரணமும் காட்ட விரும்புகிறேன். மசோதாவின் நாலாவது பிரிவு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

(1) பத்தாண்டுகள் கடந்த பின்பு.... பாராளு மன்றம் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தின் மீது.... ஆட்சிமொழி விஷயமாக ஒரு குழு நிறுவப்படும்.

(1-அ) இந்தக் குழுவில் முப்பது அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

(2) இந்தக் குழுவின் பொறுப்பு, நிர்வாக அலுவலில் ஹிந்தி அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றி மதிப்பிட்டு அதன் மீது ராஷ்டிரபதிக்கு யோசனைகள் சமர்ப்பிப்பதாகும். ராஷ்டிரபதி இந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் விவாதிக்கவும், எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும் அனுப்பி வைக்கவும் வகை செய்வார்.

ஹிந்தியின் முன்னேற்றத்தைப் பற்றி ஆராயுமாறுதான் இந்த ஷரத்து கூறுகிறது. ஆங்கிலத்தை அப்புறப்படுத்துவது பற்றி இது எதுவும் கூறவில்லை. எனினும், இதைப் பயன்படுத்திக்கொண்டே குழுவில் மெஜாரிட்டியாக இருக்கப் போகிற தீவிர ஹிந்திவாதிகள் ஆங்கிலத்தை அடியோடு அழித்து ஹிந்தியை ஏகதேசமாகத் திணிக்கவே முயலுவார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

இவ்விஷயத்தை மூடுமந்திரமாக விவாதிக்கும் ஒரு குழுவிடம் பூரணமாக ஒப்படைப்பது பற்றி நான் மிகவும் கவலை கொள்கிறேன். குழுவின் யோசனைகளைப் பாராளுமன்றம் விவாதிக்கும் என்றாலும் அவற்றை எவ்விதத்திலும் மாற்ற முடியாமல் போகும். இதில் எனக்கு முன்பே அநுபவம் உண்டு.

முன்பு பாராளுமன்ற உறுப்பினர் முப்பது பேர் கொண்ட மொழிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பிறகு நான் தீவிரமாக வலியுறுத்தியதன் மீது இந்தக் குழுவின் அறிக்கை பாராளு மன்றத்தில் விவாதத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பிரதமரின் வாக்குறுதியை உள்ளடக்குவதற்காக நான் ஒரு திருத்தம் பிரேரித்தேன். உடனே உள்துறை மந்திரி மட்டுமல்ல,

ஹிந்தி வியூகம்

ஹிந்தி வியூகம் முழுவதுமே அதை ஆட்சேபித்தது. மேற்படி குழுவின் அங்கத்தினர்கள் பாராளு மன்றத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் அது சட்டப்படி ஒரு பாராளுமன்றக் குழு அல்ல என்றும், ஆனபடியால் அதன் அறிக்கையில் பாராளுமன்றம் திருத்தங்கள் செய்வதற்கில்லை என்றும் அவர்கள் கூறினர்.

இந்நிலையில் பாராளு மன்றத்தின் விவாதம் வெறும் கேலிக்கூத்தாகவே இருந்தது. குழுவின் அறிக்கை பிறந்த மேனியாக அப்படியே ராஷ்டிரபதியிடம் சென்றது. குழுவின் பெரும்பான்மையோருடைய கருத்துப்படியே ராஷ்டிரபதியும் தமது அறிக்கையை வெளியிட்டார். பாராளு மன்றத்தின் கருத்துக்களுக்குச் சற்றும் கவனம் அளிக்கப்படவில்லை.

இதையே மீண்டும் செய்யத்தான் உத்தேசித்திருக்கிறார்கள் என்பதே மேற்கண்ட நாலாவது பிரிவின் தாத்பரியம். இதனால்தான் பாராளு மன்றம் புறக்கணிக்கப்படுகிறது என்று கூறுகிறேன்.

ராஜ்யங்களின் கருத்து மதிக்கப்படும் என்ற பிரமையை உண்டாக்கு வதற்காக 'ராஜ்ய சர்க்கார்களுக்குக் குழுவின் அறிக்கை அனுப்பப்படும்' என்று ஷரத்தில் கண்டிருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்த சர்க்கார்கள் மத்திய சர்க்காரின் ஹிந்திவாதிகள் இழுத்த கோட்டி லேயேதான் நயத்தாலும் பயத்தாலும் செலுத்தப்படுவர். எனவே, 'ராஜ்ய சர்க்காருக்கு அனுப்பப்படும்' என்பதை 'ராஜ்ய சட்ட சபைகளுக்கு அனுப் பப்படும்' என்று திருத்தி நான் ஒரு பிரேரணை கொண்டு வந்தேன். ஆனால் அதை ஏற்க மறுத்து விட்டார்கள்.

அதாவது, பாராளுமன்றம், ராஜ்ய சட்டசபைகள் யாவுமே ஆட்சி மொழி விஷயத்தில் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வெறியருக்கு வெற்றி

ஹிந்தி வெறியர்களின் வெற்றியாகத்தான் ஆட்சி மொழி மசோதா உருவெடுக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த வெற்றி யின் கூலி மிகவும் பயங்கரமாக இருக்கும். தேச ஐக்கியத்தின் பிளவுக்கு முதல் பலிப் பொருளாக 'மொழிவாரி ராஜ்யச் சட்டம்' அமைந்தது என்றால் ஆட்சி மொழிச் சட்டம் இரண்டாவது அல்லது இறுதி பலிப் பொருளாக அமையும்.

பிராந்திய மொழி ஆட்சி மொழியாகுமா?

என். மாதவராவ்



[இக் கட்டுரை ஆசிரியர் ராஜமந்த்ரப்ரவீண என். மாதவராவ் மைசூர் சம்ஸ்தானத்தில் முன்னாள் திவானாகச் சிறந்த பணிபுரிந்தவர். நிர்வாகத் துறையில் நேரடி அனுபவமுள்ளவர். அரசியல் கட்சிகளிலிருந்து விலகி நின்று எந்தப் பிரச்னையை யும் தேச நலன் என்ற கோணத்திலிருந்து ஆரா யும் திறன் படைத்தவர். ஆங்கிலத்தை நீடிக்க அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்று வன்மையாகக் கூறுகிறார்.]

ஆங்கில மொழியின் அவசியத்தைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லத் தேவையில்லை. அதனுடைய முக்கியத்துவம் நிதர்சனமானது.

உயர் கல்வித் துறையிலும், முக்கியமாக விஞ்ஞானம், பொறியியல், ராணுவ விஞ்ஞானம் போன்றவைகளிலும் நவீன அரசாங்க நிர்வாகத் துறையிலும் ஆங்கில மொழி அற்புதமாக மிகச் சீரிய விதத்தில் அகில இந்திய மொழியாகச் செயலாற்றி வருகிறது. நாட்டுக்குள்ளேயும் வெளி நாட்டுத் தொடர்புக்கும் ஆங்கிலம் வெகு திருப்திகரமாக அமைந்துள்ளது. தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்திக் காக்க வலிமை பொருந்திய கருவியாகவும் இம் மொழி இருக்கிறது. இவ்வளவு நன்மைகளையும் வேண்டாம் என்று உதறித் தள்ளுவது மடமையேயாகும்.

கலப்பட மொழி

ஹிந்திக்கு உயர் ஸ்தானம் அளிப்பதற்காக இம்மொழி நாட்டு மக்க ளில் 40 சத விகிதத்தினரால் பேசப்படுகிறது என்று ஒரு காரணம் காட்டப் படுகிறது. இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் ஹிந்தி மொழி பல்வேறு பிரதேச வழக்குகளின் கலப்படமே தவிர தனியொரு மொழி அல்ல. நாட்டின் பல பகுதிகளில் இம்மொழி பேசப்படுவதில்லை; புரிந்து கொள்ளப்படுவதுமில்லை. ஒவ்வொரு இலாகாவும் சிக்கல் மிகுந்ததாக உள்ள நவீன கால அரசாங்க நடவடிக்கைகளுக்கு இம்மொழி இதனு டைய தற்போதைய வளர்ச்சியில் துளிக்கூட ஏற்றதல்ல. இந்த உண் மையை ஒப்புக்கொண்டுதான் ஹிந்தி மொழியை வளர்ப்பதற்கும் மக்களி டையே அதைப் பரப்புவதற்கும் வளப்படுத்துவதற்கும் ஹிந்தி மொழியின் ஆதார அமைப்பைக் குலைக்காமல் இதர மொழிகளிலிருந்து சொற்களைப் புகுத்தலாம் என்று அரசியல் சட்டமே யூனியன் அரசாங்கத்துக்குப் பணித் துள்ளது. இந்தக் கட்டளையே வெகு அதிசயமானது. இம்முயற்சியினால் ஒரு பலனும் கிடைக்காது. இதைக் கைவிடத்தான் வேண்டும் என்பது தெளிவாகவே தெரிகிறது. அரசியல் சட்டத்தில் ஹிந்தி மொழிக்கு அளிக்கப்

பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அம்மொழியைத் தயார்ப்படுத்தப் பதினைந்தாண்டு காலப் பிரயாசைப்பட்ட பின்னரும், இந்தக் காலம் மிக மிகக் குறைவு என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

ஆங்கிலம் அன்னிய மொழி, எனவே அது கூடாது என்ற ஆட்சேபம் சுதந்திர காலத்துக்கு முன்னால் ஆங்கிலேயருக்குச் சம்பந்தப்பட்ட எல்லாவற்றின் மீதும் ஏற்பட்டிருந்த துவேஷத்தின் ஒரு சாயலே தவிர வேறன்று. சுதந்திர இந்தியா உருவாவதற்கு ஆதாரமாக இருந்த ஜனநாயக ஆர்வத்தை நம்மிடையே உண்டாக்கி அதைப் போஷித்து வளர்த்ததே ஆங்கில மொழிதான் என்பதை நாம் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். நமது சட்ட சபை, நீதி மன்றங்கள், நிர்வாகத் துறை, ஸ்தாபன அமைப்புகள் முதலிய எல்லாவற்றிலும் ஆங்கிலேயர்களுடைய மாதிரிகளைத்தான் நாம் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறோம். இவ் விஷயத்தில் நாம் துளிக்கூடத் தயக்கம் காட்டவில்லை. இந்த ஸ்தாபனங்களையும், அமைப்பையும் நிர்வாகம் செய்யவும், நம்முடைய அபிலாஷைகளுக்கு ஏற்றபடி இவைகளை வளர்க்கவும் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதில் நமக்கு எந்த வித கௌரவ ஹானியும் ஏற்படாது.

கோடிக்கணக்கில் செலவு

நாட்டின் மீது ஹிந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிக்க வேண்டுமென்ற முடிவு நாட்டு மக்களுக்குக் கோடிக் கணக்கான செலவை ஏற்படுத்திவிட்டது. எனினும் உருப்படியாக எவ்வித நன்மையையும் உண்டாக்கவில்லை. ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் வாழும் லட்சக் கணக்கான மக்களிடையே அதிருப்தி உணர்ச்சியையும் வெறுப்பையும்தான் இது உண்டாக்கி யிருக்கிறது. 'ஆங்கிலம் துணை மொழியாகத் தொடர்ந்து செயல்படும். ஹிந்தி பேசாத மக்கள் விரும்பினாலொழிய அந்த இடம் ஹிந்திக்கு அளிக்கப்பட மாட்டாது' என்று பிரதமர் நேரு உறுதி கூறினார். இது வெறும் மேடைப் பேச்சுச் சொல்லலங்காரமாகிவிட்டது. பிரதமர் அளித்த வாக்குறுதி மக்கள் சபையின் ஒப்புதலைப் பெறவில்லை. தற்போது நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தினால் மக்களுக்குக் கிடைக்கும் உறுதி எத்தகையது? தாற்காலிகமாகக் கிடைக்கும் ஸ்திர மில்லாத சாந்தியே தவிர வேறொன்றுமில்லை.

அலுவலகங்களில் ஹிந்தி

ஆனால் நடைமுறையிலோவெனில் ஹிந்தியை அரசாங்கக் காரியங்களுக்கு வெகு விரைவாக அதிகமான அளவுக்குப் பயன்படுத்தும் சர்க்காரின் கொள்கைகளில் எந்த வித மாறுதலும் இருக்காது; நடவடிக்கைகளின் வேகமும் குறையாது.



இந்த மசோதாவுக்குத் தென் மண்டலத்தைச் சேர்ந்த எல்லா முதன் மந்திரிகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு அளித்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆதரவும் மனப்பூர்வமாக அளிக்கப்பட்டதுதான் என்றுகூட நம்பப்படுகிறது. இது உண்மையானால் மிகவும் விசித்திரமானது என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த ராஜ்யங்களில் உள்ள பொது மக்கள் இந்த மசோதா பற்றி உற்சாகம் கொண்டுள்ளதாக எந்த இடத்திலிருந்தும் தெரியவில்லை. இப்போதுள்ள உண்மை நிலைமையில் மக்கள் உற்சாகம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

இந்த மசோதாவைப் பற்றி ஒன்று வேண்டுமானால் சொல்லலாம். அரசியல் சட்டத்தில் உள்ள வாசகங்களின் நேர்ப் பொருளுக்கும் கருத்துக்கும் இயைந்த வண்ணம் மசோதா வாசகம் அமைந்திருக்கிறது. ஆனால் இது ஓர் ஆறுதல் அல்ல. இதனால் மக்களுக்கு எவ்விதத் திருப்தியும் ஏற்படாது. ஏனெனில் மக்களது குறைபாட்டுக்கும் அதிருப்திக்கும் மையமாக இருப்பது அரசியல் சட்டத்திலேயே அரசாங்க மொழி சம்பந்தமாகப் போதிக்கப்பட்டுள்ள துவேஷமூட்டுகிற ஷரத்துக்கள். இந்த எரிச்சலை வளர்க்கும் ஷரத்துக்களைத் திருத்தி மாற்றி அதன் மூலம் ஹிந்தி பேசாத மக்களுக்கு நியாயம் வழங்க ஓர் அரிய சந்தர்ப்பம் இம் மசோதா விவாதிக்கப்பட்டபோது கிடைத்திருந்தது. அரசாங்கம் இந்த வாய்ப்பைத் துளிக்கூட அநுதாபம் காட்டாமல் உதறித் தள்ளிவிட்டது.

ஆபத்து அணுகி விட்டது

நமக்குப் பாதுகாப்புக் கிடையாது என்பது நாளுக்கு நாள் தெளிவாகிக்கொண்டு வருகிறது. மத்திய அரசாங்க ஆபீசுகளில் மேன்மேலும் அதிகமாக ஹிந்தியை உபயோகிக்கப் புதுப் புது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. சில மத்திய சர்க்கார் உயர் பதவிகளுக்கு ஹிந்தி மொழி அறிவு ஒரு கட்டாய யோக்கியதாம்சமாகச் செய்யப்பட்டு வருகிறது. ஹிந்தி பேசாத மக்கள் தங்களை எதிர்நோக்கியிருக்கும் இந்தப் பேராபத்தை உணர வேண்டும். உணர்வதுடன் அரசியல் சட்டத்தில் இது சம்பந்தமாக உள்ள ஷரத்துக்களைத் திருத்தி அமைத்தால் ஒழியத் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்பதை நன்கு தெரிந்து கொண்டு தங்கள் உரிமையை நிறைவேற்றிக்கொள்ளத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது.





கூப்பிடுங்கள்.
உங்கள் பெயர், தொழில்...?
இந்தளவு தீர்மானமாக எப்படிச் சொல்லுகிறீர்கள்?



யுவர் ஆனர்!
ஒரு எழுத்து வித்தியாசம்!

அறிவுக்கனலே, அருட்புனலே!

ரா. கணபதி **20**



குமார்புகூரில் சந்திரமணிக்குச் சேதி எட்டியது — கதாதரருக்கு மறுபடியும் பித்துப் பிடித்துவிட்டது, என்று.

சந்திரா முன்னை விடப் பதறிப் போனாள். முன்பாவது கதாதரர் ஒன்றிக்கட்டையாக இருந்தார். இப்போது பச்சைக் குழந்தை ஒன்றையும் அல்லவா அவருடன் முடிச்சுப் போட்டாகிவிட்டது? குழந்தை சாரதாவை எண்ணும்போது சந்திரமணியின் உள்ளம் குமுறியது.

ரகுவரனுடைய திருக் கோயிலுக்கு ஓடினாள் சந்திரா. இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் இந்த ஆலயத்துப் பெருமானிலிருந்துதானே ஒளி எழுந்து அவளுக்குள் நிறைந்தது?

மகாதேவனின் முன்பு வேரற்ற மரம் போல் விழுந்தாள்.

"ஐயனே, இனி நான் உணவைத் தொடமாட்டேன். சொட்டு நீரையும் நாவில் விடமாட்டேன். உன் சந்நிதியிலேயே உபவாஸமிருந்து என் உயிரை விடுகிறேன். என் உயிரை எடுத்துக் கொண்டு, பிரதியாக என் பிள்ளையைக் குணமாக்கு" என்று தாய்மைக்கு மட்டுமே இயன்ற ஆத்மத் தியாக விரதத்தை எடுத்துக் கொண்டாள்.

கமார்புகூர் ஆலயத்தில் உறைந்த கருணாகரன் அவளுக்கு என்ன கூறினானோ, அவள் அங்கிருந்து முகுந்தபூரிலுள்ள சிவாலயத்துக்குச் சென்று உண்ணாவிரதத்தைத் தொடங்கினாள்.

மூன்று நாட்களாகி விட்டன. வயோதிகத்தில் ஒட்டியிருந்த அவளது வயிறு மேலும் ஒட்டிக் கொண்டது. தன்னுடைய உடம்பே பிறருடையதைப்போல, இயக்க முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. அந்தச் சோர்வுப் பெருக்கிலே எப்படியோ கண்ணயர்ந்தாள் சந்திரா.

வெள்ளியங்கிரி அவளது கனவில் விரிந்தது. வெள்ளியைவிடத் தெள்ளிய ஒளி பெற்ற வித்தகனும் அங்கு தோன்றினான்.


'பயப்படாதே, உன் மகனுக்குச் சித்தக் கோளாறு எதுமில்லை. அவனில் இருக்கும் அபரிமிதமான தெய்விக சக்தி விழிப்புப் பெற்றிருப்பதால்தான் அவன் இவ்வாறு இருக்கிறான்' என்று கூறினான்.

கனவு கலைந்தெழுந்தாள் சந்திரமணி. அவளுள் அமைதி நிறைந்தது. ஆண்டவனை உளமார வாழ்த்தி, தன்னுடைய விரதத்தைக் கலைத்துக் கமார்புகூருக்குத் திரும்பினாள்.

பைத்தியம் என்று பிறர் கருதிய அந்நிலையைப் பற்றிப் பிற்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் தமது சிஷ்யர்களிடம் கூறுகையில் அப்போது தாம் பட்ட மனோ வேதனையில் கால் பங்கைக்கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் சாதாரண மக்கள் உயிரை விட்டிருப்பார்கள் என்று கூறியிருக்கிறார்.

"தூக்கம் என்றால் இன்னது என்றே தெரியாமல் நீண்ட பல ஆண்டுகளைக் கழித்திருக்கிறேன். தேக உணர்வும், கால உணர்வும் என்னை விட்டகன்றன. அப்படி எப்போதேனும் தேக உணர்வு ஏற்படும்போதெல்லாம் 'எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?' என்ற ஒரே எண்ணம் தான் எழுந்து என்னைப் பயம் கொள்ளச் செய்யும். என் விரல்களைக் கண்ணுக்குள் இட்டுக் கொண்டு இப்போதேனும் கண்கள் மூடிக் கொள்கிறனவா என்று பார்ப்பேன். ஆனால் ஏனோ இமைகள் இமைக்கும் சக்தியையே இழந்திருந்தன. ஏன் இப்படி யானேன் என்று என் விடமே நான் பீதி கொள்வேன்.

"'அம்மா, நீ என்னை என்ன செய்கிறாயடி? உன்னை ஓயாமல் வழிபட்டதற்கு இதுதான் பலனா? உன்னையே பூரணமாக நம்பியதற்குப் பிரதியாக இந்தப் பயங்கர வியாதியையா எனக்குத் தந்திருக்கிறாய்?' என்று விசித்துக் கொண்டே வினவுவேன்; மறு கணமே



மனோபாவம் மாறிவிடும். 'இந்தக் கட்டைக்கு எது வேண்டுமானாலும் நேரிட்டுவிட்டுப் போகட்டுமே! இது அழிந்துதான் தொலையட்டுமே!' என்று நினைப்பேன். 'தாயே, என் உடம்பையும் அறிவையும் என்ன வேண்டுமானாலும் செய்துகொள். உள்ளத்தை மட்டும் உன்னிடமே தங்குமாறு செய்தருள்! என்னைக் கைவிடாதே! உன் காட்சியைக் கொடுத்துக் கிருபை செய். உன்னைத் தவிர எனக்கு யாரும், எதுவும் துணை கிடையாது. உன் சரணங்களில் சரணம் அடைகிறேன்' என்று வேண்டிக்கொண்டு விம்மி அழுவேன். என் உள்ளத்தில் பரவச ஆனந்தம் பொழியத் தொடங்கும். உடம்பு அல்பமான வஸ்து — அதன் மேல் கவனம் செலுத்த வேண்டியதே இல்லை என்ற உணர்வு ஏற்படும். இந்த நிலையில் ஜகன்மாதாவின் தரிசனம் கிடைக்கும். முத்துப் பற்களில் புரள்கிற முத்துமொழிகளால் எனக்கு அபயம் கூறுவாள் பவதாரிணி'' என்றெல்லாம் குருமஹராஜ் மொழிந்திருக்கிறார்.

ஹிந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளும் பரம்பொருளிடம் ஜீவனைச் சேர்க்கின்றன என்பதை நிரூபித்துக் காட்டவே நிகழ்ந்த அவதாரம் ஸ்ரீ ராம கிருஷ்ணருடையது. ஹிந்துமதத்தில் பல பிரிவினர் பல மூர்த்திகளை 'இஷ்டதெய்வ'ங்களாக வழிபடுவதைக் காண்கிறோம். ஒரே தெய்வத்தையே சாதகன் பல பாவங்களில் இருந்து வழிபடுவதையும் காண்கிறோம். இந்த ஒவ்வொரு மார்க்கமும் சத்திய சாக்ஷாத்காரத்துக்கு உதவும் என்பதைப் பிற்காலத்தில் சாஸ்திரியமான அநுஷ்டானங்கள் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெய்ப்பித்துக் காட்டினார். எனினும் அவ்விதமான சாஸ்திரீய அநுஷ்டானம் செய்யாமலே— ஆசாரியனது துணையில்லாமலே—தமது சாதனை வாழ்வின் முதல் நாலாண்டுகளில் ஒருவாறு அநுபவித்திருந்தார்.

குழந்தை என்ற பாவத்தில் அம்பிகையிடம் அன்பு செய்த அவர் தம்மை அறியாமலே அடிமை என்ற பாவத்தில் ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவைச் சிறிது காலம் வழிபடத் தொடங்கினார். 'வத்ஸல பாவம் போய் அவரிடம் தாஸ்ய பாவம் வந்தது எப்படி? அம்பிகையிடமிருந்து, அவரது உள்ளம் ரகுவீரனிடம் சென்றது ஏன்?' என்றெல்லாம் நாம் கூற இயலாது. சர்வ மத சமரஸத்தின் சின்னமாக விளங்க வேண்டிய இவர் குறுகிய மதப் பற்றுக்கள் இல்லாமலிருக்க வேண்டும் என்பதற்காக அம்பிகையே அவரது ஈடுபாட்டைப் பிற தெய்வங்களிடமும், பிற பாவங்களிலும் திருப்பினாள் என்றுதான் கருதவேண்டும்.

ஞானிகளின் முன்னணியில் நிற்பவரும், புத்திமான்களில் தலைசிறந்தவரும், பக்திப் பேடகமும் ஆன ஆஞ்சநேய ஸ்வாமியைப் போல ஸ்ரீ ராமனுக்கு அடிமையாக இருந்து வழிபட விரும்பினார் கதாதரர்.

அந்தரங்க சுத்தம் இருந்தால் இதயம் ஸ்படிகத்தின் தூய்மையை அடைந்து விடுகிறது. வண்ணமற்ற அந்தத் தூய்மையில் எந்த வண்ணத்தை ஏற்றிப் பார்த்தாலும் அந்த வண்ணம் ஸ்வச்சமாகக் கூடி விடுகிறது. கதாதரரின் பரிசுத்த உள்ளத்தில் ஹநுமானின் தாஸ்ய பாவம் துல்லியமாகக் குடி புகுந்தது. உள்ளத்தில் இருந்தது புறத்திலும் பரவியது.

அதன் பின் கதாதரரால் மனிதர்களைப் போல நடமாட முடியவில்லை. தாவித் தாவிச் செல்லவே முடிந்தது.

அதன்பின் கதாதரருக்குச் சமைத்த உணவுகளில் பிடித்தமில்லாமல் போய் விட்டது. தோலுடனேயே பழங்களையும், கொட்டைகளையும் உண்ணத் தொடங்கினார்.

தியானத்தில் உள் முகமாகத் தோய்ந்து பழகிய அவருடைய கண்கள் அதன்பின் நிலைகொள்ளாமல் குறுகுறுவென்று மிதந்து கொண்டே யிருந்தன.

'என்பெலாம் உருக்கி' என்று மணிவாசகர் அடிக்கடி சொல்வாரே, அது போல் கதாதரருடைய முதுகெலும்பின் அடிப்பாகம் உருகி நெகிழ்ந்து ஓர் அங்குலம் வளர்ந்ததாம்!

பக்தியின் முன் பௌதிகம் என்ன செய்ய முடியும்?

தெய்வத்துக்காகக் கதறுமலே, தியானம் செய்யாமலே, சாதாரணமாக விழிப்புற்ற நிலையில் தரிசனம் பெறும் பாக்கியம் இச்சமயத்தில் கதாதரருக்குக் கிடைத்தது. அப்படித் தரிசனம் தந்த தெய்வம் தையலின் திரு உருவான சீதா தேவியாவாள்.

ஒரு நாள் பஞ்சவடியில் மரத்தடியில் கதாதரர் அமர்ந்திருந்த போது திடீரென்று அவர் முன் தேஜோ மயமான ஒரு நாரீமணி தோன்றினாள். அவளுக்கு மூன்று கண்கள் இல்லை. நான்கு கரங்கள் இல்லை. கைகளில் ஆயுதமும் இல்லை. சாதாரண மானுட ஸ்திரீயாகவே காணப்பட்டாள். ஆனால் மானுடர்களிடம் காண முடியாத அசாதாரணமான அன்பும், இரக்கமும், சோகமும், சலிப்புத்தன்மையும் கலந்த பொலிவுடன் மெல்லடி பெயர்த்து

உங்கள் கேசம் உதிருகிறதா?



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் — கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/63


பினிக்ஸ் ஆடைகள்
வாயில்கள்
பாப்ளின்கள்
ஷர்ட்டிங்குகள்
பினிக்ஸ் மில்ஸ்

வடக்கிலிருந்து தென் முகமாக கதாதரரை நோக்கி வந்தாள் அவள்.

'யார் இந்த மாதரசி?' என்று கதாதரர் வியந்து கொண்டிருக்கும் போதே எங்கிருந்தோ ஒரு கரு முகம் படைத்த வானரம் அவள் பாதத்தருகே ஓடி வந்தது.

'சீதாதேவி, என் அன்னை வைதேஹி, ஜனக ராஜரிஷியின் செல்வப் புதல்வியான ஜானகி, தாசரதியே தனது ஜீவன் என்று வாழ்ந்த கற்பரசி இதோ உன் முன் வந்திருக்கிறாள்' என்று கதாதரரின் மனசுக்குள்ளிருந்து ஒரு குரல் பேசிற்று.

''அம்மா, அம்மா'' என்று ஆதுரமாக அழைத்துக் கொண்டே அவளது பொன்னடி நோக்கிப் பாய்ந்தார் கதாதரர்.

பொன்னடிகளும், பொன் திருவுருவும் மறைந்தன.

அவை எங்கே மறைந்தன?

கதாதரருக்குள்ளேயேதான் புகுந்து மறைந்தன.

பிற்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வார் :

''நான் எப்போதும் சோகத்தையே அநுபவித்துக் கொண்டு வருகிறேன். காரணம், நான் என் முயற்சியின்றியே கண்ட முதல் தரிசனம்—என் உள் கொண்ட முதல் தேவதா ரூபம்—ஜானகியுடையதுஎன்பதுதான்போலும்! மைதிலியைப் போல் சோகம் கண்டவர் யாருண்டு?''

தானே துக்கத்தை அநுபவித்தால் தான் துக்கப்படும் மக்களின் குறையை விரைந்து விலக்கும் உந்தல் ஏற்படும் என்பதற்காகப் பரம்பொருள் தரித்த சோக அவதாரமல்லவா சீதாதேவி ?

சீயமாகவே கதாதரர் பரதத்துவங்களை நுகர்ந்த முதல் நாளாண்டுகளில் பரமேசுவரனிடம் அவரது பக்தி வெள்ளம் திரும்பியதும் உண்டு.

தக்ஷிணேசுவர ஆலயத்தில் பன்னிரு சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தன என்று முன்பே சொல்லியிருக்கிறோமல்லவா? ஒரு நாள் அந்தச் சந்நிதிகளில் ஒன்றில் கதாதரர் பிரவேசித்தார். துதிகளின் அரசாகக் கருதப்படும் 'சிவ மஹிம்ன ஸ்தோத்திரம்' என்ற அற்புதமான பாடல்களை உள்ளுருகிப் பாடலானார்.

பெருமானின் பெருமையை எவ்வளவுதான் சொன்னாலும் மாளுமா? ''நீல மலைகளையெல்லாம் பொடித்து அவற்றைக் கடலில் கரைத்து மையாக்கி, கல்பக விருட்சத்தின் நுண்ணிய கிளையை எழுதுகோலாக்கி, புவன மண்டலத்தையே பத்திரமாக்கி, சாக்ஷாத் கலைவாணியே கல்ப காலமும் எழுதிக் கொண்டு போனாலும் உன்னுடைய குணக் கடலில் கரையை அடைய முடியுமா?'' என்று கூறும் பாடலை கதாதரர் இசைக்கும்போது அந்த இசையில், இசையில் மிதந்த பதங்களில், பதங்களில் மிளிர்ந்த பொருளில், அந்தப் பொருளில் கிளர்ந்த உணர்வில் அப்படியே சொக்கிப் போய்விட்டார். இசையும், பதங்களும், பொருளும் எல்லாம் மறைந்து போய் உணர்வு மட்டுமே மேலோங்கி விம்மிக் கொண்டிருந்தது. கதாதரரின் நேத்திரங்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகி, அவரது தாடைகளையும் தேகத்தையும், வஸ்திரங்களையும் நனைத்துத் தரையில் முத்து முத்தாகச்

சொட்டிற்று. ''மகாதேவா, என்'ஐயா, மகாதேவா! உன் மகிமையை நான் எப்படிச் சொல்ல முடியும்?'' என்று திரும்பத் திரும்பக் கூறி, 'உலறியும் அலறியும் வேசற்றயர்ந்து' இருந்தார் கதாதரர். வார்த்தைகளில் சிக்கி வெடிக்கும் விம்மலும், விம்மலில் சிக்கி வெடிக்கும் வார்த்தைகளுமாக அன்பு அலைகளில் திணறும் கதாதரரைக் கண்டு, அவரது வழக்கமான பைத்தியத்தைப் பார்த்துப் பழகிப் போயிருந்த கோயில் சிப்பந்திகளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இந்தச் சமயத்தில் அந்த ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார் மதுராநாதர். துரிய சிவப் பொருளின் அருகே, மேலும் அருகே, அப்பாலும் அருகே தவ்விக் கொண்டே இருக்கும் உள்ளத்துக்குரிய சாந்தியும் சௌந்தரியமும் தோற்றத்தில் செழிக்கத் துலங்கிய கதாதரரைக் கண்டதும் அவரது இதயம் பூரித்தது. அவரையே கண் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். பசுபதியிடமிருந்து மெல்ல மெல்ல விலகிக் கொண்டு வந்தது கதாதரரின் உள்ளம். ஈசனைக் கண்டவரின் கண்கள் திறந்து கொண்டு தக்ஷிணேசுவர ஆலயத்தையும், ஆலயத்தில் நிற்கும் ஆட்களையும் கண்டன.

'ஆஹா, அது மதுர் பாபு அல்லவா? இவரும் இந்தச் சிப்பந்திகளும் இங்கு ஏன் கூடியிருக்கிறார்கள்? நான் ஏதாவது அமளி துமளி செய்துவிட்டேனு? என்னுடைய பைத்தியம் முற்றி ஏதாவது தவறு செய்துவிட்டேனு?''

பச்சைக் குழந்தை போலப் பயத்தில் தடுமாறிய கதாதரர், ''நான் ஏதாவது தப்புச் செய்து விட்டேனு?'' என்று கலக்கத்துடன் மதுராநாதரைக் கேட்டார்.

மதுராநாதரின் உள்ளம் கரைந்தது. ''இல்லை தந்தையே! தாங்கள் மனமுருகித் துதிப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தீர்கள். அதற்கு யாரவர்கள் இடைஞ்சல் செய்து விடுவார்களோ என்று, இங்கே காப்பாக நின்று அதை ரசித்துக் கொண்டிருந்தேன்'' என்றார்.

ஒரே பரம்பொருள் பல தெய்வங்களாக வருகிறது என்பது நம்முடைய சாஸ்திரம்.

> தமர் உகர்தது எவ்வுருவம்
> அவ்வுருவம் தானே

என்றும்

> யாதொரு தெய்வம் கண்டீர்
> அத்தெய்வமாகி ஆங்கே

என்றும் அடியார்கள் இந்த உண்மையைத்தான் பாடுகிறார்கள்.

அர்த்தநாரீசுவர கோலத்தில் எந்த இடப் பாகத்தில் தேவி உறைகிறாளோ அதே இடத்தில் சங்கர நாராயணக் கோலத்தில் வாசுதேவன் விளங்குகிறான். தேவியும் திருமாலும் ஒன்றே என்பது இதன் பொருள். எனவே ஒரு சமயத்தில் கதாதரருக்கு ராமபக்தி மிகுந்ததில் வியப்பில்லை.

'நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்' என்பதாக ஈசுவரியையும் ஈசுவரனையும் பிரிக்கமுடியாதவர்களாகப் பாடுகிறார் மணிவாசகர். கதாதரரின் உள்ளம் இருவரையும் ஒரே போலக் குவிந்து துதிக்கும் உயர் பான்மை பெற்று விட்டது. அது மட்டும்தானு? அவரே அவ்விருவருமாக மதுராநாதருக்குத் தரிசனம் அளித்ததையும்தான் சென்ற இதழில் கண்டோமே!

தெய்வ அருள் இருந்தாலும், குருவின் அருள் இருந்தாலும், தனது உள்ளத்தின் அருள் இல்லாவிட்டால் சாதகன் கடைத்தேற முடியாது என்பது பரமஹம்ஸரின் உபதேசங்களில் ஒன்று. இவ்வாறு உள்ளத்தின் அருளைப் பூரணமாகப் பெற்று, அது வேறெங்கும் செல்லாமல் தெய்வத்தையே பற்றியதால் கதாதரர் உத்தமமான அநுபூதிகளைத் தாமாகப் பெற்றார். இதய சுத்தத்தின் அவசியத்தையும், பூரண நாட்டம் இருந்தால் நிச்சயமாக உயர் நிலை பெறலாம் என்பதையும் இதனுல் நவீன உலகுக்கு நிலைநாட்டினார்.

நவீன உலகுக்கு வேறு பல உண்மைகளையும் அவர் நிரூபித்துக் காட்ட வேண்டியிருந்தது. பொதுவாகவே சமீப காலத் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் சாஸ்திரங்களையும், குருவையும் ஓர் இடைஞ்சலாகத்தான் கருதுகிறார்கள். சாதகன் உளமார்ந்த நாட்டத்துடன் சத்தியத்துக்காகப் பிரயாசைப்பட்டால் தானுகவே மேநிலை எய்துவான்; தன் வழிச் செல்லவொட்டாமல் அவனைத் தடுத்துச் சாஸ்திரங்கள் கட்டுப்படுத்துகின்றன; ஆசாரியர் கட்டுப்படுத்துகிறார் என்பது அவர்களின் கூற்று. 'இது தவறு; சாஸ்திரங்கள் யாவும் சாதகனுக்கு உதவவே உள்ளன, குரு அவனது ஆத்மாநுபவத்துக்குத் துணை நிற்பவரே' என்று நிரூபித்துக் காட்ட வேண்டிய பிறவிப் பணி கதாதரருக்கு ஏற்பட்டிருந்தது. ஆகையினுல் அவரது சாதனை வாழ்வின் அடுத்த எட்டு ஆண்டுகளில் பல ஆசாரியர்களை அடைந்தார். சரியாகச் சொல்லப் போனுல், பல ஆசாரியர்கள் இவரை அடைந்து சாஸ்திரங்கள் கூறும் பல வழிகளில் இவருக்கு அப்பி

யாசம் அளித்து ஒவ்வொன்றின் வாயிலாகவும் நித்திய சத்தியத்துக்கு அருகே இவரை அழைத்துச் சென்றனர்.

சாஸ்திர ரீதியிலும், குருமுகமாகவும் அநுபவம் பெறுவதுதான் பாரதப் பண்பு என்பதற்காகவே, ஆரம்ப காலத்தில் கதாதரர் உயர்நிலை உற்றதும், அவற்றின் சத்தியத்தில் திடஉணர்வு குன்றிக் கலங்குமாறு அம்பிகை செய்தருளினாளோ என்னவோ? அவளே பிறகு அவர் தமது அநுபவங்கள் உண்மைதான் என்று உறுதிப்படுத்திக் கொள்ள ஆசாரியர்களையும் அனுப்பி வைத்தாள். அவர்கள் சாஸ்திரபூர்வமாக கதாதரரைப் பயிலுவித்து அவர் தாமாகவே பெற்ற பழைய அநுபவங்களை மீண்டும் அப்பியாசத்தின் மூலம் ஐயமறப் பெறுமாறு செய்தனர்.

இதனால் கதாதரருடைய அநுபவங்களின் உண்மை நிரூபிக்கப்பட்டது மட்டுமல்ல; கதாதரர் இயல்பாகப் பெற்ற அநுபவங்களையே சாஸ்திரங்களும் அவருக்கு அளித்ததால் அந்தச் சாஸ்திரங்களின் உண்மையும் நிரூபிக்கப்பட்டது என்று கூறுவதும் பொருந்தும்.

கமலத்தை மொட்டுவிடச் செய்யும் தேவி அதனை மலர்த்தச் சூரிய கிரணங்களையும் அனுப்பி வைக்கிறாள். அந்த ஒளிக் கதிர்கள் மரம் மட்டைகளின் இண்டு இடுக்கையும் துழாவிக் கொண்டு எப்படியோ மொட்டில் மேவி அதனை மலர்த்தி விடுகின்றன.

கதாதரரின் ஐயத்தை நீக்கி அவரை மலர்த்தி வைக்கவும் கிரணங்கள் தேடி வரத் தொடங்கின.

மலர் வனமொன்றுண்டு தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வடக்கே. கங்கையின் படித்துறை ஒன்றை ஒட்டிப் பிரும்மாண்டமான மகிழ மரத்தின் அரவணைப்பில் மகிழ்ந்து மலரும் பல புஷ்பச் செடிகளும் கொடிகளும் அங்கு குலுங்கும். காலைப் பொழுதிலே பாகீரதியின் தண்மை செறிந்த காற்றிலே ஆடி ஆடி மௌன மொழியில் வம்பு பேசும் அந்தப் பூக்களைக் கொய்து கொண்டிருந்தார் கதாதரர்.

மகிழ மரம் இருந்த காரணத்தால் வகுள கட்டம் என்று பெயர் பெற்ற அந்தப் படித்துறையருகே படகு ஒன்று ஊர்ந்து வந்தது. கதாதரரின் பார்வை அதன் மீது படிந்தது. ‘ஆகா, அதில் நிற்பது யார்?’

கதாதரரின் கண்கள் ஏன் அப்படி வியப்பினால் விரிய வேண்டும்?

படகில் நிற்கும் அந்தப் பிரயாணியை இதற்கு முன் நாம் கண்டதில்லையே! கதாதரரின் கதாமிருதத்தில் அவரை விடாது பின்பற்றி வரும் நாம் அறியாத அந்தப் பிரயாணியை கதாதரர் மட்டும் எப்படி அறிந்திருக்க முடியும்?

கங்கையின் அழகில் எவ்வளவு தூய்மை உள்ளதோ, மலர் வனத்தின் அழகில் எவ்வளவு தூய்மை உள்ளதோ அதே போன்ற தூய்மை நிறைந்த பேரெழிலுடன் அந்த ஓடத்தில் ஒரு மாதரசி விளங்குகிறாள்.

காலைப் பொழுதின் காஷாய உடை தரித்த கீழ் வானம் அந்தச் செம்மை ஒளியை இவளுடைய காஷாய வஸ்திரத்தில் முலாம் பூசுகிறது. காற்றில் பறந்து வரும் மகிழ மலர்கள், விரித்து விட்ட அவளது நீண்ட குழல்களில் தொத்திக்கொண்டும் உருண்டும் விளையாடுவதைக் காணும்போது மலரை வண்டு மொய்ப்பது போல வண்டுத் திரளை மலர் மொய்ப்பதும் உண்டோ என்று எண்ணத் தோன்றுகிறது. அவள் தனது ஒரு கரத்தில் கமண்டலமும் இன்னொரு கரத்தில் நூல்கள் பலவும் துலங்க சரஸ்வதி தேவியே போலக் காண்கிறாள். அவளுடைய கழுத்திலிருந்து ஸ்ரீராமனின் பிரதிமை ஒன்று சங்கிலியில் பிணைத்துத் தொங்குகிறது.

படித்துறையைப் படகு அடைந்ததும், ‘சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்தாயிற்று’ என்ற அமைதி—அமைதியா, பரபரப்பா? — அவளுடைய திருமுகத்தில் பரவுகிறது.

படகு நிற்கிறது. படகிலிருந்து இறங்கிச் செழுமையான தனது பாதங்களைப் படித்துறையில் பதித்து ஏறுகிறாள் அந்தச் சந்நியாசினி.

கதாதரர் தமது அறைக்கு வேகமாகச் சென்றார்.

“ஹிருதயா! அதோ தெரிகிறாளே, அந்தப் பெண்மணியை இங்கே அழைத்து வா” என்றார்.

தூரத்தில் வந்து கொண்டிருந்த சந்நியாசினியைப் பார்த்தார் ஹிருதயர்.

“முன் பின் தெரியாத இந்த அம்மணியை எப்படி இங்கே அழைப்பது? எதற்காக அழைப்பது? அழைத்தாலும் அவள் எப்படி என்னுடன் வருவாள்?” என்று கேட்டார் ஹிருதயர்.

“நான் அழைத்ததாகச் சொல்லு; அவள் நிச்சயம் வருவாள்” என்றார் கதாதரர்.

மாமாவின் பைத்தியத்தை எண்ணி வருந்தினார் ஹிருதயர்.

“என் பெயரைச் சொல்லி அவளை அழைத்தால் அவள் நிச்சயம் உன்னுடன் வருவாள்” என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார் கதாதரர்.

பைத்திய மாமா சொன்னபடியே நடந்தது.

(தொடரும்)



இந்திய ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்களின் அமெரிக்க விஜயம் பாரத நாட்டின் பெருமையைப் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

1. வர்ஜீனியாவிலிருந்து ஹெலிகாப்டரில் வாஷிங்டன் நகரத்துக்கு வந்திறங்கிய இந்திய ஜனாதிபதியை அமெரிக்க ஜனாதிபதி முகமலர்ச்சியுடன் வரவேற்கிறார்.

2. இந்திய ராஷ்டிரபதி வெள்ளை மாளிகை வந்திறங்கியதும் அவருக்கு அளிக்கப் பட்ட ராணுவ மரியாதையை அமெரிக்க ஜனாதிபதி கென்னடியுடன் ஏற்றுக் கொள்கிறார்.

3. இரு பெரும் தலைவர்களும் கைகுலுக்கி மகிழ்கின்றனர்.

4. வெள்ளை மாளிகையின் வடக்குப் புறத்தில் வரவேற்பு உபசாரத்தை ஏற்றுக் கொள்கிறார் பாரத நாட்டின் தலைவர். இவரோடு அமெரிக்க ஸ்தானிகர் கால்பிரேய்த் அவர்களையும் படத்தில் காணலாம்.

5. வில்லியம்ஸ்பர்க் காலனி போர்டு சேர்மனோடு டாக்டர் ராதாகிருஷ்ணன்.





6. இந்திய ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு அமெரிக்க காரியதரிசி டீன் ரஸ்க் விருந்தளித்தார். அதில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அமெரிக்க ராணுவ டைரக்டர் வில்லியம் ஸி. பான்டரிடம் முகமலர்ச்சியுடன் உரையாடுகிறார். விருந்தளித்த டீன் ரஸ்கும் இவர்களோடு நிற்பதைக் காணலாம்.


7, 8. அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் பாரத ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் சேர்ந்து நின்று வரவேற்பு உபசாரங்களையெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்கள்.

9. இந்திய ராஷ்டிரபதி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி அளித்த வரவேற்பு உபசாரத்துக்கு நன்றி தெரிவிக்கிறார்.

10. வாஷிங்டன் நகரச் சாவியைப் பரிசாக இந்திய ஜனாதிபதிக்குக் கொலம்பியா கமிஷனர்கள் போர்டு தலைவர் வால்டர் என். டாப்ரினர் வழங்குகிறார்.

இந்திய ராஷ்டிரபதி அமெரிக்க மக்களின் மதிப்பில் மேலும் உயர்ந்து விட்டார். இந்தியப் பண்பாடு அமெரிக்க மக்களைக் கவர்ந்துவிட்டது.





நம் தமிழ்நாட்டில் கவிச்சக்கரவர்த்தி கம்பர், "மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்!" என்று தம்மை மதியாத சோழ வேந்தனைத் துரும்பாக நினைத்துச் சொன்னதாக ஒரு வழக்கு உண்டல்லவா? ஆனால் கிரேக்க நாட்டு அறிஞர் ஒருவர் தம்மை மதித்துப் பார்க்க விரும்பிய மன்னன் அலெக்ஸாந்தரையே பொருட்படுத்தாத காரணம் என்ன? ஆணவம் மிக்க வேந்தனைத் துறவி துரும்பாகத்தான் நினைப்பான் என்பதுதானே? ★

டையோஜெனீஸ் (கி. மு. 412–323) என்பவன் ஒரு கிரேக்க ஞானி. இளமையில் சாக்ரட்டீஸின் சீடனாகிய ஆண்டிஸ்தெனீஸ் என்பவனிடம் கல்வி பயின்றவன். வறுமை வாழ்க்கையை, தானே வலிய மேற்கொண்டான். கந்தையே உடுத்துவான். ஒரு நாளின் பெரும்பொழுதை, நீர்த் தொட்டி ஒன்றில் உட்கார்ந்து கழிப்பான். ஒரு சமயம் இவன் ஆத்தென்ஸ் நகரத்திலிருந்து ஏஜினா தீவுகளுக்கப்பால் சென்று கொண்டிருந்தான். வழியில் கடல் கொள்ளைக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டான். அவர்கள் இவனை ஒரு சீமானுக்கு அடிமையாக விற்று விட்டார்கள். அந்தச் சீமான் இவனை விடுதலை செய்து விட்டான். டையோஜெனீஸ், பகல் நேரங்களில் எரியும் விளக்கொன்றைக் கையில் பிடித்துக் கொண்டு, எதையோ தேடுவது போல் வீதிகளிலும் சந்து பொந்துகளிலும் சுற்றித் திரிந்து கொண்டிருப்பான். 'பகல் நேரத்தில் விளக்கேற்றிக் கொண்டு என்ன தேடுகிறாய்?' என்று யாராவது கேட்டால் 'நேர்மையுள்ள ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்று பதிலளிப்பான்.

வெளித்தோற்றத்துக்கு ஒரு பைத்தியக்காரனைப் போல் நடந்து கொண்ட இந்த ஞானி புலனடக்கம் பெற்றவன்; சுக துக்கங்களுக்கு அப்பாற்பட்டவன்; சமுதாய சம்பிரதாயங்களுக்குப் புறம்பானவன்; யாருக்கும் அஞ்சான்; எதற்கும் அஞ்சான்.

இவனைப் பற்றிப் பலரும் பேசத் தலைப்பட்டனர். ஒரு சமயம், மகா அலெக்ஸாந்தர், இவனைப் பார்க்க விரும்புவதாக அரிஸ்டிப்பஸ் என்ற தன் நண்பனிடம் சொன்னான். அவனும் அலெக்ஸாந்தரின் விருப்பத்தை ஒரு நண்பன் மூலம் டையோஜெனீஸுக்குத் தெரிவித்தான். அதற்கு இவன் — டையோஜெனீஸ் — பின் வரும் கடிதத்தை அரிஸ்டிப்பஸுக்கு எழுதினான்:—

அரிஸ்டிப்பஸுக்கு,

மாஸிடோனியாவின் அரசனாகிய அலெக்ஸாந்தர் என்னைக் காண மிக




வும் ஆவல் உடையவனாக இருக்கிறான் என்று சொல்லியனுப்பியிருக்கிறாய்... அவனுக்கு அரசன் என்ற பட்டத்தை நீ கொடுத்திருப்பது நல்லதுதான். மாஸிடோனியர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்கென்ன? நான் யாருடைய பிரஜையும் இல்லை. அவனுக்கு — அந்த அலெக்ஸாந்தர் என்னும் அரசனுக்கு — என்னையும் என் வாழ்க்கைப் போக்கையும் அறிந்து கொள்ள விருப்பமிருக்குமாயின் அவன் இங்கே வரட்டும். அவன், தன்னுடைய மாஸிடோனியா, ஆத்தென்சுக்கு வெகுதூரத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பது போல் நான் என்னுடைய ஆத்தென்ஸ் மாஸிடோனியாவுக்கு வெகுதூரத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தக் கடிதத்தின் செய்தியை அலெக்ஸாந்தர் அறிந்ததும், டையோஜெனிஸைப் பார்க்க வேண்டுமென்ற அவனுடைய விருப்பம் அதிகமாயிற்று. ஆனால் சரியான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஒரு சமயம் எதிர்பாராதவிதமாக இருவரும் ஆத்தென்ஸ் நகரத்தில் சந்திக்கும்படி நேரிட்டது.

அப்பொழுது அலெக்ஸாந்தர், டையோஜெனிஸைப் பார்த்து, 'தங்களுக்கு நான் எந்த விதத்தில் உதவியாயிருக்கக் கூடும்?' என்று கேட்டான். அதற்கு டையோஜெனிஸ் 'என் மீது சூரிய வெளிச்சம் பட்டுக் கொண்டிருக்கிறது. அதை மறைத்துக் கொண்டு குறுக்காக நிற்காதே; சிறிது விலகியிரு' என்று கூறினான். இதைக்கேட்டு அலெக்ஸாந்தர் திகைத்துப் போய், 'நான் அலெக்ஸாந்தரா யில்லாமலிருந்தால் டையோஜெனிஸாகவே இருக்க விரும்புவேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அப்பால் நகர்ந்து போய் விட்டான்.

கிரேக்க அறிஞர்களான டையோஜெனிஸுக்கும் பிளாட்டோவுக்கும் இடையில் வாக்குவாதங்கள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. மனிதனை 'இறகுகள் இல்லாத இரண்டு கால் பிராணி' என்று பிளாட்டோ ஒரு சொற்பொழிவில் வர்ணித்தான். இதைப் பற்றிக் கேட்டறிந்ததும் டையோஜெனிஸ் ஒரு கோழியின் இறகுகளைப் பிய்த்தெறிந்து விட்டு அதனைப் பிளாட்டோவும் மற்றும் பல அறிஞர்களும் கூடியிருந்த அகாதமிக்கு எடுத்துப்போய், அதனை உயர்த்திப் பிடித்துக் காண்பித்தபடியே, ''பாருங்கள்! பிளாட்டோவின் மனிதனை !'' என்றான். டையோஜெனிஸுக்கும், அவனுக்குப் ''பைத்தியக்கார ஸாக்ரட்டீஸ்'' என்று பட்டப் பெயர் சூட்டிய பிளாட்டோவுக்கும் காரசாரமான சம்வாதம் நடப்பதையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.



ஒரு படத்தில் பாலையா நடித்திருக்கிறார் என்றால், மற்ற நடிகர்கள் எப்படி நடித்திருந்தாலும், அவரை நம்பிப் படம் பார்க்கலாம். அவரை நம்பினோர் கெடுவதில்லை. தாம் ஏற்ற பாத்திரத்தை என்றுமே பாலையா ஒட்டடை உடைசலாக விட்டதில்லை. அவர் நடிப்பைப் பொறுத்த வரையில் அது என்றுமே தனித் தன்மையுடையது.

அரசன் முதல் ஆண்டிவரையில் அவர் ஏற்காத பாத்திரம் இல்லை. ஆரம்ப நாட்களில் வில்லன் பாத்திரத்தில் விசேஷமாய்ச் சோபித்த பாலையா பின்னர் காமெடியன் பாத்திரத்தையும் தம் நடிப்பில் சேர்த்துக் கொண்டு விட்டார்.

இதற்குக் காரணம் திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்தானும். ''பாலையா காமெடி பண்ணி நான் பார்க்கணும்'' என்று கூறி, பாலையாவை உற்சாகப்படுத்தினார். இதிலிருந்துதான் 'வில்லன், காமெடியன்' இரண்டும் கலந்த 'பாலையா பாணி' உருவாயிற்று. இந்தப் பாலையா பாணியையே அவர் வீட்டிலுள்ள அழகான உயர் ஜாதி நாய்கள்கூடப் பின்பற்றுவதைக் கண்டேன்! மாம்பலத்தில் அவர் வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்ததும் ஐந்தாறு நாய்கள் கோரஸாகக் குரல் எழுப்பின. அவற்றிடம் முதலில் காணப்பட்ட வில்லன் பார்வை சீக்கிரத்திலேயே மாறிவிட அவை என் கால்களை வளைய வந்து சிரிப்பூட்டின!

பக்ஷிராஜா பிலிம்ஸின் ''ஆர்யமாலா'' மிகவும் சிறந்த படம் என்று எல்லோராலும் கொண்டாடப்பட்டு வசூல் விஷயத்திலும் உயர்ந்து நின்றது. 1941ம் ஆண்டு வெளிவந்த படங்களுள் இது சிறந்த படம். ''ஆர்யமாலா'' என்ற பெயரிலேயே புரட்சி அடங்கியிருக்கிறது. இந்தப் படத்தில் பி. யூ. சின்னப்பா அபாரமாக நடித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் மிகவும் லாகவமாகத் தம் திறமையைக் காட்டியிருக்கிறார். சொந்தக் குரலில் பாடல்களும் பாடியிருக்கிறார். சின்னப்பாவின் பாடல்களுக்கு என்றுமே ரசிகர்களின் வரவேற்பு தனிப்பட்ட முறையில் உண்டு. ''எந்தன் சிந்தைக் கின்பமே'' என்ற ராகமாலிகைப் பாட்டை ஆர்யமாலாவும் காத்தவராயனும் பாடுகிறார்கள். அந்தப் பாட்டைக் கேட்பதற்காகவே அந்தப் படத்துக்குப் பல தடவை போனவர்களை நான் பார்த்திருக்கிறேன்; அவ்வளவு நன்றாயிருந்தது.



காத்தவராயனாக நடித்த பி. யூ. சின்னப்பாவுடன் ஆர்யமாலாவாக ஈடுகொடுத்து நடித்த பெருமை எம்.எஸ். சரோஜாவையே சேரும். அவரும் அருமையாகப் பாடி அற்புதமாக நடித்திருக்கிறார்.

பி. ராஜகோபாலய்யர் பரமசிவனாகவும், எம். ஆர். சந்தான லக்ஷ்மி பார்வதியாகவும் நடித்தனர். சாக்ஷாத் பார்வதி பரமேசுவரனையே நேரில் பார்ப்பதுபோல் இருந்தது. இந்தப் படத்தில் பாலராயன் என்னும் சேனாதிபதியாகத் தோன்றுகிறார் திரு டி. எஸ். பாலையா.

இந்தப் படத்தைப்பற்றிய ஏதாவது சுவாரசியமான நிகழ்ச்சிகளைக் கேட்டு எழுதலாம் என்ற எண்ணத்துடன்தான் நடிகர் டி. எஸ். பாலையாவின் வீட்டுக்குச் சென்றேன். ஆனால் பாலையா அவர்களோ அந்நாட்களைப் பற்றி ஏதும் சொல்லாமல் இன்றையத் திரைப்பட உலகின் சூழ்நிலையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். இதன் காரணத்தையும் நான் கேட்காமல் விடவில்லை. அதற்குப் பாலையா கூறிய பதில் இதுதான்:

''அந்நாட்களில் படத் தயாரிப்பாளர்கள் ஊரிலுள்ள பல கௌரவமான பெரிய மனிதர்களை, தங்கள் நண்பர்களை ஷூட்டிங் பார்க்க வருமாறு அழைத்திருப்பார்கள். ஒவ்வொரு நடிகனுக்கும் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும்; தான் நன்றாய் நடிக்க வேண்டும்; படத்தில் தனக்கு நல்ல பெயர் வர வேண்டும் என்னும் ஆர்வம் இருந்தது. இந்த ஒரே நோக்கத்துடன் தான் அனைவரும் நடிப்பார்கள். எனக்கும் இந்த ஒரே எண்ணம் தான். ஒரு படத்தில் நடிக்கும் நடிகர்கள் எல்லாரும் நாடகக் குழுவினரைப்போல் சேர்ந்து படப்பிடிப்பில் கலந்துகொள்ளுவோம். நாற்பத்தைந்து நாட்களில் படப்பிடிப்பை முடித்துவிட வேண்டும் என்பது அந்த நாளைய ஏற்பாடு. அநேகமாக அந்தக் குறிப்பிட்ட நாளுக்குள் படம் முடிந்து விடும். படப் பிடிப்பின்போது அதிருப்திகளுக்கோ, அனாவசியத் தகராறுகளுக்கோ, குழப்பங்களுக்கோ சிறி

தும் இடம் இருந்ததில்லை'' என்ற பாலையா மீண்டும் இந்நாளையப் படப் பிடிப்பு முறைகளுக்குத் தாவினார்: ''கடனுக்கு வட்டியும் வட்டிக்கு வட்டியுமாய்க் கொடுத்து அழும் ஒரு புரொட்யூஸர், ஸெட்டிலே ஷூட்டிங் நடக்கையில் வெளியே நாற்காலியில் உட்கார்ந்தபடி எதிரே இருக்கும் ஒரு பூச்செடியையே பார்த்துக் கொண்டிருந்தாரானால், ஒரு மணி நேரத்தில் அந்தச் செடி கருகிப் போய் விடும்!'' என்று பாலையா கூறியதைக் கேட்டு நான் திடுக்கிட வில்லை. ஏனெனில் திரைப்பட உலகில் தில்லுமல்லுகள் எத்தனையோ நடப்பது நமக்குத் தெரியும்.

சில தினங்களுக்கு முன்னால் படாதிபதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் நிதி அமைச்சர் திரு மொரார்ஜி சொன்னார்: ''பெரிய நடிகர்களுக்கு நீங்கள் கொடுக்கும் கறுப்புப் பணத்துக்கு வருமான வரி வசூலிக்க எனக்கு வசதி செய்து தாருங்கள். நான் திரைப்படத் தொழில் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஏராளமான வரிகளைக் கணிசமாகக் குறைத்து விடுகிறேன்!'' என்று. கறுப்புப் பணம் பெறுகிற பெரிய நடிகர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வது போல் மொரார்ஜிபாய் போடுகிற வரிகளால் பாதிக்கப்படுகிறவர்கள் அந்தப் பெரிய நடிகர்களல்ல; திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் எண்ணற்ற ஏழைத் தொழிலாளர்கள்தான், சினிமா பார்க்க விரும்பும் பொதுமக்கள்தான். இதனை மொரார்ஜி பாய் உணர்வதாகத் தெரியவில்லை. பெரிய நடிகர்களேனும் பெரிய மனசு பண்ணித் தங்கள் நடத்தையின் பலனாக உருவாகும் விபரீத விளைவுகளைக் கண்டு திருந்தினால்தான் உண்டு.



ஆர்யமாலா படத்தின் வெற்றிக்கு டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவைப் பாராட்ட வேண்டும். படம் வெளி வந்ததும் ஊரெல்லாம் அமர்க்களப்பட்டது....!

சென்னன் என்ற மாந்திரீகனாக வந்த என். எஸ். கிருஷ்ணனும், ஆரவல்லியாக வந்த மதுரமும் இந்தப் படத்தில் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்று விட்டனர்.

ஆர்யமாலாவைக் காதலித்துக் கள்ளத்தனமாகத் தாலி கட்டிய குற்றத்துக்காக அவனைக் கழுவில் ஏற்றும்படி அரசன் கட்டளை இடுகிறான். காத்தவராயன் கழுமரத்தடியிலிருந்து ஓலமிடுகிறான். பார்ப்பவர்களின் கண்களில் கண்ணீரைப் பெருக்கி விட்டது அந்தக் காட்சி. பரந்தாமன் அருளால் கழுமர மேடை ஒரு கணத்தில் மண மேடையாக மாறிவிடுகிறது. ஆர்யமாலாவுக்கும், காத்தவராயனுக்கும் திருமணம் நடக்கிறது. அந்தத் தந்திரக் காட்சியை நான் இன்னும் மறக்கவில்லை. அதே போலத்தான் திரு பாலையா அவர்களிடம் விடைபெறுகையில் அவர் கூறிய ஒரு விஷயமும் என் மனத்தில் ஆழப் பதிந்து விட்டது. ''இப்பொழுது கை நிறையப் பணம் வாங்குகிறேன். உள்ளத்தில் நிறைவில்லை; அப்பொழுது பணம் குறைவாயிருந்தாலும் உள்ளம் நிறைந்திருந்தது'' என்றார் அவர். அவரைவிட மோசமான நிலையில்தானே இன்று பெரும்பாலான படங்களைப் பார்த்து விடும் வழக்கமுள்ள ரசிகர்கள் இருக்கிறார்கள்? முன்பு குறைவாகப் பணம் கொடுத்து நிறைந்த மனத்துடன் திரும்பினார்கள்; இன்று அதிகப் பணம் கொடுத்து அவதிப்படுகிறார்கள்! - விஜயம்



ஏற்றம் தரும் இயந்திரத் தொழில்



"பட் பட பட்!"

வாசலில் ஸ்கூட்டர் வந்து நின்றது. எட்டு வயதுப் பையன் எட்டிப் பார்த்தான்.

"அம்பி! அப்பா இருக்கிறாரா?"

ஆறு வயதுப் பெண்ணோடு வந்திருந்த ஸ்கூட்டர்காரர் கேட்டார்.

"இல்லையே!"

"அப்படி அப்பா சொல்லச் சொல்லலையே! நிசம்மாத்தானே சொல்றாய்?"

'ஒருவேளை' உபாத்தியாயரான அந்தப் பையனது தந்தை பெற்றோர்களின் அட்மிஷன் தொந்தரவுக்குப் பயந்து உள்ளே இருந்துகொண்டே அப்படிச் சொல்லச் சொல்லியிருப்பாரோ' என்ற சந்தேகத்தில் எழுந்த கேள்வி இது.

"ஆமாம், மாமா! அண்ணாவை இஞ்சினியரிங் கல்லூரியில் சேர்க்க வேண்டும் என்பதற்காக அப்பா யாரையோ பார்க்கப் போயிருக்கிறார். யார் யாரிடமெல்லாமோ போய்க் கையெழுத்து வாங்க வேண்டுமாம். அப்புறம் அப்ளிகேஷனைச் சேர்த்துவிட்டுச் லோபி பிடிக்க வேண்டுமாம். 'எப்பொழுது திரும்புவேனோ, தெரியாது. நீங்கள் எல்லாரும் சாப்பிட்டுவிடுங்கள்' என்று சொல்லிவிட்டார். அதனால் எப்பொழுது திரும்பி வருவாரோ தெரியாது!" என்றான் பையன்.

"சரி, நான் அப்புறமா வந்து பார்க்கிறேன். நம்ப ஜானுவுக்கு முதல் வகுப்பு அட்மிஷன் விஷயமாக வந்தேன்னு சொல்லு!" — இப்படிச் சொல்லிவிட்டு ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தார் வந்தவர்.

"சுப்பிரமணியம், சுப்பிரமணியம்!" என்று கைதட்டிக்கொண்டே உரக்கக் கூப்பிட்டுக்கொண்டு வந்தார் வேறு ஒருவர்.

ஸ்டார்ட் ஆன ஸ்கூட்டர் 'டபடப' என்று சத்தம் போட்டுக் கொண்டு நின்றது.

கூப்பிட்ட ஆசாமி, அருகில் வந்து, "நம்ம பையனுக்கு எட்டாவது வகுப்பில் ஓர் இடம் வேண்டும். நீ மனசு வைத்தால்தான் நடக்கும்!" என்றார்.

"நான் மனசு வைக்கிறேன். என்ன பயன்? இடம் இல்லையே! இந்த வருஷம்தான் ஏழாவது வகுப்புப் பையன்கள் எல்லோரையும் கூண்டோடு கைலாசமாகத் தூக்கிப் போடச் சொல்லிவிட்டார்களே! — இவனுக்கு நீதான் முதல் வகுப்புக்கு இடம் பார்த்துத் தாயேன்!" என்றார் ஸ்கூட்டர்காரர்.

"என்ன கல்வித் திட்டமோ போ! குட்டிக் கொள்ளும்போதே முட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று சோர்வுடன் நடையைக் கட்டினார் எட்டாவது வகுப்புக்கு இடம் கேட்டு வந்தவர்.

பள்ளி திறக்கும் இந்த மாதம் பெற்றோர்களுக்குப் பெரும் வேதனை தரும் மாதமாகி விட்டது. எங்கு போனாலும் 'இடம் இல்லை, இடம் இல்லை' என்ற பேச்சே அடிபடுகிறது. ஆயினும் பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் முயற்சியைக் கைவிடுவதில்லை. ஆள் பிராணன் அடியோடு போனாலும், எப்பாடுபட்டாகிலும் தங்கள் குழந்தைகளுக்கு இடம் தேடித் தரவே முயலுகின்றனர். வெய்யிலில் மழை பாராது, ஆபீஸ் அலுவல்களுக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியேதான் மனித குலம் தழைக்க வித்தூன்றுகிறது.

ஆனாலும் பெற்றோர்களுக்கு ஒரு குறை, தாங்கள் நினைக்கிறபடி தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு தரமுடியவில்லையே என்று. செல்வத்துட் செல்வமான கல்விச் செல்வத்தை எல்லோரும் பெற வேண்டும் என்ற பெரு நோக்கத்துடன் அரசாங்கம் திட்டம் போட்டாலும் அதைச் செயலாற்ற நாள் பிடிக்கிறது. பயன், பலபேருடைய அதிருப்திக்கு ஆளாக நேருகிறது.

மாறிவரும் உலகிலே நம் நாட்டுக் கல்வியின் குறிக்கோளும் மாறிவிட்டது. மக்கள் வாழ்க்கை நடத்தக் கல்வியையே பெரிதும் நம்பும்படியாகி விட்டது. எனவே, எந்தக் கல்வி பயனுள்ளது என்று ஒப்பு நோக்கி அதையே கற்க மக்கள் நாட்டம் கொள்கின்றனர் என்றால் அதில் வியப்பென்ன?

இம்முறையில் தொழிற் கல்விக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு மக்கள் அதைச் சுற்றியே ஈ மொய்ப்பது போல் சூழ்கின்றனர். ஏட்டுக் கல்வியைக் காட்டிலும் தொழிற் கல்வியில் நாட்டம் செல்வதால் நாட்டுக்கு

ஒரு நன்மை. தொழில் வளர்ச்சியிலே நம் நாடு எந்த நாட்டுக்கும் பின் தங்கிவிடாதல்லவா?

ஊருடன் ஒத்து வாழ் என்பது அந்தக் காலத்துப் பழமொழி. உலகத்துடன் ஒத்து வாழ் என்பது இந்தக் காலத்துப் புதுமொழி. இதனைப் பின்பற்றி இன்றைய இந்திய மக்கள் தொழிற் கல்விக்கூடங்களை நோக்கிப் படையெடுப்பதால் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிரந்தரமானதல்ல; வெகு விரைவிலேயே தீர்ந்துவிடக் கூடியதுதான்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றுமறியேன் பராபரமே' என்னும் பெருங் கொள்கையைப் பின்பற்றி நூறாண்டுகளுக்கு மேலாகத் தொழிற் கல்வியில் அநுபவம் பெற்ற அமெரிக்கா, நம் நாட்டின் ஆர்வத்தை வளர்க்க முன் வந்திருப்பது ஒரு நல்ல சூசகமே.

ஏறக்குறைய பன்னிரண்டு பதின்மூன்று ஆண்டுகளாக நம் நாட்டில் பொறி இயல் அறிவு பெற வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து, அதன் பயனாக எத்தனையோ தொழிற் கல்விக் கூடங்கள் உருவாகியுள்ளன. மாணவர்களின் எண்ணிக்கையும் பலமடங்கு பெருகி யிருக்கிறது.

உதாரணமாக 1950ம் ஆண்டு 49 பொறி இயல் கல்லூரிகள் இருந்தன. இன்று நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் தோன்றிப் பணியாற்றுகின்றன.





அன்று இரண்டாயிரத்து இருநூறு பொறி இயல் பட்டதாரிகளைத் தந்த நமது நாடு இன்று ஐயாயிரத்து எழுநூறு பட்டதாரிகளை அளிக்கிறது. அன்று தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் இரண்டாயிரத்து நானூற்று என்பது பேர் என்றால், சென்ற ஆண்டு எண்ணாயிரம் பேர்கள். இப்படி நாட்டின் தேவைக்கேற்பத் தொழிற் கல்வி பெறுபவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே தான் வருகிறார்கள்.

அதோடு தொழிற் கல்வி பெறும் நம் நாட்டு மாணவர்களின் திறமையை வளர்க்கும் பணியில் எத்தனையோ அமெரிக்கப் பொறி இயல் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது அநுபவமும் ஆலோசனையும் நம் நாட்டுத் தொழிற் கல்விக் கூடங்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. கிண்டி பொறி இயல் கல்லூரிக்குப் பேராசிரியர் ரூப், டாக்டர் ரீட் போன்றோர்களின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது. பேராசிரியர் ரூப் மெக்கானிகல் இஞ்சினியர். டாக்டர் ரீட் எலக்டிரிகல் இஞ்சினியர். இருவரும் நம் நாட்டுக்கேற்பப் பாடத் திட்டங்களையும் போதிக்கும் முறைகளையும் வகுத்துத் தரும் விஷயத்தில் அக்கறை காட்டித் தங்களால் இயன்ற உதவியை நல்குகின்றனர்.

இது போல் இந்தியாவெங்கும் பரவியிருக்கும்

ஈா. வே.

தொழிற் பள்ளிக்கூடங்களுக்கு ஆற்றல் மிக்க நிபுணர்களின் உதவி கிட்டி வருகிறது. அது மட்டுமல்ல; ஆர்வம் மிக்க மாணவர்கள் அந் நாட்டுக்குச் சென்றே கற்றுத் தேர்ந்து வரவும் வழிவகை செய்துள்ளது அமெரிக்க நாடு.

நம் நாடு சுதந்திரம் பெற்ற பின், அமெரிக்கா போன்ற நாடுகள் எத்தனை எத்தனையோ மாபெரும் தொழிற்சாலைகளை அமைக்க உதவியுள்ளன. இயந்திர சாதனங்களும் பொருளுதவியும் தந்துள்ளன. அவற்றில் உள்ள இயந்திர சாதனங்களைப் பராமரிக்கவே பல லட்சம் ரூபாய்கள் செலவாகின்றன. நடுவில் இயந்திரக் கோளாறு என்று ஏற்பட்டுவிட்டால் அதனால் ஏற்படக் கூடிய நஷ்டத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா? பழுதான பாகங்கள் வெளிநாட்டிலிருந்து வரும் வரை இயந்திரங்கள் இயங்காமல் கிடக்கவேண்டும் என்றால், நஷ்டக் கணக்கை நாம் போட்டுப் பார்ப்பானேன்? அந்நிய நாட்டுச் செலாவணிக்காகத் தவம் வேறு கிடந்தாகவேண்டும். இது போன்ற தொந்தரவுகளுக்கு இலக்காகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தென் பிராந்தியத்தைச் சேர்ந்த நான்கு ராஜ்யங்களையும் ஒரு யூனிட்டாக்கி, அதன் மூலம் இயந்திரங்கள் இடையறாது இயங்கவும் வழி செய்துள்ளார்கள். ஓரிடத்தில் உள்ள இயந்திரத்தை இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்வது, பழுதுபட்ட பாகத்தைச் சீராக்குவது போன்ற அலுவல்களை இந்த யூனிட் கவனிக்கிறது. பங்களூரில் நிறுவப்பட்டிருக்கும் இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் மிஸ்டர் மில்லர் சொல்வது போல, இது ஒரு பெரிய காரியம் தான். பெரும் வைக்கோற் போருக்குள்ளிருந்து ஊசியைக் கண்டு பிடிப்பதற்கொப்பானதுதான். இதில் வெற்றி கண்டுவிட்டால், நாட்டின் தொழிற்சாலைகள் புரியும் பணி மேலும் சிறக்கும் அல்லவா?

பெரிய தொழிற்சாலைகளுக்கான சிறு சிறு கருவிகளைத் தயாரிக்கும் பொறுப்பைக் கோட்டயத்துக்கு அருகில் உள்ள ஏற்றுமானூர் தொழிற்கூடம் மேற்கொண்டுள்ளது. ஷானூர் என்னும் அறிவும் அநுபவமும் வயதும் முதிர்ந்த நிபுணரின் மேற்பார்வையில் நடக்கும் இத் தொழிற்கூடம் வார்ப்புத் தொழிலில் அற்புதமான சாதனைகள் பல புரிந்துள்ளது. 'கிரீன் சாண்ட்' அதாவது பசும் மணல் முறை என்பதன் மூலம் சீராகவும் சிக்கனமாகவும் வார்ப்படத் தொழில் புரியும் முறையைத் திரு ஷானூர் கண்டுபிடித்துள்ளார். இம்முறையில் வார்ப்புத் தொழிலை மிகவும் சுலபமாகக் கற்கலாம். இங்கு இன்னும் எத்தனையோ கருவிகளும் இயந்திர பாகங்களும் தயாரிக்கப்படுகின்றன.

கேரளத்தின் பிரதானமான தொழில்களில் கயிறு திரிப்பதும் ஒன்றல்லவா? இதனை மின்சார உதவி கொண்டு இலகுவான முறையில் தயாரிக்கவும் ஒரு கருவி செய்துள்ளார்கள். இரண்டு ஆட்கள் உட்கார்ந்து கொண்டு விரைவாக எவ்வளவு கயிறு வேண்டுமானாலும் தயாரிக்கலாம். அது மட்டுமா? இங்கே ஸ்கூட்டருக்கான சிலிண்டர்கள் தயாரித்து அதில் வெற்றி காணவும் முயன்று வருகிறார்கள். அதோடு இந்தத் தொழிற் பட்டறையில் தொழில் முறை தெரிந்தவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்து அவர்களை மேலும் தேர்ந்தவர்களாகச் செய்து அனுப்புகிறார்கள். உபகாரச் சம்பளம் பெற்றும் எத்தனையோ மாணவர்கள் இத்தொழிற் பட்டறையில் கல்வி கற்றுப் போகிறார்கள். தனியார் துறையில் உள்ளவர்களும் இந்த நிறுவனத்தின் பயிற்சி முறையைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் ஸ்தாபனத்துக்குப் பெருமை தேடிக்கொள்ள முயன்று வருகிறார்கள். இது வெறும் கயிறோ, சரடோ அல்ல; நம்பகமான செய்தியே.

'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா'வின் காலத்திலேயே நம் தமிழ் நாட்டு மகா கவி பாரதியார் ஒரு பாடல் பாடியுள்ளாரே, 'பாரத தேசம்' என்று! அதில் நம் பாரதம் வருங்காலத்தில் எப்படி எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று கனவு கண்டுள்ளாரே, நினைவிருக்கிறதா? அந்தக் காலத்து மக்கள் வேண்டுமானால் அதைப் பைத்தியக்காரக் கனவாகக் கருதி யிருக்கலாம். உண்மையைக் கேட்கப் போனால் மகா கவிகளின் வாக்குப் பொய்ப்பதில்லை. அவர்கள் காணும் கனவுகள் அப்படியே மெய்யாகின்றன. 'சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம்' என்றார் பாரதியார் அன்று. இன்று மனிதன் வான வீதிப் பயணத்தை மேற்கொண்டு சந்திரனையே வசிக்கும் இடமாக்கிக் கொள்ளலாமா என்று முயன்று பார்க்கிறான். பாரத மக்களாகிய நாம் சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிய அதிக நாட்கள் ஆகா. ஏனெனில் அவர் கூற்றுப்படி உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோமானால், பாரத நாடு மற்றெந்த நாட்டுக்கும் சளைத்ததல்ல என்பதை நிரூபித்துக் காட்ட முடியும்.

இன்றைய பாரதம் மற்றெந்த நாடுகளுக்கும் குறையாமல் எத்துறையிலும் தலை நிமிர்ந்து நிற்கவே முயன்று வருகிறது. அதன் முயற்சிக்கு ஆக்கம் அளிப்பதேபோல், அமெரிக்கா முதலிய நாடுகள் பொருளுதவி மட்டுமல்ல; நிபுணர்களையும் அளித்து உதவ முன் வந்துள்ளன. பாரதத்துக்குப் பெருமை தேடித் தரவும் முயல்கின்றன.

பாரத நாடும் கைகட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. தன் முயற்சியில் தன் காலில் நிற்கவும் முயல்கிறது. இல்லாவிட்டால், பொறி இயற் கல்லூரிகளை நோக்கி இத்தனை மாணவர்கள் படையெடுக்க முன்வருவார்களா? அரசாங்கமும் தான் ஆண்டுதோறும் தொழிற் கல்விக் கூடங்களையும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து இடம் அளிக்கப் பிரயாசை எடுக்குமா?

ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானாக வளரும் என்னும் முதுமொழிக்கிசைய அமெரிக்கா தனது தொழில் நுட்பத்தை நம் நாட்டுக்குப் புகட்ட முன் வந்திருக்கிறது. ஏற்றம் தரும் இயந்திரத் தொழிலில் அமெரிக்கா நூறாண்டுகளில் கண்ட வெற்றியை, அவர்களது உதவி கிட்டுவதால் இந்தியா இருபதே ஆண்டுகளுள் அடைந்துவிட முடியும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.



ஆங்கில வார்த்தை ஒன்றுக்குப் பொருள் தெரியவில்லை என்றால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உடனே அகராதியை — டிக்ஷனரி — எடுத்துப் புரட்டுகிறீர்கள் இல்லையா? இந்த அகராதியில் ஆங்கில மொழியில் உள்ள வார்த்தைகள் அத்தனைக்கும் பொருள் இருக்கும். இதைத் தயாரிப்பது சாதாரணமான காரியமா? அகராதிகள் பல வெளி வந்துவிட்ட இந்தக் காலத்திலேயே அது மிகுந்த சிரமமான காரியமாக இருக்கும் போது முதன் முதலில் இதைத் தயாரித்தவருக்கு எத்தனை கஷ்டமாக இருந்திருக்கும்? அவர் எத்தனை அறிவுடைய மேதாவியாக இருந்திருக்க வேண்டும்!

அகராதி மனிதர்

முதன் முதலில் ஆங்கில மொழிக்கு அகராதி தயாரித்த அற்புத மேதாவியையே பக்கத்தில் உள்ள படத்தில் காண்கிறீர்கள். இவர் பெயர் சாமுவேல் ஜான்ஸன். ஆனால் இவரை டாக்டர் ஜான்ஸன் என்றுதான் எல்லாரும் அறிவார்கள். ஆங்கில இலக்கிய மாளிகையின் ஒரு தூணாக விளங்கும் இவர் ஸ்டாட்போர்டு ஷயரிலுள்ள லிச்பீல்டு என்ற ஊரில் 1709ம் ஆண்டு பிறந்தார். சின்னக் குழந்தையாக இருந்த போது 'ஸ்குரோ புலா' என்ற நோய்வாய்ப்பட்டார். இது முகத்தின் அழகைக் கெடுத்து ஒரு கண்ணின் பார்வையையும் பறித்துக் கொண்டது.

சிறு வயதிலேயே ஜான்ஸன் அபார ஞாபக சக்தியுடையவராக இருந்தார். எதையும் ஒரு தடவை படித்தால் போதும். அப்படியே அது அவர் மனத்தில் பதிந்து விடும். பத்தொன்பதாவது வயதிலேயே ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் போதே இவர் இலக்கிய கர்த்தாவாகி விட்டார். சதா நூல்களைப் படித்துக் கொண்டே விருப்பாராம். சாதுரியமாகப் பேசுவதில் வல்லவரான இவருக்கு மாணவர், உபாத்தியாயரிடையே செல்வாக்குப் பெருகிற்று. ஆனால் வறுமைதான் இவரை வாட்டி வதைத்தது. கிழிந்த அழுக்கடைந்த ஆடைகளை உடுத்தி வரும் இவரைச் சக மாணவர்கள் கேலி செய்தார்கள். வறுமையே அவரை சர்வகலாசாலைப் பட்டம் பெற முடியாமல் விரட்டியது. லிச்பீல்டுக்கே திரும்பினர்.

மறுபடி பிழைப்பை நாடி லண்டனுக்கு வந்தார். கவிதைகள் கட்டுரைகள் எழுதிப் பிழைக்கலானார். பத்திரிகைகளுக்கு நிருபராகப் பணியாற்றினர். இந்தக் காலங்களில் இவர் இயற்றிய கவிதைகளைச் சிறந்த இலக்கிய கர்த்தாக்களெல்லாம் பாராட்டினர்கள்.

ஜான்ஸனின் அறிவாற்றலையும், அவர் ஆங்கில மொழியைக் கையாண்ட லாகவத்தையும் அழகையும் கண்ட பிரசுரகர்த்தர்கள் பலர் ஆங்கில மொழிக்கு ஓர் அகராதி வகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மிகப் பெரிய பணியான அகராதி உருவாக்கும் வேலையை ஜான்ஸன் ஏற்றுக் கொண்டார். பத்து வருஷக் கடும் உழைப்புக்குப் பின் 1755ல் ஜான்ஸனின் ஆங்கில அகராதி வெளியாயிற்று. தனி மனிதனின் மிகச் சிறந்த சாதனை என்று இதை ஒருமுகமாக உலகமே புகழ்ந்தது. இந்த அகராதி தயாரிப்பதற்காகக் கிடைத்த பொருளையெல்லாம் அதை வெளிக் கொண்டு வருவதற்கே செலவிட்டதால் ஜான்ஸனின் வாழ்வில் வறுமை மறையவில்லை. தாயாரின் ஈமக் கடன்களை நடத்தக் கூட அவரிடம் பொருள் இல்லை.


எழுத்தை மட்டும் நம்பி வறுமையோடு போராடி வந்த ஜான்ஸனுக்கு 1762ம் ஆண்டு மூன்றாம் ஜார்ஜ் மன்னர் இவரது உழைப்பையும் புலமையையும் பாராட்டி வருடமொன்றுக்கு 300 பவுன் உபகாரச் சம்பளமாக வழங்க ஏற்பாடு செய்தார். ஜான்ஸனின் வறுமைப் போராட்டம் ஒருவாறு முடிவுற்றது.

சாதுரியமும் ரசனையும் நிறைந்த ஜான்ஸனின் பேச்சும், எழுத்தும் ஏராளமான இலக்கிய நண்பர்களை அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்தது. வாழ்க்கை வரலாற்றுப் புத்தக வரிசையிலேயே மிகச் சிறந்ததான ஒன்றை ஜான்ஸனின் இலக்கிய நண்பரான பாஸ்வெல் என்பவர் எழுதுவதற்கும் இந்த இலக்கிய வட்டாரமே தூண்டுகோலாயிருந்தது.

இனி நீங்கள் டிக்ஷனரியைப் பிரிக்கும் போதெல்லாம் ஜான்ஸனின் உருவம் உங்கள் மனத் திரையில் நிழலாடும், இல்லையா?

சிறுவர் விருந்து

63



காகிதமும் கத்திரிக்கோலும்

அழகான அன்னப் பறவை

கார்ட்ரிட்ஜ் காகிதம் தயாரா? கத்திரிக்கோல் எல்லாம் ரெடிதானே? இடப் பக்கத்திலுள்ள மாதிரியைக் கட்டங்கள் போட்டு வரைந்து கொள்ளுங்கள். எந்த அளவிலும் வரைந்து கொள்ளலாம். அரை அங்குலக் கட்டங்களானால் ஐந்து அங்குல உயர முள்ள அன்னப் பறவை அழகாக உருவாகும். கார்ட்ரிட்ஜ் காகிதத்தை இரண்டாக மடித்து மடிப்பின் ஓரமாக உடல், இறக்கைகளை வரைந்து வெட்டிக்கொள்ளுங்கள். புள்ளிக்கோடிட்ட பகுதிகளில் கத்தியின் பின்பக்கத்தால் அழுத்திக் கீறி அதை மடித்துக்கொள்ளுங்கள். இரு பாதியான உடல் பகுதிகளை ஒன்று சேர்த்து 'A' என்று குறித்துள்ள துண்டுப் பாகத்தை இழுத்து இணைத்து ஒட்டிவிடுங்கள். கழுத்துப்பக்கத்திலும் பசையின் உதவியால் ஒட்டி விடுங்கள். தாளின் உள்ள 'B' குறிப்பிட்ட துண்டுகளையும் இப்படியே இணைத்துக் கொள்ள வேண்டும். இனி நாம் கவனிக்க வேண்டியது இறக்கைகளை. காகிதத்தை வெட்டி எடுத்துக் கொண்டீர்களா? இறக்கையில் புள்ளிக் கோடும், ஒரு புள்ளி ஒரு கோடு என்று மற்றொரு கோடும் மாறி மாறி இருக்கின்றன. இவைகளின் மீது கீறும் போது உள்ளும் வெளியுமாக மாறி மாறிக் கீறிக் கொள்ள வேண்டும். இறகை லேசாக மடித்து விரைப்பாக்கிக் கொண்டபின் இறக்கைகளைப் பிரித்து உடலின் மேல் சரியானபடி பொருத்தி 'C' என்று குறிப்பிட்ட துண்டுகளை உடலின் அடிப்பக்கத்தில் கொண்டு போய் ஒட்டி விடுங்கள். அன்னப் பறவை உருட்சியாக இருக்க வேண்டும்.


கடைசியாகச் செய்ய வேண்டியது அன்னத்தின் மூக்கின் அடியில் ஒரு சதை இருக்குமே, அதுதான். இதில் ஒன்று வெட்டிக் கொண்டால் போதும். மூக்கு என்று குறிப்பிட்டுள்ள மாதிரியைக் கறுப்புக் காகிதத்தில் வெட்டிக்கொண்டால் நல்லது. வெட்டி எடுத்த காகிதத்தை இரண்டாக மடித்து மூக்கின் இரு பக்கத்திலும் வரும்படி படத்தில் காட்டியுள்ளபடி வைத்து ஒட்டிவிடுங்கள்.. அன்னப்பறவை உருவாகியிருக்குமே! கருப்பான பின்புலத்தில் இதை நிறுத்திவைத்துப் பாருங்கள். நீந்திச் செல்லும் அன்னப் பறவையின் கம்பீரத்தைக் காணலாம்.



என்ன தவறு தெரியுமா?

இங்குள்ள ஐந்து படங்களிலும் ஏதோ ஒவ்வொரு தவறு இருக்கிறது. அது என்ன என்பதை உங்களால் சொல்ல முடியுமா? உடனே விடையைப் பார்க்கப் பத்திரிகையைத் திருப்ப வேண்டாம். கொஞ்சம் உங்கள் சிந்தனைக்கும் தான் வேலை கொடுத்துப் பாருங்களேன். தெரியாவிட்டால் அப்புறம் திருப்பிப் பார்த்துக் கொள்வது இருக்கவே இருக்கிறது.

விடை: (1) கப்பலின் புகையும் படகின் கொடியும் வெவ்வேறு திசைகளில் இருக்கின்றனவே. காற்று ஒரே சமயத்தில் இரண்டு திசையிலும் வீசுமா? (2) குதிரையில் தவறான பக்கத்திலிருந்து ஏறுகிறான். (3) வாத்தின் கால் விரல்களுக்கிடையே ஜவ்வுத் தோலில்லையே. (4) நண்டுக்கு எட்டுக் கால்கள் – முன்னுதுள்ள பிடிக்கும் கைகளைத் தவிர. (5) இது ஒரு ஐஸ்பர்க். ஐஸ்பர்க் பாறைகளின் ஏழு பாகம் நீருக்குள்ளும் ஒரு பாகம் வெளியேயும் தெரியும். ஆனால் மாறாக இருக்கிறது.



காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்




உயர்தரமான காஷ்மீர் பொக்கேயின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் — இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக்கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் கவனமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB 6-19 TAM

அத்தியாயம் இருபத்தைந்து

'பகைவனுக்கு' அருள்வாய்!

அதிர்ச்சியுற்றுப் பிரமித்து நின்ற பரமேசுவரவர்மன் அந்தப் பாறையை நோக்கி விரைந்து செல்ல முற்பட்ட போது, அவன் பின்னால் நடுநடுங்கி நின்று கொண்டிருந்த உத்தமசீலி சட்டென்று அவனுடைய கையைப் பற்றி, ''வேண்டாம், அரசே! நீங்கள் அங்கு போகாதீர்கள்!'' எனக் கீச்சுக் குரலில் படபடத்தாள்.

அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ஏதும் பேசாமல் தன்னை மீறிய ஒரு துடிப்போடு பாறையின் மறு பக்கத்தை நோக்கிச் சென்றான்.

சந்தேகமில்லை; சளுக்கியத் தளபதி வில்வேலிதான் அங்கே குப்புற விழ்ந்து பிணம்போல் கிடந்தார். அவரது

பத்தினிக் கோட்டம்

வலது புஜத்தில் குத்துவாள் ஒன்று ஆழமாகப் புதைந்து குத்திட்டு நின்றது. அதிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொட்டி அவர் முகத்தைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தது. அவருக்குச் சற்றுத் தொலைவில் மற்றொரு குறுவாள் பளபளத்துக் கொண்டு கிடப்பது தெரிந்தது.

இடுப்பின் மேல் இரு கைகளையும் ஊன்றியவாறு நின்று அவரையே ஒரு கணம் கூர்ந்து பார்த்தான் பரமேசுவரவர்மன். அவனது அடிமனத்தின் ஆழத்திலிருந்து சோகப் பெருமூச்சு ஒன்று விலாவை மோதிக் கொண்டு வெளிப்பட, அவலப் புன்முறுவல் பூத்தான். பிறகு சிறிதும் அச்சமோ பதற்றமோ இன்றி வில்வேலியின் அருகில் போய் ஒற்றை முழந்தாளிட்டு உட்கார்ந்து, அவர் தோளில் புதைந்து நின்ற குறுவாளை வெடுக்கெனப் பிடுங்கி ஆற்றுக்கு அப்பால் வீசியெறிந்தான்.

'ஹா' என்ற முனகல் ஒலி. வில்வேலிதான் அப்படி வலி பொறுக்கமாட்டாமல் ஓலமிட்டார். கத்தி பாய்ந்த புஜத்தில் இரத்தம் குபுகுபு வெனப் பொங்கி நுரைத்தது. ஒரு சகோதரனுக்குரிய பாசப் பரிவோடு தன் மேல் ஆடையின் ஒரு பகுதியைக் கிழித்துக் கத்திக் காயத்தில் வழியும் குருதியைத் துடைத்து அதன்மேல் கட்டுப் போட்டு விட்டு, மண்ணில் புதைந்திருந்த அவர் முகத்தை மெல்லப் புரட்டிக் குனிந்து பார்த்தான் பரமேசுவரவர்மன். அதில் மரணச் சாயை விரவி வருவது தெரிந்தது. பல்லவ மன்னனின் உடலில் ஒரு பரபரப்பு. சட்டென்று பின்னால் திரும்பித் தொலைவில் நின்ற உத்தமசீலியை நோக்கி, ''இளவரசி! சீக்கிரம் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா! விரைவில் வேணும், இளவரசி!'' என்று படபடத்தான்.

புழுக்கமிட்ட மதியப் போதில் துவண்டு நிற்கும் முல்லைக் கொடிபோல் அசையாமல் நின்றுகொண்டிருந்த உத்தமசீலி இதைக் கேட்டு வெறுப்பும் சினமுமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அந்தக் கொடிய பாவிக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கொடுத்தாலும் அது கோடி பாவங்களுக்குச் சமமாகும்! அவன் சாகட்டும்! துடிதுடித்து மடியட்டும்!'' என்று சீற்றத்துடன் கூவினாள்.

பரமேசுவரவர்மனின் முகத்தில் ஓர் இளநகை தவழ்ந்தது. அவன் அங்கிருந்து அமைதியாக எழுந்து போய் ஆற்று நீரைக் கை நிறைய அள்ளி வந்து தளபதி வில்வேலியின் முகத்தில் தெளித்து அவர் வாயிலும் கொஞ்சம் புகட்டினான்.

சில விநாடிகளுக்குப் பின் வேதனைப் பொருமலோடு மெல்லக் கண் திறந்த வில்வேலி மரண பயத்துடன் அங்குமிங்குமாகப் பார்த்தார். பிறகு, தம்மையே பார்த்துக்கொண்டு நிற்கும் பல்லவ மன்னனை மிரள மிரள நோக்கினார். அவர் உடலில் அவரையும் மீறிய ஒரு நடுக்கம் புரண்டது. குருதிச் சேற்றில் கிடந்த தம் கரங்களை நெஞ்சுக்கு நேரே நிமிர்த்திக் குவித்து, ''ஐயோ! என்னைக் கொல்லப் போகிறீர்களா? வேண்டாம்! வேண்டாம்!'' என்று பயப் பிராந்தியுடன் நாக்குழறக் கெஞ்சிக் கரைந்தார் அவர்.

ஜெகசிற்பியன்

பரமேசுவரவர்மன் இதைக் கேட்டு மெல்லச் சிரித்தான். "அஞ்சாதீர்கள் வீரரே! உங்கள் உயிருக்கு நான் ஒரு கெடுதலும் செய்ய மாட்டேன்!" என்று வேதனை செறிந்த குரலில் கூறி மீண்டும் சிரித்தான் அவன்.

வில்வேலி மிரட்சியுடன் திருதிருவெனப் பார்த்துக்கொண்டே எழுந்திருக்க முயன்றார். கத்திக் காயத்தின் கட்டுத் தளர்ந்து மறுபடியும் இரத்தம் ஊற்றெடுத்தது. அவர் மயங்கி மண்ணில் சாய்ந்தார். பிரக்ஞை பிசகிவிட்டது. பிணம் போல் அப்படியே கிடந்தார்.

"எவ்வளவு பெரிய வீரனும் இருந்தால் என்ன? மரண பயம் அவனையும் விடாது போலும்!" என்று தனக்குள் தணிவாக முணுமுணுத்துக் கொண்டு நிமிர்ந்த பரமேசுவரவர்மன் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு கருவேல மரத்தடியில் குதிரையொன்று அரண்டு மிரண்டு நின்றுகொண்டிருந்தது. அது வில்வேலியின் குதிரையாகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு விநாடி யோசனைக்குப் பின் ஏதோ முடிவுக்கு வந்தவனாய், மூர்ச்சித்துக் கிடந்த வில்வேலியைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு அந்தக் குதிரையை நோக்கி நடந்தான் பரமேசுவரவர்மன். அவனைக் கண்ட குதிரை மிரண்டு ஓட முற்பட்டது. அதைப் பிடித்து நிறுத்திச் சாந்தப்படுத்திவிட்டு அதன் முதுகில் வில்வேலியை உட்கார வைத்தான். சவ நிலையிலிருந்த அவரது உடல் துவண்டு குதிரையின் பிடரியில் சாய்ந்தது. அப்படிச் சாய்ந்த வாக்கிலேயே அமர்த்திச் சேணக் கசைகளால் அவரைக் குதிரையின் முதுகோடு பிணைத்துக் கட்டினான். பிறகு குதிரையை நடத்தி அழைத்தவாறு பெருவளநல்லூர்ச் சாலையை நோக்கி நடந்தான்.

மாலை முதிர்ந்து மந்தார நிழல் படர்ந்து வந்த அந்த நேரத்தில் பெருவளநல்லூர்ச் சாலையை அடைந்த அவன், குதிரையைப் பல்லவபுரம் சாலைப் பக்கமாகத் திருப்பி அதைத் தட்டிவிட்டான். மறு கணம் அந்தக் குதிரை பயங்கரமாக ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டே சதை மூட்டையாகத் தன் முதுகில் கட்டுண்டு கிடந்த வில்வேலியைச் சுமந்துகொண்டு பல்லவபுரத்தை நோக்கி வளியென விரைந்தோடியது.

அப்படி ஓடும் அந்தப் புரவியையே சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்ற பரமேசுவரவர்மன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டவாறு சிற்றூற்றங்கரைக்குத் திரும்பி நடக்கலானான்.

அடித்து நிறுத்திய கற்சிலைபோல் அதே இடத்தில் நிலையடைந்து நின்று கொண்டிருந்தாள் உத்தமசீலி.

"இளவரசி! இன்னமும் நீ இங்கேயா இருக்கிறாய்? கவிஞரின் இல்லத்துக்குப் போய் விட்டிருப்பாய் என்றல்லவா நினைத்தேன்!" என்று இளஞ்சிரிப்புடன் கேட்டுக்கொண்டே அவளருகில் வந்து நின்றான் பரமேசுவரவர்மன்.

அவனைக் கோபமாக விழித்துப் பார்த்த உத்தமசீலி மளுக்கென்று வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டு, "அந்தக் கொடிய விஷப் பாம்புக்கு நீங்கள் உதவி செய்திருக்கக் கூடாது அரசே! அவனை அங்கேயே கொன்றிருக்க வேண்டும்! அல்லது அவன் சாகும்படியாவது விட்டிருக்க வேண்டும்!" என்று கடுகடுத்த குரலில் கூவினாள்.

பரமேசுவரவர்மன் இதைக் கேட்டு இதமாகச் சிரித்தான். "அது எப்படி முடியும், கண்ணே! மரணவலைப் பட்டு உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் ஒருவனுக்கு உதவி செய்ய வேண்டியது நம் கடமை யல்லவா?" என்று அவள் முகத்துக்கு நேரே மெல்லக் குனிந்து கேட்டான்.

"அவன் உங்கள் எதிரி! உங்களுடைய ஜன்ம எதிரியையே ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும் சூத்திரதாரி அவன்! அந்த அதர்மனுக்கு உதவி செய்வதே ஓர் அதர்மமாகும்!" என்று முன்னை விட ஆக்ரோஷத்தோடு இரைந்தான் உத்தமசீலி.

பரமேசுவரவர்மன் அவளை மென்மையாகப் பற்றித் தன் பக்கம் திருப்பிக் கொண்டு அவளது இளநுங்கு போன்ற மோவாயைத் தூக்கி அமைதியாகச் சொன்னான்: "அப்படியல்ல கண்ணே! சளுக்கியத் தளபதிதான் என் எதிரி; வில்வேலி என் சகோதரன். அநந்த கோடி மனித ஜீவன்களில் என்னைப் போலவே அவனும் ஓர் அங்கத்தினன்; அதனால் அவனுக்கு நேர்ந்த துன்பம் எனக்கு நேர்ந்தாற் போலவே என்ன



வேண்டியது என் கடமை. எந்தத் தனி மனிதனையும் என் எதிரியாக எப்போதுமே நான் நினைப்பதில்லை! புற வாழ்க்கையில் நேரும் கோபதாபங்களை அக வாழ்க்கையில் சம்பந்தப்படுத்திக் கொள்வதும் இல்லை. 'இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்று எங்கள் தமிழ் மறை கட்டளை யிட்டிருக்கிறது. நான் நம்பும் சமயமும் இதனையே எனக்குப் போதித்திருக்கிறது. இதே வில்வேவியைப் போர்க்களத்தில் வாள் முனையில் சந்தித்திருந்தால் அப்போது நான் நடந்து கொள்ளும் முறையே வேறுவிதமாக இருந்திருக்கும். கரும்புக் கழியை நறுக்குவது போல் வீச்சுக்கு இரு



கோலானின் - குளுமை • கோலானின் - புதுமலர்ச்சி

கோலானின் - நறுமணம்...



டாடாவின்
ஓ டி கோலான்
டாய்லெட் சோப்



பாரதம் முழுவதற்கும்
ஓ-டி-கோலான்
நறுமணம் கூடிய
சோப் இது ஒன்றே.

TESY-59.TAM

துண்டாக வெட்டி வானத்தில் வட்டமிடும் பருந்துக்கு விருந்து வைத்திருப்பேன். அது யுத்த தர்மம். இப்போது நான் செய்ததோ மனித தர்மம்!''

இப்படிக் கூறி அழகாகச் சிரித்த அவன், சட்டென்று முகம் வெளுக்க அடைத்த குரலில் மேலும் சொன்னான்: ''உன்னைத் தேடிவந்த அவன், உன்னுடன் நானும் இருப்பதைக் கண்டு நம் இருவரையும் ஒரே கத்தியால் ஒழித்துக்கட்ட அந்த வழுக்குப் பாறைக்குப் பின்னால் மறைந்திருந்தான் என்பதை நான் அறியாமல் இல்லை, இளவரசி! ஆயினும் அவனுடைய எண்ணத்தை வேறு யாரோ குலைத்த பின், தனது சாவைக் கண்டு அஞ்சி என்னைக் கை யெடுத்துக் கும்பிட்ட பின்னும் நான் அவனைப் பழி தீர்க்க முயன்றிருப்பேனாகில் என்னைப் போன்ற ஒரு கோழையை —கொடிய நெஞ்சம் கொண்டவனை—. வேறு எங்குமே பார்க்க முடியாது என்றாகிவிட்டிருக்கும். இந்த உலகமே எனக்குச் சொந்தமாவதானாலும் அத்தகைய இழிநிலைக்கு நான் ஒருபோதும் தாழ்ந்து போய் விடமாட்டேன்.''

வியப்பின் எல்லை கடந்தவளாய் அவனை வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள் உத்தமசீலி.

'ஐயோ! இத்தனை காலமாக என் சமயக் கொள்கைகளை அணுவும் பிசகாமல் கைக்கொண்டு ஒழுகிவந்த நான் இப்போது அதன் தலையாய நெறியை எத்தனை எளிதாகக் காற்றில் பறக்க விட்டுவிட்டேன்! வில்வேலியைப் பழி வாங்க வேண்டும் என்று சொன்னதன்மூலம் என் சமயத்தின் அடிப்படை தர்மத்தையே மீறிப் போய்விட்டேனே! சைவ சமயத்தைச் சார்ந்த அவரல்லவா இப்போது உண்மையான சமணவாதியாக உயர்ந்து நிற்கிறார்! அன்று நிரமிள சமண சங்கத் தலைவர் சமந்தபத்திரர் இவரைப் பற்றிச் சொன்னாரே, அது எவ்வளவு பேருண்மை!'—வேர்த்து விறுவிறுத்து நடுங்கி முடங்கிய உத்தமசீலி தழுதழுத்த குரலில், ''தயவுசெய்து என்னை மன்னியுங்கள் பிரபு! ஆத்திரத்தில் அறிவு மழுங்கி ஏதோ சொல்லிவிட்டேன்!'' என்று கழிவிரக்க மிகுதியால் குமுறினாள்.

அன்பின் ஆவேசத்தோடு அவளை அணைத்துத் தழுவிய பரமேசுவரவர்மன், ''கவலைப்படாதே, கண்ணே! உன்னுடைய இயற்கை மனப்போக்கு என்ன என்பதை நான் அறிவேன். வில்வேலி உனக்கு இழைத்த பெருங்கொடுமையின் வேதனை இன்னமும் உன்னிடம்



''கொஞ்சம் உங்க ''ஹியரிங்-எய்டை''க் கொடுக்கறீங்களா? பக்கத்து போர்ஷன்லே ஏதோ ரகசியம் பேசிக்கறா. கேட்டுட்டுத் தந்துடறேன்!''

மறையாமல் இருப்பதாலேயே அப்படி உன் சுபாவத்தை மீறிக் கடுமையாகப் பேசிவிட்டாய். நம் மனத்துக்கு இரவு பகல் போன்ற இரண்டு தன்மைகள் உண்டு. கோபம், வஞ்சம், பொறாமை முதலிய கொடிய உணர்ச்சிகளுக்கு நாம் உள்ளாகும்போது மனத்தின் இருண்ட பகுதி செயல்படத் தொடங்குகிறது. அந்த இருண்ட பகுதியைச் செயலற்றதாக வைத்திருப்பதாலேதான் நம்முடைய இகவாழ்க்கையின் வெற்றியே அடங்கியிருக்கிறது. சரி; நேரமாகிறது. வா, போவோம்!'' என்றவாறு மெள்ள நடக்கலானான்.

அவனைப் பின்தொடர்ந்து ஐந்தாறு அடியெடுத்து வைத்த உத்தமசீலி சடாரென்று நின்று பல்லவ மன்னனின் கரத்தைப் இழுத்துப் பற்றியவாறு, ''இங்கே பாருங்கள், அரசே!...'' என்று திகிலுடன் குமுறினாள். நிதானமாகத் திரும்பிய பரமேசுவரவர்மனும் திடுக்குற்று நின்றான்.

அங்கே, இருநூறுக்கும் மேற்பட்ட சளுக்கிய வீரர்கள், ஈட்டி-கத்தி ஏந்தியவர்களாய்க் குதிரையை வாயுவேகமாகச் செலுத்தி வந்துகொண்டிருந்தனர்!

''என்ன இது பிரபு, எதற்காக இந்தச் சளுக்கிய வீரர்கள் இப்படி வெறி கொண்ட பேய்கள் போல் விரைந்து வருகிறார்கள்?'' என்று அச்சத்தால் குரல் நடுங்கக் கேட்டாள் உத்தமசீலி.

அதற்குள் அந்தக் குதிரைப் படை பெருவளநல்லூர்ச் சாலையில் திரும்பிச் சேதியக் கலைஞரின் இல்லத்தை நோக்கிப் பறந்தது.

ஓங்கிப் பெருமூச்சு விட்ட பரமேசுவரவர்மன் மெல்லத் தலையசைத்து, ''ஓகோ! பின்னால் தன் படை வீரர்களை வரச் சொல்லிவிட்டு முன்னால் வந்திருக்கிறான் வில்வேலி; அவனுக்கு நேர்ந்த கதியை வழியில் கண்டறிந்து நம்மை வளைத்துப் பிடிக்கவோ, அல்லது சேதியக் கலைஞரின் இல்லத்தை முற்றுகையிடவோதான் அந்தக் குதிரைப் படை அத்தனை வேகமாக வருகிறதுபோலும்!'' என்றான் கலவரத்துடன்.

''என்ன சொன்னீர்கள், அரசே? சேதியக் கலைஞரின் இல்லத்தை வளைத்துக்கொள்ளப் போகிறார்களா?...... ஐயையோ! ...... அங்கே .... அங்கே.. என் உயிர்ப் பொருள் ஒன்று இருக்கிறதே!'' என்று பதறியவாறு அங்கிருந்து ஓட முயன்றாள் உத்தமசீலி.

அதிர்ச்சியுற்ற பரமேசுவரவர்மன் பாய்ந்து போய் அவளை வளைத்துப் பற்றி, ''எங்கே போகிறாய், இளவரசி? வேண்டாம்! நீ அங்கே போக வேண்டாம்! போனால் ஆபத்து நேரும்! சொல்வதைக் கேள்!'' என்று படபடத்தான்.

''தடுக்காதீர்கள், அரசே! நான் போய்த்தான் ஆக வேண்டும்! தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்!'' என்று கூறிக்கொண்டே தன் பூவுடலை முறுக்கித் திமிறி அவனது பிடியிலிருந்து நழுவிக்கொண்டு சேதியக் கலைஞரின் இல்லத்தை நோக்கிக் கண்மண் தெரியாமல் ஓடினாள் உத்தமசீலி.

சற்றுத் தூரம் அவள் பின்னாலேயே ஓடிய பரமேசுவரவர்மன் பிரமை பிடித்தவன் போல் அப்படியே திகைத்து விறைத்து நின்றுவிட்டான்.

அத்தியாயம் இருபத்தாறு

நந்தி இலச்சினை

காணும் இடமெல்லாம் ஒரே காரிருளாக இருண்டு கிடந்த அந்த நிலவறையின் படிக்கட்டில் மயங்கிப் படுத்துக் கிடந்த இளங்காரிக்குடையான் தட்டுத் தடுமாறி எழுந்து உட்கார்ந்தான்; பசி அவன் காதை அடைத்தது; தாகம் தொண்டையை வறளச் செய்தது. கண்கள் இருண்டு, ஏற்கனவே இருள் மண்டிக் கிடந்த அந்த நிலவறையை இன்னும் இருட்டாக்கிக் காட்டின. தலை சுற்றியது. சிந்திக்கும் திராணியையே சிறுகச் சிறுக இழந்துகொண்டிருந்தான் அவன். எத்தனை இரவு, எத்தனை பகல் கழிந்திருக்கிறதென்று கணக்குக் கூட அவனுக்குத் தெரியவில்லை. எங்கும் அந்தகாரமே விரிந்து கிடக்கும் அந்த இருட் குகையில் இரவாவது, பகலாவது!

அவன் தன் தாயை நினைத்தான். அடிமைப்பட்டுக் கிடக்கும் தன் அருமை நாட்டை நினைத்தான். தன் உயிரை விட மேலாக நேசித்துப் போற்றிய பல்லவ மன்னனையும், பல்லவ இளவரசனையும், சந்திரலேகைச் சிற்றரசரையும் நினைத்தான். அவன் கண்கள் குளமாயின. 'அவர்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ?' என்று எண்ணியபோது அவன் வாய்விட்டு அலறிக் கதறிவிட்டான். திடீரென்று பழையாறைச் சோழரின் நினைவு வந்தது. அந்த நினைவையொட்டிப் பரவாதிமல்லரையும் அவன் நினைத்தான். பயங்கரமாகப் பற்களைக் கடித்து, ''பாவிகள்! அந்தத் துரோகிகள் மட்டும் இப்போது என் எதிரே வந்தால் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவர்களுடைய குரல்வளையைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சி விடுவேன்!'' என்று உறுமிக் கர்ஜித்துக்கொண்டே திமிறி எழுந்தான். மறு கணம் தடாலெனக் கீழே சாய்ந்தான். அப்படிச் சாய்ந்தவன் கடகடவெனப் படிகளில் உருள ஆரம்பித்துவிட்டான்.

உருண்டுகொண்டே போன இளங்காரி ஓரிடத்தில் போய் மடாரென முட்டிக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! அவன் விழுந்த இடத்தில் பளிச்சென ஒரு வெளிச்சம் வந்து விழுந்தது!

அவன் அடித்துப் பதறி எழுந்தான். கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். எங்கோ மேலேயிருந்து அந்த ஒளிக் கற்றை கீழ் நோக்கி வந்து கொண்டிருந்தது. அது விளக்கின் ஒளி அல்ல; மங்கிய மாலைப் போதின் சன்னமான ஒளி தான்; ஆனால் இரண்டு நாட்களாக ஒளியையே ஸ்பரிசிக்காத அவன் கண்களுக்கு அந்த மங்கிய ஒளி கோடி சூரிய ஒளியாகப் பிரகாசித்தது.



எனக்கு உண்மையிலேயே ஒரு பாங்குக் கணக்கு தேவையா ?



அவசியம் உங்களுக்குத் தேவைதான். உங்களுடைய சேமிப்புகளை பாங்கில் வைத்திருப்பதால் அவற்றிற்கு வட்டி சேருகிறது. தவிர, அவை திருட்டுப் போகாமலும் தொலைந்துவிடாமலும் பத்திரமாய் இருக்கும். பாங்கில் கணக்கு வைத்திருப்பதால் அது மேலும் உங்களை சேமிக்கத் தூண்டலாம்.

ஆனால் ஒரு அவசர நிலையில் எனக்குப் பணம் தேவைப்படும்போது, என்ன செய்வது?

நீங்கள் சுலபமாக-பாங்கிலிருந்து முன்னறிவிப்பின்றி துரிதமாய்-பணம் எடுக்க முடியும். வருங்காலத் தேவைக்குப் பயன் படவே சேமிப்புகள் இருக்கின்றன.

ஆனால், எங்களிடம் அதிகப் பணம் இல்லையென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

அதனால் பரவாயில்லை. மிகக் குறைந்த தொகையான ரூ. 5 வைத்துக்கொண்டுகூட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் ஒரு சேமிப்புக் கணக்கு நீங்கள் ஆரம்பிக்கலாம்.

உண்மையாகவா?

ஆம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில்தான். தேசம் முழுவதும் 1000 க்கு மேற்பட்ட ஆபீஸ்களை உடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா நாட்டிற்குச் சேவை செய்துகொண்டிருக்கிறது. மேற்கொண்டு என்னவென்றால், உங்களுடைய சேமிப்புகளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் போட்டு வைப்பதால் உங்களுக்குச் சொந்த அனுகூலங்கள் ஏற்படுவதைத் தவிர, தேசப் பொருளாதார அபிவிருத்தியில் நீங்களும் பங்கு எடுத்துக்கொண்டதாக ஆகும்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவா?

ஆம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாதான்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இந்தியாவின் தலைசிறந்த பாங்கு

TAS SBTA 3-23-38A

பரபரப்புடன் அங்குமிங்குமாகப் பார்த்தான் இளங்காரி. பழையாறைச் சோழர் சொன்னது அவ்வளவும் உண்மைதான்; அந்தப் பிரம்மாண்டமான நிலவறை யெங்கும் போர்க் கருவிகளாகவே குவிக்கப்பட்டிருந்தன!

கணையம், கோல், குந்தம், சதக்னி, தள்ளி வெட்டி, கவிற்றுப் பொறி, எரி சிரல், ஐயவித்துலாம், தொடக்கு, ஆண்டலை, கல்லுமிழ் கவண், கருவிரலூகம், மழு, வாள், கவசம், தோமரம், கதை, தண்டம், நாராசம், இருப்பு முள், கழுமுள், கூன்வாள், சிறுவாள், கொடுவாள், அரிவாள், குத்துவாள், குறுவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கழல்படை, கோடரி, தோட்டிவேல், வச்சிரம், குறுந்தடி, ஈட்டி, கவண், சிறுசவளம், பெருஞ்சவளம், சக்கரம், கன்னம், உளி, பாசம், தாமணி, சாலம், ஊசிமுகண்டி, முசலம், இடங்கணி, அன்பகை — அடேயப்பா! எத்தனை வகையான போர்க் கருவிகள்! கண்ணுக்குப் புலனானவை இவ்வளவே; இன்னும் என்னென்ன கருவிகள் எங்கெங்கே குவிந்து வைக்கப் பெற்றிருக்கின்றனவோ!

திக்குமுக்காடித் திணறி நின்ற இளங்காரி, தன் அருகில் குவிந்திருந்த கைவாள் குவியலில் ஒரு வாளை எடுத்து மங்கிய வெளிச்சத்தில் பார்த்தான். அந்த வாளின் கைப்பிடியில் புதிதாகப் பல்லவ நந்தி இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது.

வியப்பு மேலிட்டவனாய் வேறொரு கருவியை எடுத்துப் பார்த்தான். அதிலும் நந்திச் சின்னமே பதிக்கப்பட்டிருந்தது. மேலும் சில கருவிகளை எடுத்து நோக்கினான். எல்லாவற்றிலும் நந்தி இலச்சினை பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. வீரர்கள் அணிவதற்கென்று புலித் தோலாலான கவச அணிகளில் ஒன்றை எடுத்துப் பார்த்தான். அந்த அணியிலும் நந்தி முத்திரையே குத்தப் பெற்றிருந்தது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'சளுக்கியருக்காகப் பழையாறைச் சோழர் திரட்டி வந்து குவித்திருக்கும் இந்தப் போர்க் கருவிகளிலும், போர்க் கவசங்களிலும் பல்லவருக்குரிய நந்தி இலச்சினை பொறிக்கப்பட்டிருப்பது ஏன்? சளுக்கியரின் வராகச் சின்னமோ, சோழரின் புலிச் சின்னமோ அல்லவா இவற்றில் பதிக்கப் பெற்றிருக்க வேண்டும்?'

குழம்பி நின்ற அவன், தன் எதிரே தெறித்திருந்த ஒளி சிறுகச் சிறுக மங்கலாவதைக் கண்டு திகிலுற்றவனாய் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தான். தான் வந்த வழி இருண்டு கிடக்க, எதிர்ப் பக்கம் செங்குத்தான படிக்கட்டு ஒன்று இருப்பது இலேசாகப் புலப்பட்டது. அந்தப் படிக்கட்டின் வழியாகவே அவ்வெளிச்சம் வந்து, இப்போது சுருங்கிக்கொண்டிருப்பதாகவும் தோன்றியது.

இளங்காரி தன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு அந்தப் படிக்கட்டை நோக்கி விரைந்தோடினான். இரண்டோர் இடங்களில் பலமாக முட்டி மோதியும் கொண்டான். உடலின் பல இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டுக் குருதி கசிவதை அதன் சில்லென்ற ஸ்பரிசத்தால் உணர்ந்துகொண்டான். ஆயினும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு மளமளவென மேலே ஏறினான்.

நீண்ட நேர நடைபெறலுக்குப் பின் தடாலென்று ஓர் அறையில் வந்து விழுந்தான் அவன். விழுந்த அதே வேகத்தில் துள்ளி எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அது ஓர் அழகிய பூஜை அறையாக விளங்கியது. ஆமாம்; சேதியக் கலைஞரின் இல்லத்தில் பல்லவ மன்னனுக்காக அமைந்திருந்த பூஜை அறைதான் அது. அந்த அறையின் ஒரு மூக்கோண பெரிய மாடமே அந்நிலவறைக்கு மறு வழியாய் இருந்தது. அந்த மூக்கோண மாடத்தின் முகப்பிலும் ஒரு செப்புச் சிலை விளக்கு ஏந்தி நின்று கொண்டிருந்தது.

குளிர்ந்த காற்றை ஓங்கி இழுத்துச் சுவாசித்ததால் ஓரளவு தெம்பு பெற்ற இளங்காரி அவ்வறையை விட்டு அடுத்த கூடத்து அறைக்குப் பாய்ந்து வந்தவன் ஏதோ பயங்கரக் காட்சியைக் கண்டவன் மாதிரி அப்படியே மிரட்சியுற்று நின்று விட்டான்.

ஆமாம்; அந்தச் சேதியக் கலைஞரின் இல்லத்தை வளைத்துச் சூழ்ந்துகொள்வதற்காக நாலாபுறமுமிருந்து சளுக்கிய வீரர்கள் வாயு வேகமாகத் தம் குதிரைகளைச் செலுத்தி வந்து கொண்டிருந்தார்கள்! இந்நிலையில், சிற்றாற்றங் கரைப் பக்கமிருந்து ஒரு பெண் அந்த இல்லத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தாள்!

'யார் அந்தப் பெண்? ஆந்திர இளவரசி உத்தமசீலி அல்லவா அவள்?'

குலைநடுக்கம் கொண்டுவிட்ட இளங்காரி குபீரெனப் பாய்ந்து சாளரத்துப் பின்புறத் தோட்டத்துப் பக்கமாக ஆற்றங்கரையை நோக்கி வேகமாக ஓட்டமெடுத்தான். (தொடரும்)

''அட, கடவுளே! பேரக் குழந்தைகளுக்காக
வாங்கின பாரி மிட்டாயில் பாதிக்குமேல்
நானே சாப்பிட்டு விட்டேனே!''



பாரி மிட்டாய்க்கான ஆசையை அடக்கவே முடியாது.
அனைவரும் அதை விரும்புவதின் காரணம் அது ருசி
மிக்கதாயும், சத்து நிறைந்ததாயும் இருப்பதால்தான்

இவ்வகைகளை ருசித்துப் பாருங்கள்,
லாக்டோ பான்பான்ஸ் • ஹெல்த் ப்ரூட்ஸ்
காபி டாபி • ஸுபர் பட்டர்ஸ்காட்ச்

பாரி

மிட்டாய்தானா என்று கவனித்து வாங்கவும்.
காகிதஉறை மேல் பெயர் இருக்கும்

Parry's

தயாரிப்பாளர்கள்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

பேச்சுள்ளவரை பாடுவார்

பாலக்காடு மணி அய்யர்

பூரணத்துவம் பெற்ற ஒரு வித்துவானைப் பற்றிப் பேசுவதோ, எழுதுவதோ பூரணத்துவத்தை அடையாது. ஆகையால் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இசை பாடிவரும் ஸ்ரீ ஐயங்கார் அவர்களைப் பற்றி எழுதுவதோ பேசுவதோ முழுமையடையாது. இதே காரணத்தால் ஐயங்கார் அவர்களைப் பற்றித் தைரியமாக நிறையச் சொல்லலாம். ஏனெனில், அவரது சங்கீதத்தை எவ்வளவு ஸ்தோத்திரம் செய்தாலும் உண்மைக்குப் பங்கம் வராது. உண்மைக்குக் கைங்கரியம் செய்ததாகவே இருக்கும்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்களுடைய சங்கீதத்தின் முக்கிய அம்சம், அளவு. அதாவது இந்த அம்சம் இப்படி இருக்க வேண்டும் என்று துலாக்கோல் பிடித்தாற்போல் நிர்ணயம் செய்து அதனை வழுவாது பின்பற்றுவது. இந்த 'அளவு' என்பது அவரது சங்கீதத்தில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும், எப்படிப் பிரித்துப் பார்த்தாலும், அதிகப்படாமலும், குறைவுபடாமலும், கச்சிதமாகவும், துல்லியமாகவும் இருக்கும். முதலாவது, நாதத்தை வெளிப்படுத்தும் முறையில் — 'வயுண்டு கொடுப்பது' என்கிறார்களே, அதில் — சப்தத்துக்கு எவ்வளவு அழுத்தம் கொடுப்பது என்பதில் ஓர் அளவுபடுத்தப்பட்ட ஒழுங்கை அவரது இசையில் கேட்கிறோம். இரண்டாவது, ஸாஹித்தியம் ஸ்வரம் முதலியவைகளைப் பாடும்பொழுது, அதிக அழுத்தமில்லாமலும், அதிக குறைவு இல்லாமலும் அளவு சரியாயிருக்கும்படி பாடுவது.

நாதத்திலும் உச்சரிப்பிலும் அளவிருப்பது போலவே மூன்றாவதாக, தாளத்திலும் ஓர் அளவு. சங்கீதத்துக்கு முக்கியமான அம்சமாயிருக்கும் மத்திமகால நடையில் இந்த அளவைப் பின்பற்றுகிறார் ஸ்ரீ ஐயங்கார். 'இரண்டும் கெட்டான் காலப்பிரமாணம்' என்று ஒரு காலப்பிரமாணம் உண்டு. இதில் என்ன சங்கடமென்றால், மேற்காலம் சரியாகப் பேசுவது கஷ்டம். சிற்சில காலத்தில் நிலைக்காமலும், நிறைவுபடாமலும் காலப் பிரமாணம் நிற்காமல் ஓடிப் போய் விடும். வாய்ப்பாட்டானாலும் சரி, வாத்தியங்களானாலும் சரி, இந்த இரண்டும் கெட்டான் காலப் பிரமாணத்தில் சரளமாகவும் சிரமமில்லாமலும் விளையாட்டுப் போல் பாடவோ, வாசிக்கவோ திறமிருந்தால்தான் சாரீரமோ, வாத்தியமோ வித்துவானுக்கு ஓரளவு ஸ்வாதீனப்பட்டதாகச் சொல்லலாம். இந்த 'இரண்டும் கெட்டான்' காலப் பிரமாணத்தை ஸ்ரீ ஐயங்கார்வாள் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார். இந்தக் காலப்பிரமாணத்தில் உள்ள உருப்படிகளை அவர் பாடும் பொழுது அவை தனிச் சிறப்புடன் விளங்கும்.

இவ்வளவு காலமாகப் பாடும் ஸ்ரீ ஐயங்கார், இப்பேர்ப்பட்ட மேதையாக இருக்கும் ஸ்ரீ ஐயங்கார், தமது இசையில் எவ்வளவோ புதுமைகளைச் சேர்க்கலாம் என்று சிலர் சொல்லி நான் கேட்டதுண்டு. அப்படிச் சொல்பவர்கள் மேலெழுந்தவாரியாகத்தான் அவரது பாட்டைக் கவனித்திருக்கிறார்கள். இவர்களுக்குத் தகுந்த பதில் சொல்ல முடியும். அதாவது அவருக்குப் புதிதாகப் பல விஷயங்கள் தோன்றவே செய்கின்றன; ஆனால் அப்படித் தோன்றும்போதே இவை நீண்டகாலமாக அவரிடம் ஊறியுள்ள பழைமை அம்சம்போல அவ்வளவு பக்குவத்துடன் இருக்கும். அதாவது, நூதன அழகுகளும் புராதனப் பொலிவுடன் விளங்கும். மேலும், நாத வித்தையில் புதிது புதிதாகச் செய்வதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை; செய்ததையே திரும்பத் திரும்பத் தபஸ் பண்ணுவது போலச் செய்து அருள் பெறுவது தான் முக்கியம் என்பது என் அபிப்பிராயம்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் பிராசீனமான மகா வித்துவான்களின் வாய்ப்பாட்டு, வாத்திய இசை முதலியவற்றைக் கர்ண பரம்பரையாகக் கேட்டு அவைகளிலிருக்கும் நல்ல அம்சங்களை நிச்சயம் செய்து சுவாதீனப்படுத்திக் கொண்டவர். இப்பொழுது மாறிக் கொண்டு வரும் நவீனம் அவரது சங்கீதத்தைக் கொஞ்சம்கூடக் கெடுக்கவோ கலப்படமாக்கவோ முடியாது.

ஸ்ரீ ஐயங்கார் அவர்களுடன் ரயிலிலும், மற்ற இடங்களிலும் பிரயாணம் செய்யும் பொழுது அநேகமாக அவர் கூறுவதெல்லாம்

'ஆகிவந்த' பக்க வாத்தியங்களாகிய ஸ்ரீ சௌடையா வயலினுடனும், கட்டுரை ஆசிரியர் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் மிருதங்கத்துடனும் ஸ்ரீ அரியக்குடி.




25 வருடத்திற்கு இனிக் கவலையில்லை

25 வருடத்திற்கு தனது போக்குவரத்து பிரச்னையைத் தீர்ப்பதற்கு சிறந்ததொரு சைக்கிள் வேண்டியிருந்தது இவருக்கு. இவர் தேர்ந்தெடுத்தது எந்த சைக்கிள் தெரியுமா? சந்தேகமில்லை, ஹெர்குலிஸ் தான். அதன் அருமை அவருக்குத் தெரியும். இந்தியாவில் இருபது லக்ஷம் சைக்கிளுக்கு மேல் இதுவரை தயாரித்ததால் உண்டான சீரிய அனுபவமும், உலகிலேயே மிகப் பெரிய சைக்கிள் தயாரிப்பாளர்களான ட்யூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் (இங்கிலாந்து) ஸ்தாபனத்தின் தொழில் நுட்பக் கூட்டுறவும் சேர்ந்து உருவாக்கியுள்ளது இந்த ஈடற்ற சைக்கிளை.

ஹெர்குலிஸ்

வெறும் சைக்கிள் மட்டுமல்ல—
வாழ்நாள் முழுதும் உழைக்கும்
ஓர் சுற்றுலை.



டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதறாஸ்

JWT/TIC/ 34 2047

சங்கீதப் பேச்சுக்களாகவே இருக்கும்; அல்லது பாடிக் காண்பிப்பார்கள். பழைய சம்பிர தாயப் பல்லவிகள் பலவற்றை இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவர் பாடி நான் கேட்டிருக் கிறேன். இவைகளில் சில பல்லவிகள் அதிக லய வின்யாசங்களுடன் இருக்கும். அவர் எந்தக் கடினமான வேலையைச் செய்வதா யிருந்தாலும் அதைப் பரம லளிதமாகச் செய் வார். லளிதமாக்க முடியாத வேலையை விட்டு விடுவார். அதுவும் அளவுக்கு அடங்கியிருக் கும். அவர் சங்கீத சம்பந்தமாய் என்ன செய் தாலும் அதில் அழகும் லளிதமும் மிளிரும்.

சங்கீத உலகில் அவர் குன்றாப் புகழுடன் இவ்வளவு காலம் பாடிக் கொண்டிருப்பது பூர்வ ஜன்ம புண்ணியமென்றும் கடவுள் அனுக்கிரகமென்றும் நிச்சயமாய்ச் சொல்ல லாம். ஆனால் இதைத் தவிர நம் கண் ணுக்குப் புலப்படுவது வேறு ஒன்றிருக்கிறதா? அது என்னவென்றால் அவருக்குக் கர்வம் என் பதே கிடையாது. அந்த விநயம் வித்தை யுடன் கூடியிருப்பதால்தான் அவர் இவ்வளவு கீர்த்தி பெற்றுள்ளார்.

ஐயங்கார் அவர்களுக்குப் பாடுவது என்றால் விசேஷ சிரமம் கிடையாது. பேசுவதற்கு எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமம்தான் பாடுவதற்கும். ஆகையால் பேசிக்கொண்டிருக்கும் வரையில் அவர் பாடிக் கொண்டிருப்பார் என்பது நிச்சயம்.

அய்யர்வாள் வழிவந்த அய்யங்கார்

ஸி. வி. நரசிம்மன்

(கி. கா. சபை நிர்வாகக் காரியதரிசி)

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அவர்கள் ஐம்பதாண்டுகளாக, கர்நாடக இசைக்கு இடையறாமல் புரிந்துள்ள மகத் தான, தனிச் சிறப்பு வாய்ந்த பணியினைப் பாராட்டி விழா எடுக்கப் போகிறார்கள் என்பதாகக் கேள்விப்பட்டவுடன் அவ ரைப் பற்றி ஒரு நல்ல கட்டுரை எழுத வேண்டும் என்று நான் மகிழ்ச்சியுடன் நினைத்தேன். ஆனால் அந்தக் கட்டுரையை எழுத்தில் வடிப்பதற்காக நான் இப்போது உட்காரும் போதுதான் நான் எடுத்துக் கொண்டுள்ள காரியம் அவ்வளவு எளிதான தல்ல என்று காண்கிறேன். அவரைப் பற்றி அவ்வளவு சொல்ல வேண்டியிருக்கிறது! இந்த அரை நூற்றாண்டில் நான் முப்ப தாண்டுகளுக்கு முன் பிருந்து ஸ்ரீ அய்யங்காரின் இசையைக் கேட்டுக் களிப் படைந்திருக்கிறேன். அப் போது நான் திருச்சிராப் பள்ளியில் ஒரு மாணவன். நூற்றுக்கால் மண்டபத் தில் கிருஷ்ண கான சபை யினர் மாதாமாதம் கச் சேரிகள் நடத்துவார்கள். அதுதவிர, சங்கீத கலாநிதி ஸ்ரீ மருங்காபுரி கோபால கிருஷ்ண அய்யர் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் ஆண்டு தோறும் தியாகராஜ உத் ஸவம் நடத்துவார். ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் இரண்டு அரங்கிலும் தவ றாமல் பாடுவது வழக்கம். அவருடைய கச்சேரிக்காக நாங்கள் ஆர்வம் மீதூறக் காத்திருப்போம். எங்க ளுடைய அந்த ஆர்வத்தை அவர் ஒரு போதும் ஏமாற்றியதே இல்லை.



ஸ்ரீ அய்யங்கார்
"வித்தையும் விநயமும்"

அன்றுதொட்டு இன்று வரை ஒரே சீராகப் பாடி வருகிறார் என்பதுதான் ஸ்ரீ அய்யங் கார் அவர்களிடம் முதலாவதாகக் குறிப்பிட வேண்டிய விசேஷ அம்சம். பெருமை பொருந்தியதொரு குரு சிஷ்ய பரம்பரையில் உதித்தவர் அவர். அவருடைய குரு ஸ்ரீ பூச்சி ஸ்ரீநிவாச அய்யங்கார். 'பூச்சி' அவர்கள் பட்டணம் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரின் சிஷ்யர். பட்டணம் அய்யர் அவர்களோ சாக்ஷாத் தியாகராஜ ஸ்வாமிகளின் சீடர். ஆகவே ஸ்ரீ அய்யங்கார் அவர்கள், அய்யர் வாள் எனப்படும் தியாகப் பிரம்மத்தின் வழி வந்தவர். ஸ்ரீ 'பூச்சி' அவர்கள் பாடக் கேட் கும் பாக்கியம் எனக்கில்லாவிடினும் அவர் இயற்றிய கிருதிகள், ஜாவளிகள் இவற்றைக் கொண்டு அவரது இசை ஒளியின் ஒருசில கீற்றுக் களை உணர்கிறேன். அதிலிருந்து ஸ்ரீ அய்யங் கார் அவர்கள் ஓர் உயரிய மரபின் வாரிசு என்பதைக் காண்கிறேன். தாம் எடுத்துக் கொண்டுள்ள பணியில் ஒரு தீவிரமான ஈடுபாடு, தமது அகச் சிறப்புக்களை யெல்லாம் வெளியே பரப்ப வேண் டும் என்ற துடிப்பு, அபாரமும் தன்னம்பிக்கையும் உள்ள போதிலும் வித் தையை விநயத்துடன் அணுகும் பாண்மை — இவற்றை இந்த மரபி லிருந்து பிதுரார்ஜிதமாகப் பெற்றிருக்கிறார் ஸ்ரீ அய் யங்கார். அவர் ஒரு சீராக உன்னதமான நாதத்தைக் காத்து வருவதற்கும், பல சமயங்களில் மகோன் னதமான இசைப் பெருமை



ஸ்ரீமான்கள் அன்னாஸ்வாமி பாகவதர், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் ஆகியோருடன் அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார்

களை எய்துவதற்கும் இந்த மரபே காரணம். பொது மேடையில் பசிறும் இதர கலைஞர்கள் போல் சங்கீத வித்வான்களும் தாங்கள் ஒப்புக் கொண்ட நிகழ்ச்சியை நிறைவேற்ற முடியாமல் போவதுண்டு. வாய்ப்பாட்டு வித்துவான்கள் விஷயத்தில் இது சகஜமாகும். ஏனெனில் மானுட சாரீரமானது எந்த இசைக் கருவியையும் விடச் சக்தியுடன் மக்களின் இதயத்தைத் தொட்டு விடுகிறது என்றாலும், இசைக் கருவிகளைப் போலன்றி மனிதக் குரலானது இடக்குச் செய்கிற சந்தர்ப்பங்களும் உண்டு. நம்ப முடியாத சாதனை அது. இப்படியிருந்தும் ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் தமது நீண்ட இசை வாழ்வில் தேக நலமின்றியோ, குரல் சரியில்லாததாலோ எந்தக் கச்சேரியையும் ரத்து செய்ததாக நான் கேட்டதில்லை. சீரான அவருடைய வாழ்க்கைக்கும், ஆரோக்கியத்துக்கும் இது நிச்சயமாக ஒரு சான்றாகும்.

ஸ்ரீ அய்யங்காருடைய கலையில் மற்றொரு சிறப்பு அம்சம் அவருக்கு ஏராளமான உருப்படிகள் பாடமாகி யிருப்பது. இன்றைய கலைஞர்களில் பலர் சுமார் நூறு உருப்படிகளுக்கு மேல் பாடம் பண்ணியிருப்பதில்லை. ஆனால் அய்யங்கார் அவர்களுடைய எல்லை மிகவும் விஸ்தாரமானது. எனக்கு ஒரு சம்பவம் நினைவு வருகிறது—1948ம் ஆண்டு கோடைக்காலத்தில் ஒரு நாள் மாலை. நான் அப்போது தேவகோட்டையில் டெபுடி கலெக்டராக இருந்தேன். தோடி என்ற ஒரே ராகத்தில் ஸ்ரீ அய்யங்கார் பாடியுள்ள கிருதிகளைத் தொகுத்தேன். இதில் ஸ்ரீ அய்யங்காரே எனக்கு உதவினார். அப்படிச் சுமார் எழுபது கிருதிகள் இருந்தன! 'எல்லா அருமைகளும்' என்ற தோடி ராகப் பதத்தையும் நான் குறித்துக் கொண்ட போது நான் கேட்டுக் கொண்டதன் மேல் அவர் அதை அப்போதே பாடிக் காட்டினார். அதோடு மட்டுமின்றி அது வரை நான் கேட்டிராத ஓர் அதிகப்படி சரணமும் பாடினார். இவ்வளவு உருப்படிகள் அவருக்குப் பாடமாகி யிருப்பதால்தான் அவரால் நிகழ்ச்சி நிரலை அடிக்கடி மாற்றி, தமது கச்சேரியை விடாமல் கேட்கிற ரசிகர்களையும் ஆகர்ஷிக்க முடிகிறது. தொடக்கத்திலிருந்து முடிவுவரை, வர்ணத்திலிருந்து மங்களம் வரை, அவருடைய கச்சேரியை ஜீவநதிபோல புதுமைப் பொலிவுடன் சுவாரசியம் குன்றாமல் செய்யும் அம்சங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த சுவாரசியத்தை உண்டாக்காத கச்சேரி என்பதே அவரது இசை வாழ்வில் கிடையாது. சென்ற ஜனவரியில் என் பெண்ணுடைய விவாகத்தின்போது நான் கேட்டுக்கொண்டதன் மேல் அவர் இரண்டு மங்களங்கள் பாடினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஸ்ரீ அய்யங்காரின் மூன்றாவது தலைசிறந்த பெருமை அவருக்கு லயத்திலுள்ள தேர்ச்சியாகும். நெருடலான ஒரு பல்லவியை அவர் பாடிக் கேட்பது மட்டுமின்றி, அதனைக் காண்பதும் ஒரு விருந்தாகும். அச்சமயங்களில் அவருடைய உடலின் ஒவ்வோர் அங்கமும் — காதும், கால் விரலும் உள்பட — லயத்தில் சஞ்சரிப்பதாகத் தோன்றும். ஏதோ 'பாலே' நடனக் கலைஞர் போலவே அவர் காணப்படுவார்.

ஒப்பற்ற மிருதங்க வித்வான்கள் உள்பட அந்தத் தாள வாத்தியத்தில் தேர்ந்தவர்கள் யாவரும் ஸ்ரீ அய்யங்காருக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஸ்ரீ அய்யங்காரின் பல படித்தான ஆற்றல்களின் பல வேறு கோணங்களைப் பற்றி நான் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக்கொண்டு போகலாம். அதிலும், இவ்வளவு தொலைவில் இருக்கும்போது, அவருடைய இசையை நுகர்ந்து, ஆனந்தம் அநுபவித்த பொன்னான பல பொழுதுகளின் நினைவு என்னுள் வெள்ளமாக வருகிறது; அவற்றைப் பற்றி எழுதுவது எனக்கு ஒரு திருப்தியை அளிக்கிறது. ஆனால் என்னைவிடத் தகுதி வாய்ந்த வேறு பலரும் அவருக்குப் பாராட்டு நல்குவார்கள் என்பது எனக்குத் தெரியுமாதலால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார் அவர்களை நான் ஒரு மகாவித்துவானாக மட்டும் கருதவில்லை. அவர் அன்பு நிறைந்த ஒரு மனிதர், போலித்தனம் கலவாத ஓர் உண்மையான மனிதர், நல்லதொரு நண்பர் எனக் கருதுகிறேன்.

சங்கீத ரத்னாகர ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் தமது ரசிகர்களுக்கு ஆனந்தமளிக்கவும் பரமாத்மாவின் புகழைப் பாடுவதற்கும் **நீண்ட நெடுங் காலம் வாழ்வாராக!**

நாவில் நீர்சுரக்க
உள்ளம்
உவகை பெற



எப்பொழுதும்

OK

கோல்டன்


ஸாலட் ஆயில்

உபயோகித்து
உங்கள் உணவைத் தயாரியுங்கள்
சாதத்திற்கும் தித்திப்புப் பண்டங்களுக்
கும் மிகச் சிறந்த சமையல் சாதனம்
சுத்தமாகப் பாக் செய்யப்பட்டு
3 வசதியான குடும்பத்திற்கேற்ற
சைஸ்களில் கிடைக்கின்றது.



OK பரிசுக்
கூப்பன்களை
சேகரியுங்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக்
கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்.
சென்னை - 1



பெரிய சைஸ்

கோத்ரெஜ் நெ.1

முதல் முதலாகத் தயாரித்த தாவர எண்ணெய் ஸ்நான சோப். இன்றும் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்தது.



மிக ரம்மியமான ரோஜாவின் நறுமணம் கொண்டது

கோத்ரெஜ் சோப்புகளில் புகழ் பெற்ற பெயர்

குடிகூரா ஆயின்ட்மென்ட்

ஒரு நூற்றாண்டுக்கு மேல் சருமப் பராமரிப்பை அளித்து வருகிறது




நூற்றுப்பத்து வருஷங்கள்! அவ்வளவு நெடுங்காலந்தான் குடிகூரா ஆயின்ட்மென்ட் உலகெங்கிலும் உபயோகிக்கப் பட்டு வருகிறது.

குடிகூரா ஆயின்ட்மென்ட் களங்கமேற்படுத்தும் கிருமிகளை நசித்து, அதனால் கருப்பு மச்சங்களையும், சருமத்தின் மேலாக உண்டாகும் பருக்களையும் அறவே நீக்கி, உங்களுக்கு இத்தகைய சரும உபாதைகளிலிருந்து நீடித்த பாதுகாப்பை அளிக்கிறது. அதன் உயரிய கிருமி நசிக்கும் சக்தியுடைய தைலங்கள் புண்கள், வெளிச் சொறி சிரங்குகள், பூச்சிக்கடிகள் இவற்றை சமனப்படுத்துவது டன் வெட்டுக் காயங்களையும் சுட்ட புண்களையும் எக்ஸிமா சொறியையும் குணமாக்க உதவுகிறது.

குடிகூரா ஆயின்ட்மென்ட்

ஒரு டப்பா குடிகூரா டால்கம் பவுடரையும் வாங்குங்கள்— அது குடும்ப முழுவதற்குமேற்ற ஒரு சர்வ-காரிய டால்கம்



NATIONAL CD



12. தலைசுற்றல் மயக்கம்

(நிர்மலமானவர்)

எக்காரணத்தால் ரத்தக் குறைவு ஏற்பட்டதாயினும் இரும்புச் சத்துள்ள பொருள்களை மருந்தாகவோ ஆகாரத்துடனோ உபயோகிப்பது நல்லது என்று தெரிவித்தாயிற்று: அவ்வகையில் பொதுவாகக் கீரைகள் யாவும் நல்லவை. முக்கியமாக மணித் தக்காளிக் கீரையும் அகத்திக் கீரையும் ஆகாராதிகளில் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. ஆனால் அதிகமாக வயிறு இளகிப் போகும் இயல்புள்ளவருக்கு இவை ஏற்றவையல்ல. சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகி, அதிலுள்ள சத்துப் பொருள்களைக் குடலில் உள்ள உறிஞ்சிகள் மூலம் ஏற்றுக் கொள்வதற்குச் சிறிது காலமாகுமல்லவா? இதைத்தான் ஜீரண காலம் என்று சாஸ்திரங்களில் சொல்வதுண்டு. சராசரியில் இந்த ஜீரண காலம் மூன்று முதல் நான்கு மணி நேரம் என்று ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் இது ஆகாராதிகளின் இயல்பை யொட்டி அதிகமாகலாம். அல்லது குறுகியும் விடலாம்.

''நேற்று இரவு கோவிலில் கொஞ்சம் 'புளியோதரை' சாப்பிட்டேன்; நன்றாயிருந்தது. சுவாமி பிரஸாதமோல்லியோ! மீண்டும் கொஞ்சம் சாப்பிட்டுட்டேன். அது என்னடான்னா நெஞ்சிலேயே...கரிகரிக்கிறது!'' ஆகாரத்தின் இயல்பு அளவுகளையொட்டி அன்ன ஜீரண காலம் அதிகரிப்பதற்கு இது உதாரணமாகும்.

''காலை ஆறு மணிக்கு ஒரு முழுங்கு சாப்பிட்ட காப்பி. இப்போ மணி 12 ஆச்சு. சாப்பிடணும்னு ஏனோ உங்களுக்கு...'' இது பிரதிதினம் அடியேன் கேட்டுக் கேட்டு மரத்துப்போன ஒரு விமர்சனம். இது ஆகாரத்தின் இயல்பு அளவுகளை யொட்டி அன்ன ஜீரண காலத்தின் அளவைப் பிரதிபலிக்கும் மற்றோர் உதாரணம்.

ஆகவே அன்ன ஜீரண காலத்தின் இடை நேரத்தை நிச்சயிப்பது எளிதல்ல. ஆயினும் பெருவாரியானவரில் பழக்கமான ஆகாராதி ஜெரிப்பதற்கு ஒரு சராசரி கால அளவைத் தீர்மானித்துள்ளனர். அதைத்தான் முன்பு தெரிவித்தது.


இப்படி ஆகாரம் ஜீரணித்த பிறகு அதிலுள்ள சத்துப் பொருள்களைச் சரீரம் ஏற்றுக வேண்டும்; இதற்கெல்லாம் போதுமான அவகாசம் வேண்டுமே! உண்ட ஆகாரம் ஜெரித்தும் ஜெரிக்காமலும் இருக்கையில் (அதன் சத்துப் பொருள்களில் ஏற்பதற்குத் தான் உறிஞ்சிகளுக்கு என்ன இருக்க முடியும்?) இரண்டு மூன்று முறைகள் மலம் — அதுவும் இளகிப் போகுமானால்...? சத்துப் பொருள் போதிய அளவு கிரகிக்கப்படுவதில்லை. அதனால் ஒரு வகை ரத்தக் குறைவு ஏற்படும். அந்தக் காரணத்தாலும் தலை சுற்றல் மயக்கம் இவை உண்டாகும்;

இவ்விதமான வயிற்றுப் போக்குள்ளவர் முதலில் சொன்ன கீரை வகைகளைச் சாப்பிடக்கூடாது. அதனால் வயிற்றுப் போக்கு அதிகமாகும். ரத்தக் குறைவு, தலை சுற்றல் ஒரு புறமிருக்க வயிற்றுப் போக்கு காரணமாகப் பலவீனம் ஏற்பட்டு மனிதன் படுத்த படுக்கையாகி விடுவான். கண்கள் உள்ளுக்குப் போய்ப் பஞ்சடைந்துவிடும். காது கேட்பது குறையும். கடைசியில் தலைவலி போய்த் திருகுவலி வந்த கதையாகிவிடும்.

ஆயினும் இந்தக் கீரைகளில் கரிசலாங்கண்ணிக் கீரை ஒரு வகையில் சிறந்தது. மேற்சொன்ன விதத்துக்கு விதிவிலக்கானது. இரும்புச் சத்து ஏராளமாக இதில் இருக்கிறது. தாவரப் பொருள் மூலம் கிடைக்கப் பெறும் இவ்விரும்புச் சத்துக்கு ஒரு தனிப் பெருமையும் உண்டு. ஆனபோதிலும் இதையும் கீரையாகச் சமைத்து ஆகாராதிகளில் சேர்க்கும் பழக்கம் கிடையாது.

கரிசலாங்கண்ணி லேஹியம்: கரிசலாங்கண்ணி — (இதைச் சிலர் அன்புடன் சிறு பெயரிட்டுக் கரிசாலை என்பர். மஞ்சள் நிறப் பூ உள்ளதானாலும் மிகவும் நல்லது) யின் இலைச் சாற்றில் பழைய வெல்லத்தைக் கரைத்துக் கம்பிப் பாகாகக் காய்ச்சிக்கொண்டு அதில் திப்பிலி, மோடிக் கட்டை (இதைச் சிலர் கண்டதிப்பிலி என்பர்) செவ்வியம், சித்திர மூலத்தின் வேர்ப் பட்டை, சுக்கு இவற்றைத் தனித் தனி பொடி செய்து சலித்தெடுத்ததில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலம் விதம் நிறுத்தெடுத்துப் பிறகு ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும். (இப்படி 5 பலம்) பிறகு தனித் தனியாக இடித்துச் சலித்தெடுத்த ஏலரிசி, லவங்கப் பட்டை, அமுக்கிராங்கிழங்கு ஆகிய வற்றில் வகைக்கு இரண்டரைப் பலம் விதம் எடுத்து ஒன்றாய்ச் சேர்த்துக் கொண்டது ஏழரைப் பலம். இவ்விருவகைச் சூரணங்களையும் பிறகு ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும். ஆக மொத்தம் பன்னிரண்டரைப் பலம் ஆகுமல்லவா? பிறகு மேற்சொன்ன பாகில் இச்சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறிக் கொண்டே லேஹ்யமான அளவைக் கட்டிக் கிண்டி வைத்துக் கொண்டு உருட்டி எடுத்துண்ணும் விதமாகத் தேவையான அளவு நெய்யும் தேனும் கூட்டி யாவற்றையும் ஒருபடியும் கிளறி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இந்த லேஹியத்தில் கொட்டை அளவு முதல் நெல்லி அளவு வரையில் தினம் மாலை சாப்பிட்டு வருவது நல்ல ரத்த விருத்தியைத் தரும். பசிக் குறைவு, ஜீரண சக்திக் குறைவு இவை யெல்லாம் தீரும். ரத்தக்



பிரின்ஸிபால்: தொந்தரவு கொடுக்காதீங்க. உங்க பையனுக்குக் கல்லூரியில் இடமில்லே!
வந்த ஆசாமி: சார்! உங்களை நம்பி வெளியூரிலிருந்து வந்துவிட்டான். ஊருக்குத் திரும்பிப் போக ரயிலிலேனும் அவனுக்கு ஓர் இடம் பிடித்துத் தரமுடியுமா?

வந்தவர்: என் பையனுக்கு உங்க கல்லூரியில் ஒரு இடம் கொடுக்க முடியுமா?
பிரின்ஸிபால்: முடியாது, சார்! நான் கல்லூரிப் பையன்களுக்கெல்லாம் ரொம்ப இடம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டேன் என்று என் மனைவி கோபிக்கிறாள்!

குறைவால் ஏற்படும் தலைசுற்றலுக்கு இது மிகவும் நல்லதொரு மருந்து.

இத்துடன் மண்டூர பஸ்மத்தையோ—அன்னபேதி செந்தூரத்தையோ சேர்த்தும் கொடுக்கலாம். இதனால் மிகவும் விரைவில் ரத்த விருத்தி ஏற்படும்.

மஞ்சள் கரிசலாங்கண்ணியின் இலையை மட்டும் ஆய்ந்து வெய்யிலில் உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு அதில் வேளைக்கு 2 அல்லது 3 சிட்டிகை வீதம் தினம் இரண்டு வேளை வெந்நீரில் சாப்பிட்டு வந்தாலும் போதுமாகும்.

கரிசலாங்கண்ணியை லேஹியமாகவோ சூர்ணமாகவோ சாப்பிடும் காலங்களில் வாரம் ஒரு முறை ஓமமிட்டுக் காய்ச்சி எண்ணெய் கொண்டு அப்யங்கஞ் செய்து வருவது அவசியம்.

தலை சுற்றல் மயக்கங்களுக்கு ஏழாவதாகச் சொன்ன காரணம் மலபந்தம். மலபந்தம் என்பது இந்தக் காலத்தில் உள்ளவரில் மிகப் பலருக்குமுண்டு. பொதுவாகச் சொல்லப் போனால் மக்களில் பெரும்பாலோரை "நிர்மலமானவர்" என்று ஹாஸ்யமாகச் சொல்லலாம்.

தலைசுற்றல் ஏற்படுங்கால் அன்று மலம் சரிவரப் போயிற்று என்று தெளிதல் வேண்டும்... அப்படிச் சரிவரப் போகவில்லை என்றால், வயிற்றில் ஒருவகை உப்புசம், கடமுடாவென்ற சப்தம், (இதைச் சாஸ்திரங்களில் "ஆடோபம்" என்று சொல்லியிருக்கிறார்கள்) வயிற்றில் ஒரு கனம், வலி, இவை ஏற்படும். களித்த முகத்துடன் நிடரென்று ஒழுக்கலை சொட்டச் சொட்ட வாடி வதங்கி, வரிகளும், கோடுகளும் தென்படும் லக்ஷணத்தைப் பார்த்தாலே இவன் மலபந்தக்காரன் என்று சொல்லி விடலாம். மூக்கு நுனி, மேலுதடு, கீழுதடு, மோவாய்க் கட்டை, வியர்வைத் துளிகள் காண்பது மலபந்தம் உள்ளவர்களுக்குள்ள தனிக்குறி. நாக்கை நீட்டச் சொன்னால் போதும்—தோசை மாவு புளித்துப் பொத பொத வென்று பொங்கி நிற்பதுமே அந்தத் திவ்ய லக்ஷணம், அல்லாமல் ஏதோ அழுகிப்போன பொருளின் நாற்றம் என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்க லக்ஷணங்கள்.

மலபந்தமும் அதனால் ஏற்பட்ட தலைசுற்றலும் தாற்காலிகமானதானாலும் அதை உடனடியாக நிவர்த்திக்க ஓர் எனிமா—வெறும் இளஞ்சூடான தண்ணீரில்—எடுத்தால் போதும்.

நெடுநாளைய 'நிர்மலத்வ'மிருக்குமானால், திராக்ஷைக் கஷாயம் அல்லது ஸுகிரத்தாவரை, ரோஜாப்பூவின் தளம் திராக்ஷை இவற்றின் கஷாயமும் நல்லது. ஒருவேளை குடித்தாலே போதும்.

இந்நிலையிலும் பழங்கள் நல்லது. ஜலாம்சமுள்ள சாத்துக்குடி பச்சைத் திராக்ஷை ஆகியவையும், காய்ந்தவற்றில் அத்திப்பழமும் இந்நிலையில் சிறப்பானவை.

சில சமயங்களில் குடலில் உள்ள மலமே குறைந்திருப்பதால் வெளிக்குப் போகாமலிருக்கலாம். இந்நிலையில் இயற்கையே மலத்தைக் கட்டி நிறுத்திக்கொள்ள முயற்சி செய்கிறது. அப்போது மலமிளக்கிகளைக் கொடுக்கக் கூடாது. ஆயினும் நிர்ப்பந்தமாகக் கட்டி நிறுத்தப்படும் மலத்திலிருந்து விஷ குணமுள்ள வாயுக்கள் பிரிந்து குடலிலும் வயிற்றிலும் சுற்றித் திரிந்து ஓர் ஒர்க்ஷாப்பில் உள்ள சப்தங்களைப் பிறப்பிக்கும். இந்த வாயுவின் உந்தல் மார்பிலும் ஹ்ருதயத்திலும் நோவையும் உண்டாக்கும். உடனடியாகச் சிறிது ஜீரக கஷாயத்தைச் சூடாகக் குடித்தோ கொஞ்சம் வெந்நீரையாவது குடித்தோ இந்த மேற்புறம் உந்தும் வாயுக்களை அமர்த்த வேண்டும்.

பிறகு குடலில் மலத்தை விருத்தி செய்யக்கூடிய உளுந்தும் வடை, காராமணிக் காய் (இதைச் சிலர் பயத்தங் காய் என்பர்) ஆகியவற்றை ஏற்று, குடலில் அதிகப்படியான மலம் ஏற்படவும் அவ்வதிகப்படியான பொருள்களே மலத்தைக் கீழ் நோக்கித் தள்ள உதவுமாறும் செய்தல் அவசியம்.

கூடுதலான பாதுகாப்பிற்கும்,
அதிகமான மைலோட்டத்திற்கும்,
சுகமான சவாரிக்கும்



இந்தியா சூப்பர்

நவீனமான கார்களுக்கேற்ற மிகச் சிறந்த டயர்;

இந்தியா டயர் & ரப்பர் கம்பெனி (இந்தியா) பிரை. லிட்.,

சுபேதார் விஜயம்



"இரு கை குறைகிறது. ஹீராசிங் வந்தால் 'எட்டுப் பேராகி விடும். மூன்னூற்று நாலும் களை கட்டி விடும்!" — எழுவரில் ஒருவன் சொன்னான்.

"அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பானேன்? நாம் நான்கு பேராக ஆட்டத்தைத் தொடங்குவோம். அவன் வந்தால், அப்புறம் எட்டுப் பேராக விளையாடலாம்!"— இப்படிச் சொல்லி இன்னொருவன் ஆட்டத்தைத் தொடங்க வழி செய்து விட்டான்.

ஆட்டத்தின் நடுவில் பழைய சுபேதார் மாற்றலாகிப் புதிய சுபேதார் வரப்போகும் விஷயத்தைப் பற்றியும் பேச்சு பலமாக அடிபட்டது.

"புது சுபேதார் யாரு?"

"யாரோ தேஜ்சிங்காம். இன்றே அல்லது நாளையோ வரப் போகிறாராம்!"

"அவ்வளவு சீக்கிரமாகவா?"

"ஆமாம். நம்ம பழைய சுபேதாரிடம் இவர்தான் முதலில் சார்ஜ் வாங்கிக் கொள்ள வேண்டுமாம். நம்ம பழைய சுபேதாரை லத்தாக் பகுதிக்கு அனுப்புகிறார்களாம்!"

"இந்த ராணுவ ரகசியங்கள் எல்லாம் உனக்கு எப்படித் தெரிய வந்தன?"

"நாமே ராணுவக்காரர்கள்தானே அப்பா! நமக்குத் தெரியாத ராணுவ ரகசியமா? ஹீராசிங்தான் விவரம் சொன்னான்!"

"ஹீராசிங் இன்று ஏன் இத்தனை நேரமாகியும் வரக் காணோம்?"

இப்படி ஒருவன் கேட்கவும் ஹீராசிங் வரவும் சரியாக இருந்தது.

"உனக்கு ஆயுசு நூறு அப்பா!"

"உங்கள் ஆசீர்வாதத்தில் நாட்டுக்குப் பணி செய்ய ஆயுசு நூறும் வேண்டும், இருநூறும் வேண்டும்!"

"ஆமாம். ஏன் இன்று இத்தனை நேரமாக்கி விட்டாய்?"

"அதுவா? புது சுபேதார் வரப் போகிறார் அல்லவா? அவர் நாளைக் காலையிலேயே ரயிலில் வந்து இறங்குகிறாராம்!"

"அப்படியா? ஆள் எப்படிப்பட்டவர்?"

"ரொம்ப நல்லவர் என்றுதான் தோன்றுகிறது! பாட்டு — கீட்டில் அவருக்கு அசாத்திய மோகம் என்று கூடக் கேள்விப்பட்டேன்!"

"அப்போ நம்ம பாடு கொண்டாட்டம் தான்!" இப்படிச் சொன்னவன் தனக்குப் பாட்டுத் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ள ஒரு பாட்டையே முணுமுணுத்தான்.

அதைக் கண்ட ஹீராசிங், "உனக்குப் பாட்டுத் தெரிகிறது. அதனால் சுபேதாருக்கு நீதான் வலது கையாவாய் என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றான்.



அடுத்தவனோ, அவன் பாட்டுக்கு ஏற்பத் தாளமே போடத் தொடங்கினான்.

"உனக்குத் தாள ஞானம் அபாரமாயிருக்கிறது. உன்னையும் வெகுவாகப் பாராட்டுவார் சுபேதார்!"

இசை ஞானத்தில், தான் யாருக்கும் சளைத்தவனில்லை என்பதைக் காட்டிக் கொள்வதுபோல் ராமநாதபுரம் ரங்கன் வாயாலேயே மிருதங்கம் வாசிக்கலானான். மருதன் மோர்சிங் இல்லாமலே 'மோர்சிங்' வாசிக்கலானான்.

சீட்டுக்கச்சேரி பாட்டுக் கச்சேரியாக உருமாறியது. பாட்டுக் கச்சேரி, பேச்சுக் கச்சேரியாக உருமாறிய நேரத்தில், "நாளைக் காலை உங்களில் யார் யார் புது சுபேதாரை வரவேற்க ஸ்டேஷனுக்கு வருகிறீர்கள்?" என்று கேட்டான் ஹீராசிங்.


"கரும்பு தின்னக் கூலியா?" என்று கேட்டு, இசையறிவு கொண்ட அனைவரும் சம்மதித்தனர்.

மறுநாள் குறித்த நேரத்தில் ரயில் வந்தது. சுபேதார் தேஜ்சிங் வண்டியிலிருந்து இறங்கினார். அவரது வாட்டசாட்டமான ஆகிருதிக்கு அவரை வரவேற்கச் சென்றிருந்த சிப்பாய்கள் 'சல்யூட்' செய்தனர். அவரும் மறு வணக்கம் தெரிவித்து விட்டுப் புன்முறுவலுடன், "உங்களில் யாருக்காவது இசை ஞானம் உண்டா?" என்று கேட்டார்.

அவ்வளவுதான்; ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் இசைப் பெருமையை 'நான் முந்தி, நீ முந்தி' என்று கூறிக் கொள்ளலாயினர்.

"நான் முன்பிருந்த 'பல்டா'னில் இசையறிவு கொண்டவர்களே கிடையாது. இங்கு இத்தனை பேர் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இசையறிவு இல்லாமையினால் என் மகளது பியானோவை எடுத்துச் செல்லும் பொழுது அவர்கள் அஜாக்கிரதையாக இருந்து விட்டார்கள். உடைக்கக்கூட இருந்தார்கள். நல்ல வேளை! நீங்கள் அப்படி இல்லை. இசைக் கருவியின் அருமை தெரிந்தவர்களாக இருக்கிறீர்கள். அதனால் வெகு ஜாக்கிரதையாக ரயில் பெட்டியில் இருக்கும் பியானோ வாத்தியத்தை இறக்கி என் ஜாகைக்கு எடுத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்! கூலிக்கு மாரடிப்பவர்கள் கொண்டு சேர்ப்பதைக் காட்டிலும் இசை ஞானம் உள்ள நீங்களே எடுத்து வருவதுதான் நல்லது!" என்று கூறி ராணுவ நடை போட்டு விறைப்பாக நடந்தார் சுபேதார் தேஜ்சிங்.

இஞ்சி தின்ற கதையாக இருந்தாலும் முகம் கோணாமல் அவர்கள் பியானோ வாத்தியத்தைத் தூக்கிச் சென்ற அழகைச் சொல்லி மாளாது. —குறும்பன்



இருபத்து நான்காவது அத்தியாயம்

தன்னைப் பொருட்படுத்த வேண்டுமென்றும், தனக்காக ஏங்கித் தவிக்க வேண்டுமென்றும் பிறரிடம் எதிர்பார்ப்பதில் பெண்களுக்கு இணையேயில்லை. பெண்ணின் மனத்தில் பெரிய அந்தரங்கமும் ஆசையும் இதுதான். அவளுடைய இரகசியமும் இதைத் தவிர வேறில்லை. அவளுடைய பகிரங்கமும் இதைத் தவிர வேறில்லை. இப்படி எதிர்பார்ப்பதன் விளைவு எதுவோ அதைப் பொறுத்தே அவள் வெற்றியாக ஏற்றுக் கொள்வதும், தோல்வியாகப் பாவிப்பதுமாகிய முடி வுகள் நேர்கின்றன. படகைத் திருப்பிக்கொண்டு

பொன் விலங்கு

மணிவண்ணன்

போய்ச் சத்தியமூர்த்திக்கு அருகே நின்று அவனை அழைத்த போது அவன் பாராமுகமாக இருந்துவிட்டதைக் கண்ட பாரதி அதைத் தன்னுடைய தோல்வியாகவே பாவிக்கத் தொடங்கினாள். எதிர்பார்க்கிற இடத்தில் எதிர்பார்த்துத் தவிக்கிற அன்பு இல்லாமையை உணரும்போது பெண்ணைப் போல் வாடி ஒடுங்குகிற மெல்லிய மனம் மனித சாதியில் வேறெவருக்கும் இருக்க முடியாது என்பதை உலகில் நேற்று வரை பிறந்து வழங்கும் காவியங்களின் பரம்பரையெல்லாம் நிரூபிக்கின்றன. ஏமாற்றத்தில் பிறக்கும் ஒருவகைக் கோபத்தோடு பாரதி படகை வேகமாக வலித்துக் கொண்டு போய் விட்டாள். ஆனாலும் அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. படகில் இருட்டுகிற வரை சுற்ற நினைத்திருந்தவள் பாதியிலேயே கரையேறி, ''எனக்குத் தலைவலி.... வீட்டுக்குப் போகிறேன்'' என்று தோழிகளிடம் சொல்லித் தப்பித்



துக் கொண்டாள். எந்த அறை பெண்ணின் அகங்காரத்தின் மேல் ஓங்கி விழுகிறதோ அந்த அறைக்கு வலி அதிகம். பெண்ணுக்கு ஏற்படுகிற அகங்காரங்களில் எல்லாம் மிகப் பெரிய அகங்காரம் அன்பு காரணமாக ஏற்படுவதாகத்தான் இருக்க முடியும். அப்படி ஓர் அகங்காரம் தன்னிடம் இருப்பது சில சமயங்களில் பெண்ணுக்கே தெரியாமற் போகலாம். ஆனால் அன்பு காரணமாக ஏமாறும்போதும், பிரியும் போதும், இப்படி ஓர் அகங்காரம் தன்னிடம் இருந்தது என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர முடியும். சத்திய மூர்த்தி தான் ஆர்வத்தோடு அழைத்த குரலுக்குப் பதிலே சொல்லாமல் பாரா முகமாக இருந்ததை எண்ணி எண்ணி வேதனைப்பட்டாள் பாரதி. வீட்டுக்குத் திரும்பி யிருந்தாலும் அங்கு அவளுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை.

நாலைந்து மாணவர்கள் புடைசூழ அமர்ந்து உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்த வேளையில் அவள் குறுக்கிட்டு அழைத்ததை விரும்பாததனால் தான் சத்தியமூர்த்தி கவனிக்காதவனைப் போல் இருந்துவிட்டான். மாணவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிய பின் உணவு விடுதிக்குப் போய் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, அறைக்குத் திரும்பியபோது அவனும் இதைப் பற்றித்தான் சிந்திக்கத் தொடங்கி யிருந்தான். பாரதியிடம் வேண்டுமென்றே தான் பாராமுகமாக இருந்ததாகத்தான் அவனும் உணர்ந்திருந்தான். அந்த வேளையில், அப்படிப் பாராமுகமாக இருக்கவேண்டுமென்ற பிடிவாத உணர்ச்சி தனக்கு எதற்காகஏற்பட்டிருந்ததென்று நினைத்த போதும் அதன் காரணம் இப்போது அவனுக்கே புரியாததாக இருந்தது. 'ஏதோ அந்த வேளையில் அப்படித் தான் செய்ய வேண்டுமென்று தோன்றியது. செய்துவிட்டோம்' — என்ற ஞாபகம் மட்டும் நினைக்க மீதமிருந்ததே தவிரக் காரணம் மீதமில்லை. உறக்கம் வராத காரணத்தினால் அறைக்கு வெளிப்புறம் மாடி வராந்தாவில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. பேச்சுத் துணைக்குத் தாவர இயல் விரிவுரையாளர் சுந்தரேசனும் ஊரில் இல்லை. பின் பக்கத்தில் சண்பக மரத்துக் கிளைகளும், இலைகளும் காற்றோடு பேசிக் கொண்டிருந்தன. முன் பக்கம் பாதரசம் வழிந்து நிறைந்து பரந்தாற் போல் ஏரியும், வெண் நீல மின்விளக்குகளுக்கும் அப்பால் இருளோடு இருளாக இனந் தெரியாமற் கலந்துபோய் விட்ட மரக் கூட்டங்களும், மலைகளும் லேக் அவென்யூவும் அமைதியாகத் தெரிந்தன. நீண்டு பரந்த சோக இருளில் அங்கங்கே மின்னி மறையும் சின்னஞ் சிறு மகிழ்ச்சி மின்னல்களைப் போல் எங்கோ சில பகுதிகளிலிருந்து வானொலி இசை காற்றில் முறிந்து முறிந்து வந்து ஒலித்துக் கொண்டிருந்தது. எதிர்ப்புறம் ஏரியின் மறு கரையில் 'நியான்லைன்' — நீலக் குழல் விளக்குகளில் எழுதப்பட்டிருந்த 'லேக் வியூ ஹோட்டல்' என்ற ஒளி எழுத்துக்கள் அணைந்து அணைந்து எரிவதன் மூலம் 'பெயரும் மின்னி மின்னி மறையக்கூடிய இயல்புடைய ஒன்றுதான்' என்பதை நாகரிகமாக நிரூபித்துக் கொண்டிருந்தது. தன் மனத்தில் இடை விடாத இன்பக் கனவாக நிறைந்திருந்த மல்லிகைப்பந்தல் என்னும் அந்த ஊருக்கே தான் வந்து வசிக்கத் தொடங்கி வாரங்கள் சில ஓடிவிட்டதையும் தன் மனம் விரும்பி வேலை பார்க்க வந்த அந்த ஊர்க் கலைக் கல்லூரியின் சுக துக்க அநுபவங்களும் புகழ் பொறாமை நிகழ்ச்சிகளும், போதுமான அளவு தன்னைச் சூழ்ந்துவிட்டதையும் நினைத்துப் பார்த்துத் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான் சத்திய மூர்த்தி. சாயங்காலம் ஏரிக் கரையில் பாரதியிடம் அப்படி நடந்து கொண்டிருக்க வேண்டாமென்றுதான் இப்போது அவன் நினைத்தான். பதில் பேசாமல் பாராமுகமாக இருந்துவிட்டதன் மூலமே தான் அவளுடைய மனத்தை அதிகமாகப் புண்படுத்தியிருக்க முடியும் என்பதும் அவனுக்குப் புரிந்தது. ஆனாலும் அவன் பாரதியிடம் அளவாகவும் கண்டிப்பாகவும் பழக வேண்டுமென்றே தன் மனத்திற்கு அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருந்தான். அந்தக் கல்லூரியின் சூழ்நிலையும், வம்பு பேசும் மனப்பான்மையும், கோள் சொல்லும் குணமுள்ளவர்கள் அங்கு நிறைந்திருப்பதும் தெரிந்து அவன் எச்சரிக்கையாக இருக்க விரும்பினான். கல்லூரி வகுப்பு நேரங்களிலும், வெளியேயும் பாரதி அடிக்கடி தன்னைச் சந்திக்க விரும்புவதைத் தவிர்த்துத் தான் அவளிடமிருந்து விலகி நிற்க வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு. ஆர்வத்தோடு ஓடிவந்து அவள் தன் எதிரே நின்று சிரித்துப் பேசுவதையும் பாராட்டுவதையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளச் செய்ய

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ்.பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B.P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்தபோதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மக்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மக்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் (பிரை) லிமிடெட்
ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மெர்க்கன்டைல் பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1
பம்பாய் - புது டில்லி - சென்னை

வேண்டுமென்று நினைத்திருந்தான் அவன். அந்த நினைப்பைச் செயலாக்கத் தொடங்கும்போது மாலையில் நிகழ்ந்தது போல் பாரதியின் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியாமல் இல்லை. உலகில் எல்லாவிதமாகவும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரண்டு வகையான அன்பு உண்டு. யார் மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவரையே ஆள விரும்புகிற அன்பு ஒன்று. யார்மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவருக்கே ஆட்படுகிற அன்பு ஒன்று. ஆள விரும்புகிற அன்பைக் காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது. ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும் அகங்காரமும் உண்டு. ஆட்பட விரும்புகிற அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை. ஆள விரும்புகிற அன்புக்கு உலகத்தில் காதல் என்றும், பிரேமை என்றும் விதம் விதமாகப் பெயர் சொல்லுகிறார்கள். ஆட்படுகிற அன்புக்குப் பக்தி என்று பெயர் சொல்லுகிறார்கள்.

'பாரதியும் என்மேல் அன்புசெலுத்துகிறாள். மோகினியும் என்மேல் அன்பு செலுத்துகிறாள். ஆனால் நானே நுணுக்கமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது இந்த இருவருடைய அன்பிலும் வேறுபாடு இருக்கிறது. பாரதியின் அன்பு என்னை ஆள விரும்புகிற அன்பு. மோகினியின் அன்போ எனக்கே ஆட்படுகிற அன்பு. ஆட்படுகிற அன்புக்கு இணையான உறவு உலகத்தில் வேறெதுவும் இருக்க முடியாது' என்று இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கிறபோது. 'புஷ்ப மரத்தடியில் வீற்றிருக்கும் தெய்வத்துக்கு அர்ப்பணமாகும் பூவைப் போல் நான் தானாகவே உங்களுக்குச் சமர்ப்பணம் ஆனவள்' என்றும், 'உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வாத்தியம் வாசிக்க நீங்கள் இல்லாமல் தூசி படிந்து போய் மூலையில் கிடக்கிறது' என்றும் தன்னுடைய கடிதத்தில் மோகினி எழுதியிருந்த உணர்ச்சிகரமான வாக்கியங்கள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

* * *

சத்தியமூர்த்தி மல்லிகைப் பந்தலில் மோகினியைப் பற்றி எண்ணி மனம் தவித்துக் கொண்டிருந்த தினத்திற்கு மறுதினம் காலையில் கண்ணாயிரமும் அம்மாவும் உடன்வரக் காரில் மதுரையிலிருந்து நாட்டரசன் கோட்டைக்குப் பக்கத்தில் பெரிய தனவணிகர்கள் நிறைந்த சிறிய ஊர் ஒன்றில் கலியாணத்திற்குச் 'சதிர்க் கச்சேரி' செய்யப் போய்க் கொண்டிருந்தாள் மோகினி. மாலையில் வரவேற்பின்போதுதான் சதிர்க் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. ஆனாலும் காலையிலேயே புறப்பட்டுப் போய்விட வேண்டுமென்று அவசரப்படுத்திக் கண்ணாயிரம் அவர்களைக் காரில் அழைத்துக் கொண்டு புறப்பட்டிருந்தார். கண்ணாயிரமே 'பெரிய புள்ளி'யை வீடு தேடி அழைத்து வந்து முன்பணம் கொடுக்கச் செய்து ஏற்பாடு பண்ணின கச்சேரியாயிற்றே? அதனால் அவரும் உடன் வந்தால்தான் கௌரவமாயிருக்கும் என்று அம்மா அவரையும் வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வருகிறாள் என்பது மோகினிக்குப் புரிந்தது. இம்மாதிரிப் பெரிய இடங்களில் நடைபெறும் எந்த வைபவமானாலும் அதில் தானும் போய்த் தலையைக் காண்பித்து விட்டு வர வேண்டுமென்ற நைப்பாசை அல்லது அற்பத்தனம் கண்ணாயிரத்துக்கு உண்டு என்பதை மோகினி அறிவாள்.

> **பொன் விலங்கு**
>
> ஆள விரும்புகிற அன்பைக் காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது. ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும், அகங்காரமும் உண்டு. ஆட்பட விரும்புகிற அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை.

படிப்படியாக இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டிருந்த காரணத்தினால் மோகினிக்குக் கண்ணாயிரத்தைப் பற்றி நினைப்பதற்கே அருவருப்பாயிருந்தது. ஆனால் அவளுடைய அம்மாவுக்கோ எல்லாக்காரியங்களுக்கும் கண்ணாயிரம்தான் தேவைப்பட்டார். எல்லா இடங்களுக்கும் கண்ணாயிரம் உடன் வந்தால்தான் தனக்குக் கௌரவம் என்று தப்பாக எண்ணிக் கொண்டிருந்தாள் அம்மா. இந்த நிலைமையை எண்ணி அம்மாவின் மேல் கோபப்படுவதா பரிதாபப்படுவதா என்று தெரியவில்லை மோகினிக்கு. அன்று காரில் நாட்டரசன் கோட்டைக்குப் போகும்போதும் கண்ணாயிரத்தின் மேல் தாங்க முடியாத அருவருப்போடுதான் பிரயாணம் செய்துகொண்டிருந்தாள் அவள். காரில் அம்மாவும் கண்ணாயிரமும் சளசளவென்று ஓயாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்

தக் கலியாணத்துக்கு எந்தெந்தப் பெரிய மனிதர்கள் எல்லாம் வருவார்கள், எவ்வளவு தடபுடலாக ஏற்பாடுகள் செய்திருப்பார்கள் என்பதைப் பற்றி அவர்கள் பேச்சு வளர்ந்துகொண்டிருந்தது. மோகினி ஒன்றும் பேசப் பிடிக்காமல் — அவர்கள் பேசிக்கொண்டிருப்பது எதுவோ அதைக் கேட்கவும் பிடிக்காமல் மிகவும் பொறுமையோடிருந்தாள்.

கோடை வெயில் மண்டையைப் பிளக்கும் உச்சி நேரத்துக்கு அந்த ஊரை அடைந்தது கார். மனிதர்கள் அதிகம் பழகாமல் பூட்டிக் கிடக்கும் பெரியபெரிய வீடுகளோடும் அகன்ற புழுதி மயமான சாலைகளோடும் தோன்றிய அந்த ஊர் அந்த ஒரே ஒரு கலியாணத்துக்காக வந்திருந்த கார்களுடனும், மனிதர்களுடனும் — அவர்களால் உண்டாகிய செயற்கைக் கலகலப்புடனும் இலங்கிக் கொண்டிருந்தது. தெருவில் நுழைந்த கார் கலியாண வீட்டு வாசலில் பந்தலுக்கு முன்னால் போய் நிற்பதற்கு முன் 'டான்ஸ்காரங்க வந்தாச்சு' என்று ஒரு வகைப் பரபரப்பான பேச்சும் பரபரப்பான கூட்டமும் சேர்ந்திருந்தது. அந்தச்சிறிய ஊரில் அன்றைக்குப் பகலில் மிகப் பெரிய 'சென்ஸேஷனல்நியூஸ்' (உணர்ச்சியூட்டும்சேதி) 'டான்ஸ்காரங்கள்ளாம் வந்தாச்சாமே?' என்பதாகத்தான் இருந்தது. காரையும் தன்னையும் மேலும் கீழுமாக வெறித்து வெறித்துப் பார்க்கும் கூட்டத்துக்கு நடுவே கூசியபடி தலையைக் குனிந்துகொண்டு காருக்குள்ளே உட்கார்ந்திருந்தாள் மோகினி. அந்த நிலையில் அந்தச் சிறிய ஊரின் இரசிகப் பெருமக்களுக்கு நடுவே அவள் ஓர் அபூர்வமாக இருந்தாள். கண்ணாயிரம் கீழே இறங்கிப் போய்க் கலியாண வீட்டுக்காரரிடம் தாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டின் சாவியை வாங்கிக்கொண்டு வந்தார். தெருக் கோடியில் அரண்மனை போல் பெரிதாயிருந்த ஒரு பழைய வீட்டின் மாடியில் இரண்டு விசாலமான அறைகளை அவர்கள் தங்கிக் கொள்வதற்காக ஒழித்து விட்டிருந்தார்கள்.

''மோகி! இந்தக் கலியாணத்திலே நீ டான்ஸாடப் போறேங்கிறதை எதிர்பார்த்து இந்த ஊரே பரபரத்துப்போய்க் காத்துக்கொண்டிருக்காம்'' என்று அறைக் கதவைத் திறந்து கொண்டே வியந்தாற்போல் கூறத் தொடங்கினார் கண்ணாயிரம்.

மோகினி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் சலித்தாற்போல் 'உச்'சுக் கொட்டினாள்.

''இல்லியா பின்னே? ராத்திரி டான்ஸ் முடிஞ்சதும் மறந்திடாமல் என் செல்லக் கண்ணுக்குத் திருஷ்டி சுழிக்கணும்'' என்று முத்தழகம்மாளும் ஒத்துப் பாடினாள். மோகினியோ ஒன்றிலும் மனம் ஒட்டாமல் சலித்துப் போயிருந்தாள். கலியாண வீடுகளில் ஏற்பாடு செய்யப்படும் மாலை நேரத்துக் கலைநிகழ்ச்சிகள் பெரும்பாலும் முறையைக் கழிப்பதற்காகவே இருக்கும். எதிரே உட்கார்ந்திருப்பவர்கள் பகல் சாப்பாட்டில் பாயசம் நன்றாயில்லாமல் போய்விட்டதைப் பற்றியும், மாலைச் சிற்றுண்டியின்போது காப்பியில் வெந்நீரைக் கலந்துவிட்டதைப் பற்றியும் வம்பு பேசிக்கொண்டிருப்பார்கள். பேசாமல் வந்து உட்காருகிறவர்களும் பாதியிலேயே கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு நாருக்காக எழுந்து போய் விடுவார்கள். கொலு வைத்த பொம்மைகளைப் போல் கலியாணப் பெண்ணும் பிள்ளையும் மட்டுமே வரவேற்பு மேடையில் கடைசிவரை இருப்பார்கள். மற்றவர்கள் எல்லாரும் வருவதும், போவதும், உட்காருவதும் பேசுவதுமாக ஏதோ ஒரு பரபரப்பில்— எதிரே தங்களுக்காகவே — தங்களைச் சபையாகக் கொண்டே நடத்தப்படும் நாட்டியக் கச்சேரியைக்கூடக் கவனிக்காத பரபரப்பில் ஈடுபட்டிருப்பார்கள். இன்னும் சிலர் நாற்காலிகளில் முன்புறம் மேடையைப் பார்த்து அமர்ந்துவிட்டுச் சிறிது நேரமானதும் பின்புறத்து வரிசையில் இருப்பவர்களோடு திரும்பிப் பேசத் தொடங்கி விடுவார்கள். குழந்தைகளின் அழுகுரல்களும் சிறுவர்கள் பந்தலில் கட்டியிருக்கும் வாழை மரத்துப் பட்டையைப் பிய்த்துத் தரையில் அடித்தால் யானைவெடி வெடிக்கிற ஓசை வருகிறதா இல்லையா என்று பரிசோதிக்கும் ஓசைகளும் 'ஏலே! சும்மா இருக்கியா, முதுகுத் தோலை உரிக்கட்டுமா?' என்று பெரியவர்கள் சிறியவர்களை அதட்டுகிற குரல்களுமாகச் சுற்றுப்புறமெல்லாம் ஒரே சந்தோஷப் போர்க்களத்தைப் போலிருக்கும். இந்தப் போர்க் களத்திலிடையே பணம் வாங்கி ஆட ஒப்புக் கொண்டுவிட்ட காரணத்தினால் ஆடுகிறவள் எதையுமே அவமானமாகக் கருதாமல் தலை விதியே என்று சதிராடி முடிக்க வேண்டும்; கலியாண வீட்டுக்காரரோ பின்னால்


NEWFIELDS
நவீன
மோஸ்தரில்
ஓர் அரிய
விருந்து
மோடியின்
டாட்லான்
புத்தம் புதிய
அபூர்வமான சூட்டிங்
துணி சுருங்காது
குறைவான இஸ்திரி
ஒவ்வொருவரின் பண
வசதிக்கு ஏற்றது.





CF-STH-61

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

அங்கங்கே கலியாணத்தைப் பற்றி விசாரித்துப் பேசிக்கொள்கிறவர்கள் எல்லாரும் 'இன்னார் வீட்டுக் கலியாணத்திலே இன்னாருடைய சதிர்க் கச்சேரி நடந்ததாமில்லே?' என்று பேசிக் கொள்ள வேண்டும் என்ற பொய்க் கௌரவத்துக்காக மட்டுமே இத்தனை தாராளமாகவும் தடபுடலாகவும் ஏற்பாடுகள் எல்லாம் செய்திருப்பார். எல்லாமே ஒரு நாடகமாக இருக்கும். மூன்று — மூன்றரை மணி நேரம் வேர்க்க விறுவிறுக்கக் கால் கடுத்துப் போய் ஆடிய பின் கடைசியில் வெற்றிலை பாக்குத் தேங்காய் பழம் சந்தனம் புதுப் புடைவை — பணம் வைத்து மிகவும் கௌரவமாக (அவ)மரியாதை செய்தனுப்புவதுடன் இந்தக் கலை நாடகம் முடிவது வழக்கம். அம்மாவின் பகாசுரப் பணத்தாசையை அடிக்கடி நிறைவேற்றுவதற்காக மோகினியும் இந்த நாடகத்தை அவ்வப்போது அங்கே ஆடியாக வேண்டியிருந்தது.

அம்மாவின் பணத்தாசையைத் தூண்டி விடுவது போல் கண்ணாயிரமும் யாரையாவது அழைத்துக் கொண்டு வந்து கலியாணச் சதிர்க் கச்சேரிக்குச் சிபாரிசு செய்த வண்ணமாக இருந்தார். 'நல்ல வேளையாக இது சின்ன ஊராய் இருப்பதனால் எல்லாருமே பாராமுகமாக இருந்துவிட மாட்டார்கள். சிலராவது பதிவாக உட்கார்ந்து நாட்டியத்தைப் பார்ப்பார்கள்' என்ற ஒரு நம்பிக்கை மீதம் இருந்தது அவளிடம். ஆனால் அதே சமயத்தில் இந்த மாதிரிச் சின்ன ஊர்களில் இன்னொரு தொல்லை. 'இதை ஆடு'. 'அதை ஆடு' என்று உட்கார்ந்த இடத்திலிருந்தே கூக்குரல் போடுவார்கள். அல்லது சீட்டெழுதி அனுப்புவார்கள். எப்படிப் பார்த்தாலும் அமைதியும் பக்குவமுமில்லாத இரசிகர்களுக்கு முன் ஆடுவதில் சலிப்பான அநுபவங்களே மீதமிருக்க முடியுமென்று தோன்றியது. ஆகவே எப்படியாவது அந்த ஒரு நாள் கூத்தை ஆடி முடித்துக் கொண்டு ஊர் திரும்பினால் போதுமென்று நாழிகையை எண்ணிக் கொண்டிருந்தாள் மோகினி. வெயில் மயமான நீண்ட பகல் நேரம் மெல்ல மெல்லச் சரிந்தது.

ஒரு விதமாகப் பொழுது சாய்ந்து மாலையும் வந்தது. விதம் விதமாகத் தைத்துக் கொண்டு வந்திருந்த நாட்டிய உடைகளை யெல்லாம் பெட்டியைத் திறந்து எடுத்துக் கடை விரித்தாள் அம்மா. மோகினி நீராடி விட்டு வந்து அலங்காரம் செய்து கொள்ளத் தொடங்கினாள். வேர்வை அடங்க வேண்டும் என்பதற்காகவும் ஆடத் தொடங்குமுன் உடம்பில் ஒரு தூய்மையான உணர்ச்சி நிலவ வேண்டும் என்பதற்காகவும் நாட்டியத்துக்கு முன் நீராடி விடுவது அவள் வழக்கம். இன்ன இன்ன நாட்டியங்களை ஆட வேண்டும் என்று கண்ணாயிரமும், அம்மாவுமாக ஒரு பட்டியல் தயாரித்து மோகினியிடமும் சொல்லியிருந்தார்கள். அதைத் தவிர முன் வரிசையில் அமர்ந்திருக்கிற முக்கியமான பெரிய மனிதர்கள் ஏதாவது விரும்பிக் கேட்டால் அதையும் மறுக்காமல் ஆட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இது மாதிரிக் கலியாண வீட்டு நிகழ்ச்சிகளில் இரசிக்கிறவர்கள் இருந்தாலும்,



தன்னிகரில்லாத் தளபதி

1792. பிரஞ்சுக் குடியரசுக் காலண்டரின் முதல் வருஷம். அந்த ஆண்டிலேயே பிறநாடுகளிலும் வெற்றி வீரர்களாய்ப் புகுந்து சென்ற பிரஞ்சுக் குடியரசுப் படையினருக்குத் தலைமை தாங்கிய தளபதிகளுள் தன்னிகரில்லா மேதையான நெப்போலியன், 1804ல் பிரஞ்சு சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகவும் சர்வாதிகாரியாகவும் மாறினான். 1812ல் பிரஞ்சுப் படைகள் மாஸ்கோவிலுமிருந்தன, மாட்ரிட்டிலுமிருந்தன. உலகின் வேறெந்த நாடும் இத்தகைய மகோன்னத நிலையை அடைந்ததில்லை. ஆனால் நெப்போலியனுடைய சாம்ராஜ்யம் உருவான வேகத்தைவிட விரைவாக வீழ்ந்தது.

பிரஞ்சு மக்கள் அவரை சர்வாதிகாரி என்பதற்காகப் போற்றவில்லை. அரசியல் மேதை, சிறந்த படைத் தளபதி என்கிற எண்ணங்களுடன், 'அரச பதவி என்பது ஆண்டவன் அளித்த உரிமையாகக் கருதப்பட்ட நிலையை மாற்றிச் சாதாரணமான ஒருவனைச் சக்கரவர்த்தியாக்கிய பெருமை எங்களுக்கு உண்டு' என்கிற நினைப்பும் பிரஞ்சு மக்களின் மனத்தில் நிலவுகிறது. பாரிஸிலுள்ள நெப்போலியனுடைய சமாதி அளிக்கும் தோற்றத்தையே இவ்விதழின் பொருளடக்கப் பகுதியில் காண்கிறீர்கள்.

இல்லா விட்டாலும், கவனித்தாலும், கவனிக்காமலே நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தாலும், கொடுத்த பணத்துக்குக் குறைவில்லாமல் மூன்று — மூன்றரை மணி நேரம் ஆடி விட வேண்டும் என்பதில் மட்டும் அக்கறையாயிருப்பார்கள் என்பது மோகினிக்குத் தெரியும். மாலை ஐந்தரை மணியிலிருந்து ஏறக்குறைய இரவு ஒன்பது மணி வரை அன்று அவள் ஆடினாள். நூறு நூற்றைம்பது பேர்கள் பந்தலில் அங்கும் இங்குமாக உட்கார்ந்திருந்தார்கள். மற்றவர்கள் வருவதும், போவதுமாக இருந்தனர். கூட்டம் எப்படி இருந்தாலும் கலைத் தெய்வத்தை மதித்துச் சிரத்தையாகவே ஆடினாள் அவள். வர்ணம், பதம், தில்லானா — எல்லாம் வகைக்கு ஒன்றாக ஆடினாள். அருணாசலக் கவியின் இராம நாடகக் கீர்த்தனையில் ஒன்றையும், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனையில் ஒன்றையும் ஆடிய போது அவள் தன்னை மறந்த இலயிப்புடன் ஆடியிருந்தாள். கடைசியாக ஆண்டாள் நடனத்துடன் நிகழ்ச்சி முடிந்தது. கலியாண வீட்டுச் சதிர்க் கச்சேரி என்னும் ஆடம்பர நாடகத்தின் முடிவான கடைசிப் பகுதியும் வந்தது. கலியாண வீட்டுக்காரரும் இன்னும் நாலைந்து பெரிய புள்ளிகளும் இரத்தினக் கம்பளம் விரித்த கூடத்தில் வெற்றிலை பாக்குத் தேங்காய் பழம்-புதுப் புடைவை சந்தனக் கிண்ணம் எல்லாம் தயாராக வைத்துச் சதிர்க் கச்சேரி ஆடியவளுக்குப் பணம் கொடுப்பதற்குக் காத்திருந்தார்கள். கண்ணாயிரத்தையும், அம்மாவையும் பின்தொடர்ந்து அடக்க ஒடுக்கமாக நின்றாள் மோகினி. கூடத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாம் ஐம்பது அறுபதைக் கடந்த முதியவர்களாக இருந்தும், பார்வை, பேச்சு, சிரிப்பு எல்லாவற்றிலும் அந்த முதுமையோடு பொருந்தாமல் அசடு வழிந்தது. தன்னைத் துளைத்தெடுப்பது போல் பார்க்கத் தொடங்கிய அந்தக் கண்களுக்கு முன் நிற்கவே அருவருப்பாயிருந்தது அவளுக்கு. பணத்தையும் மரியாதை என்ற பேரில் அவர்கள் செய்து கொண்டிருந்த அவமரியாதையையும் ஏற்றுக் கொள்ளாமலே திரும்பிப் போய் விடலாம் போலக் கூச்சமாகவும் பயமாகவும் இருந்தது மோகினிக்கு. எவ்வளவு நேரம்தான் கால் கடுக்கக் காத்துக் கொண்டு நிற்பது ? கூட்டத்தில் உட்கார்ந்திருந்தவர்களில் மிகவும் முதியவரான ஒருவர் அந்த முதுமைக்கும் வயதுக்கும் பொருந்தாத 'மைனர்ச் சிரிப்போடு' கண்களை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கண்ணாயிரத்தை அருகே கூப்பிட்டுக் காதருகே ஏதோ சொன்னார். கண்ணாயிரம் அதே பாணியில் அதே செய்தியைக் காதருகே வந்து முத்தழகம்மாளிடம் மெல்ல அஞ்சல் செய்தார். மோகினி உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு முன்பு நிற்கவே பிடிக்காமல் மனம் குமுறியபடி நின்று கொண்டிருந்தவள் இதை யெல்லாம் கவனித்து மேலும் அதிகமாகக் குமுறலானாள். அம்மா மோகினியின் காதருகே வந்து, ''டீ! உன்னைத்தானே! பொது இடத்திலே மாட்டேன்னு சொல்லி நாலு பேர் முன்னே என் மானத்தை வாங்கிப்பிடாதே. நம்மடவங்களுக்கு இது ஒண்ணும் புதுசில்லே. நாம இப்படிச் செய்யற வழமுறை உண்டு. பெரியவங்களா இங்கே உட்கார்ந்திருக்கிற நாலுபேருக்கு உங்கையாலே கொஞ்சம் சந்தனத்தைத் தொட்டுப் பூசிட்டுப் பெறவு மரியாதையை வாங்கிக்க'' என்று தணிந்த குரலில் முணுமுணுத்தாள். அதுதான் சமயமென்று கண்ணாயிரம் மேஜையிலிருந்த சந்தனக் கும்பாவையும் பன்னீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டு குழைவாக மோகினிக்கு அருகே வந்தார். அவ்வளவில் மோகினி எரிமலையானாள். இரண்டு கைகளையும் இடுப்பில் ஊன்றிக் கொண்டு உலகத்திலேயே மிகவும் கீழ்த்தரமான உணர்ச்சிகளையும், சிறுமைகளையும் அப்போது தன் எதிரே பார்ப்பது போல் சுற்றியிருந்தவர்களைத் துச்சமாகப் பார்த்தாள். அவள் எங்கே தாறுமாறாகப் பேசிவிடப் போகிறாளோ என்ற பயத்தில் கண்ணாயிரத்தின் கைகள் சந்தனக் கும்பாவோடு நடுங்கிக் கொண்டிருந்தன. மோகினியின் கண் பார்வையில் நெருப்புப் பொறி பறந்தது.

''இவங்க பணம் நமக்கு வேண்டாம். கலியாணத்துக்கு நான் சும்மா ஆடினதாக இருக்கட்டும்!... புறப்படும்மா... புறப்படறியா, இல்லியா?'' என்று வார்த்தைகளை வீசி விட்டு அம்மா பின்னால் வருகிறாளா இல்லையா என்பதைக் கூட எதிர்பாராமல் விறுவிறுவென்று நடந்து அங்கிருந்து வெளியேறினாள் மோகினி. காலில் சலங்கைகள் கோபமாக ஒலிக்க அவள் ஆத்திரத்தோடு தரையையும் அவர்கள் திணைப்பின் சிறுமையையும் ஒரு சேர மிதித்துக் கொண்டு அந்தத் 'தொண்டு' நிலைமையைத் 'தூ' வென்று தள்ளி விட்டு வெளியேறிச் சென்றதுகூட ரௌத்திராகாரமானதோர் அழகிய அபிநயம் போல் தோன்றியது. (தொடரும்)



உருண்டோடுகிறதா உங்கள் பணம்?

வாழ்வின் தேவைகள் நாளுக்குநாள் பெருகுகின்றன. எனவே, குடும்பத் தலைவரின் பொறுப்பு அதிகமாகிறது. குடும்பத்தினருக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்கு வழிவகுப்பதுடன், குழந்தைகளின் கல்விச் செலவு, மகளின் திருமணம், நோய் நொடி வந்தால் வைத்தியச் செலவு, பிரயாணச் செலவு என்று எத்தனையோ செலவினங்களுக்கு வகை செய்ய வேண்டியிருக்கிறது அவர்.

சீரானதா உங்கள் சேமிப்பு?

உங்கள் வரவு செலவுத் திட்டத்தை நீங்கள் எவ்வாறு தயாரிக்கிறீர்கள்? முன்யோசனையுடன் வகுக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்புக்கு முதல் இடம் உண்டு. வருமானத்தில் ஒரு பகுதி சேமிப்பிற்கு ஒதுக்கப்பட வேண்டும். ஒழுங்கான சேமிப்புப் பழக்கமே உங்களுக்கு உள்ள ஒரே பாதுகாப்பு. ஒரு சேவிங்ஸ் பாங்கு கணக்கு அல்லது ஃபிக்ஸ்ட் டிபாசிட்டுக் கணக்கு மூலம் இன்றே சேமிக்கத் தொடங்குங்கள். காலடைவில் பெருகும் பாங்கிக் கணக்கு அளிக்கும் பாதுகாப்பையும் மனமகிழ்வையும் நீங்கள் அடையமுடியும்.

எங்கள் பாங்கின் எந்த அலுவலகமும், எங்களுடைய பல சேமிப்புத் திட்டங்கள் பற்றிய முழு விவரங்களையும் உங்களுக்குத் தரக் காத்திருக்கிறது.



இந்தியன் பாங்க் லிமிடெட்.

(ஸ்தாபிதம்: 1907)

பதிவு அலுவலகம்: இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ் எஸ்பிளனேட் மதராஸ்-1

(இந்தியா முழுவதும் கிளைகள்)

காரியதரிசி: [illegible]

தேவநாதனுக்கு ஒரே மகள் நாயகி. தாயைத் தன் இளம் வயதிலேயே இழந்த தம் மகளுக்குத் தாயும் தந்தையுமாக இருந்தார் தேவநாதன். அவள் பேரில் தம் உயிரையே வைத்திருந்தார். பெண்ணுக்கு நல்ல கல்வி போதித்துச் செல்வமாக வளர்த்தார். பெண் நல்ல அழகி. நல்ல படிப்பு. படித்துப் பட்டம் பெற்ற பின் வீணாக வீட்டில் இருக்க விருப்பமில்லாமல் தந்தையின் அனுமதியுடன் பள்ளிக் கூட உபாத்தியாயினியாகப் பணியாற்றத் தொடங்கினாள். தேவநாதனுக்கு அப்போது சுமார் அறுபது வயது. பள்ளிக்கூடம் போய்வந்து கொண்டிருந்த சில



நீதிமன்றத்தில் எத்தனையோ ருசிகரமான வழக்குகள் வருகின்றன. அந்த வழக்குகளில் தீராத வழக்கொன்றைக் குழந்தை தீர்த்து வைக்கிறது. எப்படி என்று கேட்கிறீர்களா? அதை வக்கில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் எழுத்தாளரே சொல்கிறார்.

குழந்தை

எழுத்தும் தொழிலும்

நாட்களுக்கெல்லாம் நாயகியிடம் ஒரு மாறுதலைக் கண்டார் தேவநாதன். மகளுக்குத் தெரியாமல் அவள் பின்சென்று வேவு பார்த்தார். அவள் ஓர் இளைஞனுடன் சிரித்துப்பேசி நெருங்கிப் பழகுவதைக் கண்டார். மனம் வெதும்பிவிட்டது. பொறாமை சுடர் விட்டு எரிய ஆரம்பித்தது. மகள் பேரில் எல்லையற்ற கோபம். மகள் வீட்டுக்குத் திரும்பியதும் அவளை இகழ்ந்தார், அடித்தார். அவள் கண்ணீர் விட்டுக் கதறியதைக் கண்டு தாமும் கண்ணீர் விட்டார்; வீட்டிலேயே பூட்டி வைத்தார். அவள் உணவு கொள்ள மறுத்தாள். அழுது புரண்டாள்: கோபத்தாலும் தாபத்தாலும் மனம் புழுங்கினார் நாதன். இன்னது செய்வது என்று புரியவில்லை. நாயகி நேசித்த இளைஞன் அவளைக் காண வந்தான். அவனைத் தடி கொண்டு அடித்தார். போலீசில் அவன் பேரில் புகார் செய்தார். இதைக் கண்டு பெண் கதறினாள். நாதன் நண்பர்கள், உறவினர்கள் அவருக்கு யோசனை கூறினார்கள். இளைஞனுக்கும் நாயகிக்கும் மணம் முடித்துவிட. இளைஞன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். அவர்கள் குலமேதான். வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார். திருமண நாள் நெருங்கும் போது அவர் மனத்தில் வேறு ஓர் அச்சம் தோன்ற ஆரம்பித்தது. நாயகிக்கு அவள் தாயிடமிருந்து கிடைத்த சொத்துக்கள் நிறைய இருந்தன — வீடுகளும், நிலங்களும். வாசன் அவள் சொத்துக்காகத் தான் அவர் மகளை மணம் புரிந்து கொள்கிறான் என்ற சந்தேகம் தோன்றி விட்டது. மறுபடியும் விவாகத்துக்குத் தடை விதித்தார். ஒரே குழப்பம். பிறகு தாயாரிடமிருந்து நாயகிக்குக் கிடைத்த சொத்துக்களையெல்லாம் அவள் தம் பேருக்கு எழுதிக் கொடுத்து விட்டால் திருமணத்துக்குச் சம்மதிப்பதாகக் கூறினார். நாயகி இதற்கு ஒப்பவில்லை. பிடிவாதம் செய்தாள். ஆனால் தந்தையின் அனுமதியில்லாமல் மணம் செய்து கொள்ள விரும்பவில்லை. நாயகியின் தோழிகள் பள்ளியில் அவள்கூடப் பணியாற்றினவர்கள், அவளுக்கு ஆலோசனை கூறினர். வற்புறுத்தலின் பேரில் கண்ணீரோடு ரிஜிஸ்தார் ஆபீசுக்குச் சென்று தன் சொத்துக்கள் முழுமையும் தன் தந்தை பேருக்கு அவரே எழுதித் தயாரித்த செட்டில்மெண்ட் பத்திரத்

வென்ற வழக்கு!

எம். பி. சுப்பிரமணியன்





இன் மூலம் எழுதிக் கொடுத்தாள். பத்திரத்தை அவன் படிக்கக் கூட இல்லை. மணத்துக்குப் பின் மன நிலை சரியாகி விடும் என்று எல்லாரும் எண்ணினர். ஆனால் திருமணத்துக்குப் பின் நாதனுக்கு வாசன் பேரில் பகை மூண்டது. தம் பெண் அவனுடன் சிரித்துப் பேசுவது, வெளியே போவது இதையெல்லாம் கண்டு அவர் மனம் தாளவில்லை. தினம் வசவு, பல நாட்கள் வாசனுக்குக் தடி ஆராதனை. வாசன் படித்தவன்; பண்புள்ளவன். பொறுத்துப் பார்த்தான். நாயகியாலும் அவள் தந்தையைத் திருத்த முடிய வில்லை. இரண்டு மூன்று அறைகளில் தங்கள் பெட்டி படுக்கைகளைப் போட்டுப் பூட்டினர். ஒரு சில துணி மணிகளை எடுத்துக் கொண்டு வாசனும் நாயகியும் வீட்டை விட்டுப் போய் விட்டனர். பணியாளிடமிருந்து செய்தி அறிந்த வாசன் எரிமலையானார். போலீசில் புகார் செய்தார். தம் மருமகன் நகைகளையெல்லாம் திருடிக் கொண்டு போய் விட்டதாகப் புகார் செய்து, தம் மனைவியின் நகைகளின் ஜாபிதாவையும் கொடுத்தார். நாயகி போலீசுக்குப் போய்த் தன் தாயின் நகைகள் தனக்குச் சொந்தமானவை, தான்தான் அவைகளைக் கொண்டு போனது, தன் கணவனுக்கு அதில் ஒரு பொறுப்பும் இல்லை என்று வாக்குமூலம் கொடுத்தாள். போலீஸ்கேஸ் தள்ளப்பட்டது. சிவில் கோர்ட்டில் வேண்டுமானால் வழக்குத் தொடருமாறு நாதனுக்குக் கூறிவிட்டனர்.

நகைகளைத் திருப்பித் தர வேண்டும் என்று தம் மகள் பேரிலும் மருமகன் பேரிலும் வழக்குத்தொடர்ந்தார் நாதன். வீட்டில் பூட்டி வைத்திருந்த அறைகளைக் காலி செய்து தர வேண்டும் என்று வேறு ஒரு வழக்குத்தொடர்ந்தார். தம் மகளிடமிருந்து செட்டில்மெண்ட் மூலம் தமக்குக் கிடைத்த சொத்துக்களை அடமானம் செய்யவும் விற்கவும் ஆரம்பித்தார். நாயகி தன் தந்தை பேரில் வழக்குத் தொடர்ந்தாள். தன்னிடமிருந்து சொத்துக்களையெல்லாம் எழுதி வாங்கிய பத்திரம் தன் விருப்பத்துக்கு விரோதமாகத் தன்னைப் பலாத்காரப் படுத்தி வற்புறுத்தி மோசடியாக எழுதி வாங்கிய பத்திரம்; அதனால் செல்லாது என்றாள். வழக்கு முடியும் வரை தன் தந்தை சொத்துக்களை எவ்வித பராதீனமும் செய்யாதிருக்கக் கோரி மனுப் போட்டுத் தடையும் வாங்கினாள். என் சீனியரும் நானும் நாயகிக்காக ஆஜரானோம்.

கோர்ட்டில் தேவநாதனை நான் காண்பதுண்டு. தன் தந்தையைக் காண நாயகிக்கு ஓர் அச்சம், பயம்கூட இருந்தது. மேலும் அவள் அப்போது கருவுற்றிருந்தாள்; அதனால் கோர்ட்டுக்கு வருவதில்லை. ஆனால் வழக்குகள் இருக்கும் நாட்களில் எங்கள் அறையில் வந்து காத்திருப்பாள். நாதன் பல தடவை என்னிடம், ''நாயகி எங்கே? ஏன் வரவில்லை?'' என்று கேட்பார். அவளைக் காண வேண்டும் என்று அவருக்கு இருந்த மனத் துடிப்பை நான் காண்பேன். என்னிடம், ''என் பெண்ணைப் பார்த்தீர்களா! என்ன செய்தாள்! இது சரியா? நீங்கள் சொல்லுங்கள்'' என்பார். என்னிடம் விவாதம் ஆரம்பிக்க யத்தனிப்பார். ''சுகமாக இருக்கிறாளா?'' என்பார். ''இப்படி எதிர் எதிரா சண்டை போடறோம். உங்களிடம் அவளைப் பற்றிக் கேட்க வேண்டி வந்து விட்டது'' என்பார். கண்களிலே கண்ணீர் பெருகும்; கோபம் பாசம் இவை அலை மோத அவர் மனம் படும் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. என்ன பாசமும் நேசமும் இருப்பினும் பிடிவாதமும் அகங்காரமும் தளரவில்லை. அவர் பெண்தானே! தந்தையின் குணங்கள் அவளிடமிருந்தன.

வழக்குகள் விசாரணைக்கு வரத் தொடங்கின! சமரசமாகப் போக எதிர் வக்கில் உட்பட நாங்கள் எல்லாரும் எடுத்துக் கொண்ட முயற்சி பயன்பட வில்லை; நகை வழக்கு

நாயகிக்குச் சாதகமாகி விட்டது. விடைக் காலி செய்து கொடுக்கக் கேட்டிருந்த வழக்குப் பத்திரத்தை ரத்து செய்யக் கேட்டிருந்த வழக்கின் தீர்ப்பை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட்டது. அப்பொழுது நாயகி ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள்.

செட்டில்மெண்டு பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிப் போட்ட வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில்தான் விசாரணைக்கு வந்தது. நீதிபதி மிக இளைய வயதுடையவர். வழக்கை ராஜி பண்ண முயன்றார்; முடியவில்லை. நாயகி சாட்சியம் கூறினாள். நடந்ததை விவரமாகக் கூறினாள். வற்புறுத்தலின் பேரில்தான் தான் கையெழுத்துப் போட்டது. பத்திரத்தைப் படிக்கக்கூட இல்லை என்றாள். அவளுடன் பணியாற்றிய ஓர் உபாத்தியாயினியும் சாட்சி சொன்னாள். நாதன் தம் சாட்சியத்தில் தம் பெண்ணிடமிருந்து கிடைத்த சொத்துக்களைத் தம் காலத்துக்குப் பின் அவளே அடைய வேண்டியது என்று உயில் எழுதி விட்டதாகக் கூறினார். வற்புறுத்தலின் பேரில் பத்திரத்தை எழுதி வாங்கியிருப்பினும் அவள் தந்தைதான் சொத்தைப் பெற்றவர். அவள் நன்மையை எண்ணித்தான் அப்படிச் செய்தார், அவர் நோக்கம் சுத்தமானதோ, கெட்டதோ அல்ல. மேலும் அவரே உயில் வேறு எழுதி விட்டார். அதனால் பத்திரத்தை ரத்து செய்ய முடியாது என்று தீர்ப்புக் கொடுத்தார் நீதிபதி. நீதிபதியின் சர்ச்சை தவறாகப் பட்டது. அப்பீல் செய்ய வேண்டும் என்று முடிவு கட்டினோம்.

விரோதத்தின் காரணத்தால் நாதன் குழந்தையைத் தூக்கிப் போய் விடுவார் என்று பல பந்தோபஸ்துக்களைப் போட்டிருந்தார்கள், நாயகியும் அவள் கணவரும். குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று துடித்தார் நாதன். ஒரு தடவை சென்று பார்த்தார். மாப்பிள்ளை வாசலில் அங்கு கண்டதும் கோபம் வந்து விட்டது. கோபத்தில் கத்தினாராம். இதனால் குழந்தைக்கு பந்தோபஸ்து அதிகமாயிற்று.

மாதங்கள் ஓடின. நகை வழக்கில் தேவநாதன் அப்பீல் தாக்கல் செய்து விட்டார். பத்திர வழக்கில் அப்பீல் செய்ய நாங்கள் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தோம்.

நாயகியின் குழந்தைக்கு ஓர் ஆண்டும் ஆறு மாதங்களும் ஆகிவிட்டன. குழந்தையைக் கவனிக்க ஒரு தாதியை ஏற்பாடு செய்திருந்தனர். அவளிடம் குழந்தையை விட்டு விட்டு நாயகியும் அவள் கணவரும் வேலைக்குப் போய் வந்தனர். ஒரு நாள் காலை பதினொரு மணி இருக்கும். நாதன் வீட்டுக்கு வந்தார். தாதியிடம் ஏதோ சாக்குப்போக்கு கூறிக் குழந்தையை எடுத்துக் கொண்டு தம் வீட்டுக்குப் போனார். தாதியும் உடன் சென்றாள். குழந்தைக்கு விளையாட்டுப் பொம்மைகள் தின்பண்டங்கள் வெகுமதிகள் கொடுத்தார். மணி ஓடியது. குழந்தையைக் கொண்டு போக வேண்டும் என்றாள் தாதி. கொடுக்க மறுத்தார் நாதன். குழந்தையை எடுக்கப் போனாள். கோபத்தோடு அவளைத் தாக்கினார். தாதிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. குழந்தையை அங்கு கொண்டு வந்தது தெரிந்தாலே கோபிப்பாள் தன் எஜமானி. குழந்தையை அங்கேயே விட்டு விட்டுத் தகவல் சொல்லிவர வெளியே போகப் பயம். கிழவர் குழந்தையை ஏதாவது செய்து விட்டால்? அவர் கோபமும் வழக்குகளைப் பற்றிய விவரமும் அவளுக்குத் தெரியும்.

வீட்டுக்கு வந்த நாயகி குழந்தையையும் தாதியையும் காணாது திகில் அடைந்தாள். தன் தந்தை வீட்டுக்கு ஓடினாள். தந்தை தன் மகளை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்ததைக் கண்டாள். தாதி நாயகியைக் கண்டதும் பயத்தினால் அழ ஆரம்பித்து விட்டாள்.

"வாம்மா" என்று தன் மகளை வாஞ்சையோடு அழைத்தாள் நாயகி. அவளைக் கண்டால் தினம் ஓடி வரும் குழந்தை அன்று 'தாத்தா' என்று அவரை இறுகப் பற்றியது.

"உன்னைப் போல் அவளும் என்னை விட்டுப் போய் விடுவாள் என்று நினைத்தாயா?" என்றார் நாதன். அவர் குரல் நடுங்கியது.

"அப்பா, என்னை மன்னித்து விடுங்கள்" என்று அவர் காலில் விழுந்தாள் நாயகி.

பிரிந்தவர் கூடிவிட்டனர். தம் சொத்தையெல்லாம் பேத்திக்கும், பெண்ணிடமிருந்து கிடைத்த சொத்துக்களைப் பெண்ணுக்கும் எழுதிவைத்தார் நாதன். அவர் ஆசைக்கும் அன்புக்கும் பாத்திரம் கிடைத்து விட்டது. தம் பேத்தியைத் தூக்கிக் கொண்டு நடக்கலானார். பிறகு ஏது வழக்கு? விவரத்தை வந்து கூறினாள் நாயகி. அவள் கூறித்தான் இந்த நாடகத்தின் கடைசிக் காட்சி எனக்குத் தெரிந்தது. வக்கீல்கள், உறவினர்கள், ஹைகோர்ட் நீதிபதிகூடத் தீர்த்து வைக்க முடியாத வழக்கை ஓர் இளம் குழந்தை தீர்த்து வைத்துக் குடும்பத்தினரையும் ஒன்று சேர்த்து விட்டாள்.

புதிதாக முன்சீபாக நியமிக்கப்பட்ட ஒருவர் முன்னால் ஒரு வழக்கு வந்தது. பிரதிவாதி ஆஜரானார் வக்கீல் இல்லாமல்.

"ஏனய்யா உனக்கு வக்கீல் இல்லையா?" என்றார் முன்சீப்.

"கிடைக்கலீங்க. பீஸ் ரொம்பக் கேட்கிறாங்க" என்றார் அவர்.

"மரத்தடி வக்கீல் யாராகிலும் இருப்பாங்க. ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் கொடுத்தால் போதும். மத்தியானம் கேஸைக் கூப்பிடுகிறேன். யாராவது ஒரு வக்கீலை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்றார் வக்கீல்.

பிரதிவாதி அப்பாவி. ஒருசில வக்கீல்களிடம் இதைச் சொல்லி யிருக்கிறார். ஒரு பதிலைக் கூறி மத்தியானம் முன்சீப்பிடம் அவ்வாறு கூறுமாறு அனுப்பினார் ஒரு வக்கீல்.

மத்தியானம் வழக்கைக் கூப்பிட்டார் முன்சீப். "என்னய்யா திரும்பவும் வக்கீல் இல்லாமல் நிற்கிறீர்கள்?" என்றார்.

"நீங்க சொன்னபடி கேட்டுப் பார்த்தேனுங்க. மரத்தடி வக்கீல் எல்லாம் முன்சீப்பா போய்விட்டார்களாம். இப்ப யாருமில்லையாம்!" என்றான் பிரதிவாதி!


வக்கீல் தொழிலில் அன்றாடம் இதுபோன்ற ரசமான அனுபவங்கள் எத்தனை எத்தனையோ ஏற்படுகின்றன. அத்தனையும் சொல்லிச் சாத்தியமா?

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

வேறெந்த டயரையும்விட நீடித்து உழைக்கிறது. இதோ அதன் காரணங்கள்-




பாதுகாப்புக்கெனவே பிரத்தியேகமாகத் தொழிலியலுடன் டிசைன் செய்யப்பட்ட டிரேடில் ஆயிரக்கணக்கான, வழுக்குவதைத் தடுக்கக் கூடிய கோணங்கள், வண்டியை ஓட்டத் தொடங்கும்போதும், நிறுத்தும்போதும், திருப்பங்களிலும் வழுக்குவதிலிருந்து தாமாகவே பாதுகாப்பளிக்கின்றன. வழுக்குவது குறைதல் என்பதன் பொருள் நீடித்த உழைப்பாகும்.



எளிதில் தேய்வடையாத டிரெட் ரப்பர் கலவை, இந்திய ரஸ்தாக்கள் மற்றும் சீதோஷ்ண நிலைகளுக்கு ஏற்ப அளவறிந்து சேர்க்கப்பட்டதாகும். மேலும் பாதுகாப்புக்கென வலுவாக்கப்பட்டுள்ள, பசை தோய்க்கப்பட்ட கார்டு பாடி உங்களுக்கு ரஸ்தா அபாயங்களிலிருந்து நிச்சயமான பாதுகாப்பளிக்கிறது.



பயர்ஸ்டோன் – தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்


Water Problem?
Solve it with
MYERS Deepwell Ejecto Pump
For continuous supply of cool, fresh water under pressure Myers EJECTO Pump has no equal.
Consider these advantages :-
1. It supplies water directly from source to any desired point or points.
2. It can be installed at ground level.
3. It needs no overhead tank.
4. Its capacity of 500 to 2000 g.p.h. is suitable for most needs.
5. It works silently, efficiently, economically.
6. It is ideal for small industries, hotels, flats, etc
Compare the above features with the disadvantages of :-
• Centrifugal Pumps which have to be installed deep within the well where the motor is likely to catch damp and burn out.
• Deepwell Turbine Pumps whose high capacities are unsuited for average needs.
• Reciprocating Deepwell Pumps which are extremely noisy.
• Submersible Pumps whose motors, when burnt, cannot be repaired locally.
Myers or Wasp
Automatic ELECTRIC PUMPS
WATER SUPPLY SPECIALISTS PVT. LTD
Dept No. 55
330, Thambu Chetty Street, Madras - 1



விடுதலை

நகரசபை நாய் மோட்டார் வேட்டைக்குப் புறப்பட்டு விட்டது!

நகரத்தில் நாய்களின் தொல்லை சகிக்க முடியவில்லை. கழுத்தில் பட்டை இல்லாத வெறும் நாய்கள் வீதிகளிலும், ரஸ்தாக்களிலும், சந்து பொந்துகளிலும் நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு ஆதரவின்றித் திரிந்தன. எலும்பைத் தோல் விழுங்க, முட்டும் முட்டும் தட்ட, ஏராளமான சொறி நாய்கள் 'வர்ச் வர்ச்' என்று மொட்டைக் கால் நகங்களால் தரையைத் தேய்த்துக் கொண்டு தெருக்களில் ஓடியலைந்தன. நாய் ஜாதியிலும் நாளுக்கு நாள் இனப் பெருக்கம், மனித ஜாதியைப் போல.

நகரின் நெருக்கடியான, கலகலப்பான வீதிகளைக் குறுக்கிட்டுக் கடந்து செல்கையில் மோட்டார், லாரி முதலிய வாகனங்களில் அடிபட்டுச் சில நாய்கள் அங்கங்கே செத்து மடிந்தன. ஒரு தோட்டக்காரன் ஓயாமல் தன்னை அலைந்து தொந்தரவு கொடுத்த ஒரு தெரு நாயை விஷமிட்டுக் கொன்றான். இப்படி இன்னும் சில நாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் இதனாலெல்லாம் நாய்த் தொகை மட்டுப்பட்டு விடவில்லை. பத்து நாய்கள் செத்து மண்ணில் புதைந்தபோது இருபது புது நாய்கள் பிறந்து எண்ணாது பொடிக் கால்களால் மண்ணைப் பிறாண்டின.

இப்படி சேறும் சேறும் நாய்க் கூட்டம் பெருகவே, நகரசபையில் அவசரத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார் அங்கத்தினர் ஒருவர். அவருடைய மைந்தன் அவன் பள்ளிக்கூடம் செல்லுகையில் ஒரு தெருநாய் கடித்துவிட்ட நிகழ்ச்சிக்குப் பின் நிகழ்ந்த முதல் நகர சபைக் கூட்டத்தில் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. மறுநாளே நகர சபை நாய் மோட்டார் வேட்டைக்குப் புறப்பட்டு விட்டது.

பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

வடக்கே இருந்து வந்த நாய் மோட்டார் மணிக்கூண்டைச் சுற்றி வளைந்து வளைவாக வந்து மேற்கே நீளும் மெயின் ரஸ்தாவில் திரும்பியபோது, டிக்கி குறுக்கே வந்து விழுந்தது. டிரைவர் பளிச்சென்று பிரேக்கைப் போட்டு நிறுத்தி, "அண்ணே! அந்த நாயைச் சட்டுன்னு பிடி" என்றான். நாய் பிடிப்பவன் தனது மாமூல் நாய் பிடிக்கும் கருவிகள், உத்திகள் எதையும் பயன்படுத்தாமலே, ஒரே தொடியில் 'லபக்'கென்று எப்படியோ டிக்கியைப் பிடித்து வாயைக் கட்டி வண்டிக்குள் தள்ளிப் பூட்டிவிட்டான். தன் தொழிலில் கெட்டிக்காரன் அவன்.

ஒரு கடை வாசலில் சிகரெட் பிடித்தபடி நின்று கொண்டிருந்த ஆறுமுகம் டிக்கி பிடிபட்ட காட்சியைக் கவனித்தான். ஒரு நிமிஷம் திக்பிரமை பிடித்தவன் போல் அசையாமல் நின்றான். பிறகு அவனுக்குத் தன் உணர்வு வந்தது. தன் அருமைத் தோழன் பப்புவின் டிக்கி பிடிபட்டதை அவன் கண்கள் நம்பவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு நிமிஷம் யோசித்தபடி நின்றான். மறு நிமிஷம் அவன் கால்கள் நாய் மோட்டாரை நோக்கி விரைந்தன.

"நாயை விடுங்கப்பா, அது எங்க பப்பு ஊடைய டிக்கி; தெரியுமில்லே? வெறும் எச்சில் பொறுக்கி நாயின்னு நெனச்சிட்டீங்களா?" என்று ரோஷத்துடன் கேட்டான்.

"போடா, போ! நீயே வெறும் எச்சில் பொறுக்கி நாய்தானே?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் கையிலிருந்த பீடியை உறிஞ்சி இழுத்தான் டிரைவர்.

ஆறுமுகத்துக்கு ரத்தம் கொதித்தது.

"இந்தாய்யா, மரியாதையாப் பேசு. எனக்குக் கோபம் வந்தால் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது!" என்று ஆக்ரோஷத்துடன் கத்தினான் அவன்.

"ஆமா, நீ ரொம்பச் செய்விறே.... போ போ" என்று புகையை ஊதிவிட்டு மோட்டாரை விட்டு இறங்கி, பக்கத்திலிருந்த நாயர் கடையை நோக்கி நடந்தான் டிரைவர். அவனுடன் வந்த வேறொருவனும் —நாய் பிடிப்பவன் — அவனோடு பேசிக்கொண்டே நடந்தான்.

ஆறுமுகம் ஒன்றும் பேசாமல் நின்றான். தன் தோழர்கள் தன்னோடு அப்போது இல்லையே என்று வருந்தினான். ஒருவருமில்லாவிட்டாலும் நாயின் உரிமைக்காரனான பப்புவாவது அப்போது இருந்திருக்கக் கூடாதா? எத்தனை ஆசையோடு அருமையாக டிக்கியை வளர்த்தான் பப்பு!

ஒரு வருஷத்துக்கு முன்னும் டிக்கி பணக்கார வீட்டு நாயாக இருந்தது. அந்த வீட்டில் சில மாதங்கள் கார் சுத்தப்படுத்தும் வேலை பார்த்தான் பப்பு. அப்போதுதான் அவனுக்கும் டிக்கிக்கும் நட்பு ஏற்பட்டது. அந்த வீட்டில் அவனிடம் பிரியமாக இருந்தது அந்த டிக்கி மட்டும்தான். டிக்கியைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் அவனைச் சேர்ந்ததுதான். மார்க்கெட்டிலிருந்து டிக்கிக்குக் கறி வாங்குவதற்குப் பப்புதான் தினமும் போவான்.

ஒரு நாள் டிக்கியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு கடைத் தெருவுக்குப் போனான் பப்பு, தன் எஜமானர் வீட்டுக்கு ஒரு

கிருஷ்ணன் நம்பி

மூட்டை அரிசி வாங்குவதற்காக. அரிசி மூட்டையை வாங்கிக் கடைக்கு வெளியே போட்டு வைத்துவிட்டு எதிர்ப்பக்கமாக இருந்த மார்க்கெட்டில் கோழி முட்டை வாங்குவதற்காகப் போனான் பப்பு. டிக்கியும் அவன் பின்னால் போயிற்று. மூட்டைக்குக் காவலாக நிற்கும்படி டிக்கியிடம் சொன்னான். டிக்கி அதைப் புரிந்துகொள்ளாதது போல் அவன் பின்னாலேயே சென்றது. ஒரு நிமிஷத்தில் திரும்பி விடலாமே என்று எண்ணத்தில் மார்க்கெட்டுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்த பப்பு அரிசி மூட்டை-



யைக் காணாமல் பதறிப் போனான். ''அரிசி மூட்டையைக் காணோமுங்க'' என்று கடைக்காரனிடம் அழுதுகொண்டே சொன்னான் பப்பு. ஆனால் மறு கணம் பக்கத்துச் சந்தை நோக்கிப் பாய்ந்தது டிக்கி. சற்றுத் தூரத்தில் அரிசி மூட்டையுடன் கம்பி நீட்டிக் கொண்டிருந்த ஆசாமியைக் கவ்விப் பிடித்தது.

அந்த ஆசாமி மூட்டையைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். டிக்கி பின்னால் துரத்திச் சென்றது. அப்பப்பா! அந்த ஆசாமி அன்று டிக்கியிடம் பட்ட பாட்டை இன்று நினைத்தால்கூடப் புல்லரிக்கிறது பப்புவுக்கு.

அந்தப் பணக்கார உத்தியோகஸ்தர் வீட்டில் அதிக நாட்கள் வேலை பார்க்கவில்லை பப்பு. வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டார் அவர். பப்பு இதை எதிர்பார்க்கவில்லை. வேலை போய் விடும் என்பதுகூட அத்தனை பெரிய விஷயமாகப்பட வில்லை அவனுக்கு. டிக்கியைப் பிரிய வேண்டுமே என்றுதான் பெருங் கவலையாயிருந்தது.

ஊரை விட்டுப் போகும்போது சம்பளத்துடன், ''இந்தா, இதையும் வைத்துக்கொள்'' என்று மேலும் ஒரு பத்து ரூபாயை நீட்டினார் எஜமானர்.

பப்பு தலையைக் குனிந்தபடி அழுதுகொண்டு நின்றான்.

''என்டா, பயலே, அழறே? பணம் பத்தாதா?'' என்று கேட்டார் அவர்.

''பணம் ஒண்ணும் வேண்டாங்க; டிக்கி போயிடுமேன்னு நெனச்சா அழுவறேனுங்க'' என்று மேலும் அழுதான் பப்பு.

அவர் ஒரு கணம் யோசித்தார்.

''சரி, டிக்கியை நீயே எடுத்துக் கொள். அழாதே. அதைக் கொன்னுப்புடாதே! நல்லா சோறு போட்டுக் காப்பாத்து. நல்ல பிராணி அது.... என்ன?'' என்றார் அவர்.



பப்பு ஸ்தம்பித்துப் போனான். அவனுக்கு அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியை எப்படி வருணிக்க முடியும்!

சம்பளப் பணம் பதினைந்து ரூபாய், இதைப் பத்து ரூபாய், எல்லாவற்றுக்கும் மேலாக டிக்கி இவைகளுடன் தன் பழைய எஜமானர் வீட்டை விட்டு ஒரு நாள் காலையில் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் வெளியே வந்தான்.

பப்புவுக்கு இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? அவனுக்கு அம்மா, அப்பா இல்லை; அண்ணன், தம்பி இல்லை. எல்லோரும், எப்போதோ, எப்படி எப்படியோ, செத்தோ பிரிந்தோ போய் விட்டார்கள்.

கார் துடைக்கும் வேலையை விடவும் கூலி வேலை பப்புவுக்கு மிகவும் பிடித்திருந்தது. பரிபூரணமான சுதந்திர வாழ்வு அது. யாரிடமும் அடிபணியாமல் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சுற்றித் திரிந்தான் பப்பு. டிக்கியும் அவன் பின்னால் அலைந்து திரிந்தது. அவன் கொடுத்ததை உண்டது; இருட்டியும் நின்றது. பப்பு திருடவில்லை. நன்றாக வேலை செய்தான். பெரிய பெரிய கனமான மூட்டைகளைச் சர்வ அலட்சியமாகத் தூக்கியெறிந்து விளை



இண்டியனாயில் என்றாலே முன்னேற்றம்


ஒவ்வொரு துளியும்
உற்பத்திவேகத்தின் உயிர்.




உலகத்து மூலப்பொருள்களிலே அதி முக்கியமானது எண்ணெய். போக்குவரவுத் துறை ஒன்றே போதும் எண்ணெயின் முக்கியத்துவத்தை விளக்க. எண்ணெய் இல்லையேல் ஆகாயவிமானம், ரெயில், மோட்டார், கப்பல் எதுவுமே ஓடாது. தொழில் துறையின் சக்கரங்கள் யாவும் ஓய்ந்துநிற்கும்.

100க்கு நூறு அரசாங்க முயற்சியாக 1959 ஜூன் மாதம் நிறுவப்பட்ட இண்டியன் ஆயில் கம்பெனி லிட்., திட்டமான இந்நோக்கங்களைக் கொண்டுள்ளது: தரமான பெட்ரோலியம் தயாரிப்புகளை வழங்கல்; திறம்பட அவற்றை நாடுமுழுதும் விற்பனைக்கு விடல், பிறநாட்டுச் செலாவணிச் சேம நிதியத்தைக் காத்துக்கொள்ளல்.

இண்டியனால் விற்பனைக்குக் கொணர்ந்து விநியோகிப்பவை: ஹை ஸ்பீட் மற்றும் லைட் டீஸல் எண்ணெய்கள், மோட்டார் ஸ்பிரிட், கெரோஸின், உயர்தர லூப்ரிகண்ட்டுகள், மின்மாற்றி மற்றும் இருசு எண்ணெய்கள், பெட்ரோலியம் கல்கரி. மோபில் தொழிலுபயோக, ஆட்டோமோட்டிவ் லூப்ரிகண்டுகள் ஆகியவற்றுக்கும் இந்தியாவிலே பூரண விநியோகஸ்தர்களாக உள்ளவர்கள் இண்டியன் ஆயில் கம்பெனி.





INDIANOIL

100க்கு நூறு
தேசியத்
திருமுயற்சி

இண்டியன் ஆயில்

கம்பெனி லிமிடெட்

(இந்திய அரசாங்கப் பொறுப்பிலுள்ள ஒரு நிறுவனம்) 'ராஷ்மி', கார்மைக்கேல் ரோடு, பம்பாய் 26. டபிள்யூ பீ: பம்பாய்: வோல்கா பில்டிங், கினார்க் ரோடு, பம்பாய்-34; சென்னை: "லிவ்ராஜ் மேன்ஷன்," 150-A, மவுண்டு ரோடு, மதராஸ் 2; கல்கத்தா: பி.64, சுந்தரி மோகன் அவென்யூ, கல்கத்தா 14; நியூ டெல்லி: "ஜீவன் விகார்" 5 பார்லிமெண்டு ஸ்ட்ரீட், நியூ டெல்லி 1

mas. IOC 2092 A TAM.

வாடிஞன். சில்லறைகள் அவன் நிஜார்ப் பையில் குலுங்கின. ஆனந்தமாக அவன் பீடியும் சிகரெட்டும் பிடித்தான். பல கூலிக் கார நண்பர்கள் அவனுக்குக் கிடைத்தார்கள். எல்லாருக்கும் பப்புவிடம் மிகுந்த பிரியம். டிக்கியும் அவனோடு தூங்கி, அவனோடு உண்டு, அவனோடுதான் இறப்பேன் என்பதுபோல் வாழ்ந்தது.

எல்லாம் சரி. டிக்கி ஒரு கழுத்துப் பட்டை இல்லாமல் தெருவில் அலையும் நாய்களைப் போலிருந்தால், நகர சபையின் விசேஷ விருந்தினராக வேண்டியிருக்கும் என்பது பற்றிப் பப்பு சிந்திக்கவே இல்லை!

என்ன செய்வது? நாய் மோட்டாருக்குள் இப்போது டிக்கி சிறைப்பட்டு விட்டதே.

ஆறுமுகம் பப்புவைத் தேடிக் கொண்டு அங்கும் இங்குமாக ஓடி ஓடி அலைந்து, பஸ் ஸ்டாண்டின் அருகே கண்டுபிடித்தான். சில்லறைக் காசுகளை எண்ணிக் கணக்கிட்ட படி பப்பு எதிரே வந்து கொண்டிருந்தான்.

மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, இரைக்க இரைக்க ஆறுமுகம் தன்னெதிரே ஓடி வருவதைப் பார்த்து என்னவோ ஏதோ என்று அப்படியே நின்றான் பப்பு.

''டிக்கியை முனிசிபாலிடிகாரங்க புடிச்சிக் கிட்டாங்கடா; கொன்னுப்புடுவாங்க'' என்றான் ஆறுமுகம் பதைபதைப்புடன்.

பப்பு திடுக்கிட்டான். ''அந்த மோட்டாரு போயிடுச்சா, நிற்கிறதா அங்கே?'' என்று பரக்கப் பரக்கக் கேட்டான்.

''அங்கேதான் நிக்குது'' என்றான் ஆறுமுகம்.

''சரி, வா, பார்க்கலாம். ஓடி வா'' என்று கையிலிருந்த சில்லறைக் காசுகளை நிஜார்ப் பையில் திணித்து விட்டு மணிக் கூண்டை நோக்கி மிக வேகமாக ஓட்டம் பிடித்தான்.

மணிக் கூண்டை அவர்கள் நெருங்கி விட்டார்கள். ஆனால் நாய் மோட்டாரைத்தான் அங்கு காணோம்.

ஏமாற்றத்துடனும், ஆத்திரத்துடனும் பப்புவும் ஆறுமுகமும் சில நிமிஷங்கள் அப்படியே அசையாமல் நின்றார்கள்.

பப்புவுக்குக் கண்களில் நீர் முட்டிவிட்டது. மெதுவாக ஆறுமுகத்தின் பக்கம் திரும்பி, ''என்னடா, பண்ணறது?'' என்று கேட்டான்.

ஆறுமுகம் ஒன்றும் பேசாமல் துக்கத்துடன் நின்றான். மறு நிமிஷம் பேய் வெறி பிடித்த வன் போல் பப்பு கூச்சலிட்டான்.

''வாடா, ஆறுமுகம்! டிக்கி எப்படியும் கிடைச்சாகணும்... வா.... வாடா!''

ஓடி ஓடிச் சோர்ந்து போய் நின்ற ஆறுமுகத்தின் கையைப் பற்றிக் கரகர வென்று இழுத்தான் பப்பு.

''எப்படிடா, கிடைக்கும்?'' என்று அவ நம்பிக்கையுடன் கேட்டபடி நெற்றியில் பொங்கி நின்ற வேர்வையை விரலால் வழித்து விட்டான் ஆறுமுகம்.

''எப்படியா?.... எப்படியாவது, டிக்கி எனக்குக் கிடைத்தாகணும். வா, போவோம், நாய் மோட்டாரைத் தேடி...'' என்று ஆறுமுகத்தை இழுத்தான் பப்பு.

அப்போது மல்லையா அங்கு வந்தான். மல்லையா பப்புவின் நண்பர் குழாத்தில் முக்கியமானவன். நடந்த விஷயங்களை யெல்லாம் அவன் தெரிந்துகொண்டான்.



''இந்தப் புடவைக்கு 'நிருபர்கள் புடவை'ன்னு பேரு. இதைக் கட்டிக் கிட்டுப் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்தீங்கன்னு... உங்களை வயசே கேக்கமாட்டாங்க. அவங்களே பதினாறு வயசுன்னு எழுதிக்கிடுவாங்க. வேணுமின்னு பாட்டி நட்சத்திரம் பங்கஜம்மாளைக் கேட்டுப் பாருங்க.''

''நான் இருக்கேன்.. வாடா, பப்பு! டிக்கியைப் புடுங்கிக்கிட்டு வந்திடுவோம்!'' என்றான் மல்லையா. ஆம், அவன் டிக்கியைப் பிடுங்கிக் கொண்டு வருவான். ஒரு டிக்கி அல்ல, ஆயிரம் டிக்கிகளை அவன் பிடுங்கிக் கொண்டு வருவான். அவன் பலசாலி.

''எங்கே போகணும்?'' என்று கேட்டான்.

''அதுதான் தெரியல்லே. மோட்டாரு எங்கே போயிருக்கோ, டிக்கியைக் கொன்னுப் புட்டாங்களோ என்னவோ?'' என்றான் ஆறுமுகம் கவலையோடு.

''அழாதே வளியாதே! புடிச்ச உடனே ஒன்னும் கொன்னு போடமாட்டான்.... முனிசிபாலிடிக்கே போகலாம்டா, மல்லையா'' என்றான் பப்பு.

ஆனால் —

நாய் மோட்டார் மீண்டும் அந்தப் பக்கமாக அப்போது வந்தது. ''அதோ, அதோ'' என்று கத்தினான் ஆறுமுகம். மூவரும் ஓடினர்.

ஒரு தகரக் குப்பைத் தொட்டியின் அருகே நாய் மோட்டார் வந்து நின்றது.

மல்லையா மோட்டாரின் அருகே சென்றான். டிரைவர் காக்கிச் சட்டையும், கறுத்த புட்டமாகப் பீடிப் புகையுடன் இறங்கினான். நாய் பிடிக்கும் வளையத்துடன் இன்னொரு காக்கிச் சட்டைக்காரன் டிரைவர் இறங்கிய பக்கத்துக்கு எதிர்ப் பக்கம் இறங்கினான்.

பப்பு கம்பிக் கோடுகளின் இடுக்குகளினூடு நாய்களைக் கவனித்தான். பல ரகமான நாய்கள் நெருங்கிக் கசங்கி, உருண்டு புரண்டு முறுமுறுத்தன. டிக்கி எங்கே? பப்பு துருவித் துருவிப் பார்த்தான்.

மல்லையா டிரைவரண்டை சென்று பேசினான்: "எங்க நாயை வெளியே விட்டுடுங்க....என்ன?"

"எங்க நாயா? எந்த நாய்? உட்றதுக்கா புடிச்சுப் போட்டிருக்கோம்?"

"டிக்கி எங்க நாயி. அதோ நிக்கிறானே, பப்பு, அவனுது. வெள்ளை நாயி. கழுத்துப் பக்கம் கருப்பா ரெண்டு வட்டம் இருக்கும். ஜடை இருக்காது."

"ஒன்கிட்டே யாரும் அடையாளம் கேக்கல்லே. தெரு நாயைப் புடிச்சிக்கிட்டுப் போறோம். கழுத்துப் பட்டை போட்டு, சங்கிலி போட்டுக் கட்டிப் போட்டிருந்தால் நாங்க எதுக்குப் புடிக்கிறோம்? எங்களுக்குப் பித்தா பிடிச்சிருக்கு?.... போ, போ! அந்தண்டை போ" என்று புகையை இழுத்து விட்டான் டிரைவர்.

மல்லையா முறைத்தான். "நாயை உடுறியா இல்லையா?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டான்.

"டிக்கி, டிக்கி" என்று கம்பி இடுக்கு வழியே சத்தம் கொடுத்தான் பப்பு.

"என்னடா, பேத்தறே, நாயை ஒண்ணும் உட முடியாது. போ.... இப்படி விட்டுக்கிட்டிருக்கவா நாய் புடிக்கிறோம்?"

மல்லையா இடது கைவிரல்களைச் சுருட்டி டிரைவரின் முகத்தில் ஒரு குத்து விட்டான். ஆனால் குத்து சரியாக விழவில்லை. 'சட்'டென்று விலகி, 'டபிச்'சென்று காருக்குள் ஏறிக் கொண்டான் டிரைவர்.

பப்புவின் வேறு சில நண்பர்களும் ஒவ்வொருவராக அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் ஜல்லிக் கல் குவியலின் அருகே ஆறுமுகத்தின் பக்கம் நின்று கொண்டிருந்தனர்.

டிரைவர் மோட்டாருக்குள் ஏறியதுதான் தாமதம், ஒரு ஜல்லிக் கல் 'பட்'டென்று டிரைவரின் தோள்பட்டையில் வந்து விழுந்தது. டிரைவர் காரைக் கிளப்ப ஆயத்தம் செய்தான். 'டர்ர்ர்ர்ர்......'

மறுகணம் படபடவென்று ஜல்லிக் கற்கள் சரமாரியாக மோட்டாரை எல்லாப் பக்கங்களிலும் தாக்கின. நாய் பிடிக்கப் போனவன் ஒரு நாயுடன் மோட்டாரை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

ஆறுமுகம், பப்பு, இன்னும் பத்துப் பன்னிரண்டு சிறுவர்கள் மோட்டாரைச் சுற்றி அம்பாரங்களாகக் கற்களைக் குவித்து வைத்துக் கொண்டு எடுத்தெடுத்து வீசத் தொடங்கினர். டிரைவர் உள்ளே பதுங்கிக் கொண்டான். நாய்கள் குரைத்துத் துள்ளித் தடுமாறி விழுந்தன. மோட்டாரின் பின்புறத்துப் பெரிய பூட்டு அடிபட்டு ஆடியது.

சிறுவர்கள் வெறி பிடித்தவர்கள் போல் விடாமல் கற்களை வீசினர். மல்லையா ஒரு கணம் அவர்களைத் தடுக்க முயன்றான். மறு கணம் அவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு கற்களை வீச ஆரம்பித்தான்.

ஏராளமான ஜனங்கள் கூடி விட்டனர். இரண்டு போலீஸ் சிப்பாய்கள் கிட்டே நெருங்கத் துணியாமல் சற்றுத் தூரத்தில் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

மோட்டார் நசுங்கிக் கொண்டிருந்தது. கற்கள் மணிக் கூண்டுப் பிரதேசத்தில் அங்கும் இங்குமாகப் பறந்தன. பாதையில் போனவர்கள் பயந்து ஒதுங்கி ஓடினார்கள்.

சிறிது நேரத்தில் பூட்டு உடைந்து, கதவே உடைந்து விழுந்தது. நாய்கள் ஊளையிட்டபடி வெளியே குதித்தன.

"நிறுத்துங்கடா! நிறுத்துங்க....!" என்று கத்தினான் பப்பு.

ஆனால் ஒன்றும் நிற்கவில்லை. சிறுவர்கள் 'பட் பட்'டென்று ஏக உற்சாகத்துடன் கற்களை வீசிய வண்ணம் இருந்தனர். ஆறுமுகத்துக்குப் பேய்த்தனமான குஷி. கல்லடிபட்டு ரத்தக் காயங்களுடன் நாய்கள் ஊளையிட்டுக் குதித்தோடின.

"டிக்கி!" என்று உரக்கக் கூவினான் பப்பு. டிக்கி வெளியே குதித்தது. அதன் மண்டையை நாலைந்து கற்கள் தாக்கி உடைத்தன. பீறிடும் ரத்தம் சிதறி வழிய டிக்கி வெளியே குதித்து ரத்த வெள்ளத்தில் விழுந்து துடித்தது.

"டிக்கி, டிக்கி!" என்று ஓடினான் பப்பு.

அதற்குள் டிக்கி செத்துவிட்டது! அது விடுதலை பெற்று விட்டது, நகர சபைக்காரனிடமிருந்தும், பப்புவிடமிருந்தும்.

பப்பு அழுதான். அவன் தலையிலும் கல் பட்டு ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

மல்லையாவின் முகத்தில் அசடு வழிந்தது.



வழக்கை ஒத்தி வைத்திருப்பதாக நீதிபதி அறிவித்ததும் நீதிமன்றத்தில் ஒரு விநாடி அசாதாரணமான அமைதி நிலவியது. படு பயங்கரமான அவ்வழக்கின் தீர்ப்புக்காகச் செவியைத் தீட்டிக் காத்திருந்த மக்கள் இன்னும் நான்கு நாட்கள் பொறுத்திருக்க வேண்டுமோ எனச் 'சூள்' கொட்டினர்.

குற்றவாளிக் கூண்டில் நிற்கும் நடராஜன் மௌனமாகத் தலையைக் கவிழ்த்துக்கொண்டான். 'கரி கரி' என இரு பொட்டுக் கண்ணீர்த் துளிகள், கூண்டைப் பற்றியிருக்கும் அந்த முரட்டுக் கரங்களில் பட்டுத் தெறித்தன. மனத்தில் தெம்பைத் திணித்துக் கொண்டு எதிர்ப் பெஞ்சில் அமர்ந்திருக்கும் மரகதத்தை ஏறிட்டு நோக்கினான்.

அந்தத் தாயின் விழிகளில் வேதனை நீராகப் பெருகி வழிந்தது. மகனின் இந்தக் கோலத்தை... ஐயோ, முப்பது வயதுகூட நிரம்பவில்லையே அவனுக்கு... இந்த வயதில் கையில் விலங்குடன் சிறைக் கம்பிகளுக்கு அப்பால் அவனை நிறுத்தி.... முந்தானையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கினாள். புதுப் பணத்தின் பிடிப்பு, உடம்பில் சற்றே பளபளத்தாலும் பணத்துக்கு வழி செய்த பாச மகனின் நாச காலம் - நாசக் கோலம் - அந்தப் பளபளப்பையெல்லாம் பற்றியெரிக்கும் நெருப்பாகிவிட்டது. அவளது உடல், உள்ளம், உணர்வு யாவும் தாயன்பு தீயாய்க் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தீயின் செந்நாக்கைக் காணக் கண்களின்றித் தலை குனிந்தான் மகன். தானே இழைத்த தவறு, தன் தாய்க்குத் தருகின்ற வேதனையை — சோதனையும் கூட — கண்ணாலும் கண்டு அவனும் கண்ணீர் பெருக்கத்தான் முடிந்தது.

தாய் — மகன்!

இந்த உறவை நிலைநாட்டி உரிமைக் குரலால் ஓலமிட நேரம் அனுமதிக்கவில்லை. ஆதிநாள் தொட்டுப் பணத்துக்கும், பாசத்துக்கும், பண்புக்கும், பதவிக்கும் திசை தோறும் நடைபெறும் உரிமைப்போரின் உணர்ச்சிப் போராட்டத்தில் சிக்கலைத் தீர்த்து வைத்தே தம்மையும் சுவை உணர்வுகளைப் பொறுத்தவரை மரமோ, கல்லோ வென மாற்றிக் கொள்ளத் தொடங்கிவிட்ட நீதிபதியவர்களுக்கும், வக்கீல் மற்றவர்களுக்கும் தாய் — மகன் இருவருக்குமிடையே கண்ணீர் வழியால் பின்னப்படும் பாச வலையைக் கண்டு ரசிக்க நேரமுமில்லை, நெஞ்சப் பக்குவமுமில்லை.

கடமைக்கு முதலிடம் கொடுக்கும் சமுதாயக் காவலர்களில் இருவர் — இரு போலீஸ் ஜவான்கள் — நடராஜனைப் பின்னின்று அழைத்து மீண்டும் கையில் விலங்கிட்டு இரு புறமும் காவலாய் நடந்து அழைத்துச் சென்றனர். சட்ட நீதி ஒரு பக்கமும் சமுதாய நேர்மை மறுபுறமும் நின்று, அதை முன்பே உணராத் தவறிவிட்ட மகனை அழைத்துச் செல்வதாக உணர்ந்த மரகதம் - குற்றவாளியின் தாய், பாசம் மீறிய நிலையில் பதறினாள். கோர்ட்டே கலங்கிவிடும் அளவுக்கு அவள் நெஞ்சிலிருந்து நீளமாக எழுந்தது பாச ஓலம். துணைக்கு வந்த இருவரும் அவளை வெளியே அழைத்து வந்தனர்.

கோர்ட் வாசலில் போலீஸ் ஜீப் நின்றது. கையில் விலங்குடன் வண்டியில் அடியெடுத்து வைக்கு முன்னர் நடராஜன் கலங்கிய விழிகளுடன் கட்டிடத்தை திரும்பி நோக்கினான். மற்றொரு பகுதியிலிருந்து இருவரின் கைத் தாங்கலில் நடைப் பிணமாய் நகர்ந்து வந்து வண்டியில் ஏறும் தாயை, துடிப்புடன் நோக்கினான். வேண்டுமென்றே பாராமுகமாக்கிக்கொண்ட நெஞ்சம் அதற்கு மேல் பார்க்க அனுமதிக்கவில்லை.

தாய் இருந்த வண்டியும் மகன் இருந்த வண்டியும் வெளி வாசல் வரை ஒன்றாகவே வந்து, தெருவுக்கு வந்ததும் பிரிந்தன.

வாழாத உடலில் தங்கிவிட்ட சாகாத உயிரின் வேதனைக்குள் அகப்பட்டுத் திணறும் நடராஜன், தன்னை விடுவித்துக்கொள்ளும் வகையோ, வழியோ தெரியாமல் துடித்தான். மனத்தைப் பிரதிபலிக்கிறாற் போல் சுற்றுச் சூழல் இருண்டு கிடந்த நான்கு சுவர்களுக்கு நடுவில் பித்தனோ ஞானியோ போல் பேச்சை ஒடுக்கிப் பார்வையைப் பரவலாகச் சிதற விடாமல் ஒருமுகமாக்கி மௌனத்துள் ஆழ்ந்திருந்தபோதும் அவனது உள்ளம் மட்டும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பனிப் புயல் பெய்து ஜில்லிட்ட உள்ளத்திலும் எண்ணங்கள் தீயாய்க் கனன்று கொண்டிருந்த விசித்திர நிலையின் வேதனையிலிருந்தும் விடுவித்துக்கொள்ள முயன்று தோல்வியொன்றையே துணையாகப் பெற்றான் நடராஜன்.

மனத்தின் வேகம் விசும்பலாகப் பிறந்து அலையலையாகப் பரவிப் பேரிரைச்சலாக உருவெடுத்துச் சிறைச்சாலையைப் பிளக்கும் ஒலிப் பாணமாய் அதிர்ந்தது. திடீரென்று எழுந்த அந்த ஓசையினால் திடுக்கிட்டு எழுந்த காவலாளிகள் நடுங்கி விட்டனர். அடைத்த கதவுக்கு அப்பால் நின்று டார்ச் விளக்கைப் பொருத்திச் சிறைக்குள் ஒளியைப் புகுத்திய அவர்களின் பார்வைக்குப் பைத்தியம் பிடித்தவன் போல் பிரள பிரள விழித்துக் கொண்டும் செய்யத் தகாததைச் செய்து விட்டுச் செய்த தன் தவற்றை உணர்ந்து அதற்கு ஆத்மார்த்தமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் பரிபக்குவ ஞானி போலவும் ஒருங்கே தோன்றிய நடராஜனின் உருவம் மங்கலாகத் தெரிந்தது.

''என்னடா சத்தம் அங்கே?'' ஜெயிலர் கத்தினான். முந்தைய நிலை — அதாவது இந்தச் சிறைக்குள் அவன் தள்ளப்படுவதற்கு முன் நாலு பேர்கள் மெச்ச எங்கோ அவன் வாழ்ந்த நிலை — தெரிந்திருந்தால் 'டா' போட்டுப் பேசுவானா?

''கோர்ட்டு வரைக்கும் போனியே, தீர்ப்பையும் இன்னிக்கே வாங்கிட்டு வர்றது தானே... கழுத்தறுப்பு...''

தன்னையும் தான் இருக்கும் சூழ்நிலையையும் சிறிது சிறிதாக உணரத் தொடங்கிய நடராஜன், தான் செய்த செயலின் விளைவையும் உணர்ந்தான். முன்பு சீர்கேடாகச் செய்த தின் விளைவாகச் சிதைந்துவிட்ட வாழ்வின் அந்திமத்தில் —அந்திமம் நெருங்கிவிட்டதே என்ற அவலத் துடிப்பில் அந்தத் துடிப்பை உணர்ந்தும், உணர்ந்தியும் அனுபவித்த துன்பச் சுமையின் அழுத்தத்தில் தன்னை மீறிய வெறியின் வேதனையில் — அவரினரைக் கூட்டிவிட்டதற்கு மிகவும் மனம் நொந்தான்.

''தீர்ப்பையும் இன்னிக்கே வாங்கிட்டு..'' என்ற ஜெயிலரின் வார்த்தைகள் அவன் நெஞ்சில் சுழன்றன. மீண்டும் தன்னையும் தன்னுணர்வுகளையும் இழந்துவிடுவதற்கு முன் சமாளித்துக் கொண்ட நடராஜன் சிறைக் கதவுப் பக்கம் பார்த்தான். உடம்பும் உறுதியும் இருக்கிற



தென்ற தெம்பிலும் திமிரிலும் மதர்ப்பான அடாபிடிக் காரியங்களைச் செய்து அகப்பட்டுச் சிறைக்குள் தள்ளப்படும் முரடர்களை அடக்கி ஒடுக்கி அவர்களைத் தம் வழி கொண்டுவரும் வலிமை பெற்ற ஜெயிலரின் உறுதியுள்ள கரங்கள் சிறைக் கம்பிகளைப் பற்றியிருந்தன. கண்களில் நெருப்பு கனன்று கொண்டிருந்தது.

''இது ஜெயில், வைத்தியக்கார ஆஸ்பத்திரி இல்லே.''

புலியாய் உறுமியவன் நகர்ந்தான். நடராஜனின் அலறல், கதறல் யாவும் ஒடுங்கி ஒரே ஒலியாய்ச் சன்னக் குரலாய்த் தீர்க்கமாக அவனுள் மட்டும் ஒலிக்கத் தொடங்கியது. அந்த ஒலியலையின் மிதப்பினூடே தாயின் கலங்கிய முகமும் காவேரியின் நிர்மலமான அழகு உருவமும் தெரிந்தன. ஒரு பெண்ணின் அழகு முகம் எழுப்பும் வெறியை மற்றொரு பெண்ணின் அவல முகத்தின் கண்ணீர்ச் சரம் அடக்கியது. அந்த வெறி, அந்த வேகம், அந்தக் கோபம், அந்தக் குரோதம் யாவும் ஒன்றி ஒடுங்கும் போது, அவற்றுள்ளே முடங்கிக் கிடந்த தூய நினைவுகள் மட்டும் படம் விரித்து எழுந்தன.

விரிந்துவிட்ட நினைவு மனத்துள்ளே குறுகலான எண்ணம் கொண்ட குரோத நெஞ்சம் குறுகியகாலத்துள் ஆழ்ந்து அனுபவித்த இன்பச் சுகம், அவற்றின் எல்லையின் தொல்லையாய் இன்று விளைந்துவிட்ட அவலக்கோலம் யாவுமாய்ச் சுழன்றன.

'மனுசன் நேர்மையா வாழணும், அதே சமயம் நிம்மதியாகவும் வாழணும்னு சும்மாவா சொன்னான்..?'

தனக்கு மட்டுமே கேட்டுக் கொள்ளக் கூடிய மெல்லிய குரலில் முணுமுணுத்தான்.

கைதி. வாழ்ந்து அலுத்துவிட்ட வயோதிகன் போல் வேதாந்தத்துள் திளைக்கும் பேச்சாய்ப் பிறந்தன அவன் சொற்கள்.

'காவேரி... பேசினது ஒண்ணு... பிழை ஏற்பட்டு நடக்கிறது ஒண்ணுங்கிறது மனுஷ வாழ்க்கையிலே சர்வ சகஜந்தான். நினைச்சதையெல்லாம் நிகழ்த்திக் காட்டிட முடியுங்கிறது மனுஷ சக்திக்கு அப்பாற்பட்ட நினைப்புத்தான். அதிலே தோற்றுப்போனாலும் அந்தத் தோல்வியை முழுமுழுசாக ஏற்றுக்

கொள்ளத்தான் வேணும். அதிலே தப்பில்லே....'

சிந்தனை தடைப்பட்டது. வைதி நடராஜனின் பார்வை இருட்டறையைச் சுற்றிச் சுழன்று ஒரு மூலையில் விடிவிளக்காக வைக்கப்பட்ட 'மினுக் மினுக்' ஒளியை அணு அணுவாய் ரசித்து அனுபவித்தது. அந்த ரசனையில் ஊறியது நெஞ்சம்.

அறை முழுதும் இருட்டுத்தான். ஆனாலும் ஒரு மூலையிலே மட்டும் சின்ன வெளிச்சம். ஏன்? கவலையிலும் கருணையிலும் கண் தெரியாமல் முட்டி மோதிக்காமல் நம்மைக் காப்பாத்திக்கறதுக்காக ஒரு சின்ன வெளிச்சம் துணை செய்யுது. இத்தனை பெரிய இருட்டிலேயும் சின்ன வெளிச்சத்தைதான் பெரிசா நினைச்சு அதைப் பயன்படுத்திக்கத் தெரிஞ்சாத்தான் நல்லது. அதைச் செய்யாம 'வாழ்க்கையே இருண்டு போயிடுச்சே'ன்னு தவிச்ச நான் நிதானமிழந்த சின்னஞ் சிறு விளக்கைப் பூரணமாகப் பயன் செய்திருந்தேனா? இல்லே. அந்த விளக்கையே என் காலால் அணைச்சுட்டுத் திண்டாடுறேன். அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் இன்னிக்கு இந்த நிலை வந்திருக்காதில்லையா...?

அவனது கேள்விக்குப் பதில் சொல்ல யாரும் இல்லே. அவன் மீண்டும் மௌனியானான். முன்பு வெறியுடன் அவனிடமிருந்து புறப்பட்ட அனலோ, அதைத் தொடர்ந்து விவேகத்துடன் அவன் எழுப்பிய வினாவோ எதுவும் இல்லாமல் இரண்டின் எல்லைகளையும் கடந்து, இரண்டின் இரண்டு மற்ற தன்மையாகி விட்ட மௌனத்துள்ளே மனத்தைக் கட்டிப் போட்டுவிட்டுச் சிந்தித்தான். அறையின் இருளைக் கிழித்துக் கொண்டு சிந்தனைக் கிளறுமாப்போலே பளபளத்த காவேரியின் முகம் அவனுக்குத் தெளிவைத் தந்தது. ஆர்த்த புன்முறுவலுடன் அடக்கச் சிரிப்புச் சிரித்த அவன் மீண்டும் அந்த நினைவு முகத்தை எதிர்நோக்கினான்.

'மனுஷனுக்கு ஏமாற்றத்தைத் தாங்கறதுக்குப் போதுமான சக்தியைக் கடவுள் பிறப்பிலேயே சேர்த்துப் படைச்சிருக்கான். ஆனால் அதை உணர்ந்துக்க முடியாமல், பரபரப்பிலே மனுஷன் அந்தச் சக்தியை நினைச்சுப் பார்க்கிற நிம்மதி இழந்திடறதினாலே தவறான வழிகளிலேயும் ஆபத்தான பாதைகளிலேயும் இறங்கிடறான். இதுதான் என் வரைக்கும் நேரம். இல்லையா காவேரி...?'

அவனுக்குப் பதில் கூற அங்கு காவேரி இல்லே. இல்லாத உருவத்திடமிருந்து எழாத பதிலைத் தன் கேள்விக்குக் கிடைத்துவிட்ட விடையாக அனுமானித்துக் கொண்ட அவனது சிந்தனை தொடர்ந்தது.

'காவேரி...! நீயும் நானும் ஆற்று மணலிலே தனிமையோட சலசலப்பைப் பார்த்து ரசிச்சபடி எத்தனையோ கதைகள் பேசி மகிழ்ந்திருக்கோம். காவேரி! அந்தப் பாலத்திலே கருக்கல் நேரத்திலே மங்கல் வெளிச்சத்தைப் பிளந்துக்கிட்டு ரயில் வர்றதைப் பார்க்கிறதுக்காகவே சீக்கிரமா புறப்பட்டு வருவியே காவேரி... இன்னும் மறந்திருக்க மாட்டியே அதை... ஊம்... நீ மறந்தாலும் நான் மறப்பேனா...?

'புதுத் தண்ணியிலே ஜிலுஜிலுன்னு குளிச்சிட்டுப் புரண்டும் புரளாத அந்தக் காலை நேரத்திலே என் கையைப் பற்றி நின்னு மணிக் கணக்காகப் போத் துடிப்பாயே.... உன் பேச்சைக் கேக்கறதுக்காகக் காதைத் தீட்டிக் காத்திருக்கிற அதே நான்தான் அன்னைக்கு அதே வாயாலே நீ கதறினப்போ என் அதே காதுகளைச் செவிடாக்கிக்கிட்டுப் பதறப் பதற... ஐயோ நான் பாவி காவேரி..'

நடராஜனின் உள்ளம் ஜில்லிட்டது. கண் முன்னே காவேரி வெள்ளத்தின் சலசலப்பு, கிளுகிளுப்பு, ஆற்று மணலின் மெத்தென்ற சுகம், பாலம், பாலத்தின் மீது விரைந்து வரும் கருக்கல் நேரத்து ரயில் யாவும் சரசரவென்று மின்னல் வேகத்தில் சுழன்றன. எல்லாவற்றின் வேகத்தையும் கடந்து, மனத்தின் நடுப்பட்ட போக்கில் தானும் சென்ற நடராஜன் ஆற்றுப் பாலத்தில் ஓடி வரும் ரயிலைப் பார்த்தவண்ணம் காவேரி அவன் காதருகே சொன்ன ரகசிய வார்த்தைகளை எண்ணியபோது ஊமையாய் அழுது துடித்தான்.

'அத்தான்... நாம் கல்யாணம் செய்து கொள்ள முடியாமல் போனாலும், இந்தப் பாலத்திலேயோ இந்தக் கருக்கல் நேரத்து ரயில் வர்ற போது தலையை வைச்சு, தலை ஒரு பக்கமும், உடம்பு அந்தப் பக்கமுமாய்த் துண்டு விழுறாப்பிலே உயிரை விட்டுடுவேன்...'

'எத்தனை பயங்கரமான சபதம் அன்னிக்குச் செய்தே காவேரி? உயிரும் உடலும் பிரியாதே நாம வாழ்ந்தவளாயிருக்கும்போது —இதோ நான் அணு அணுவாக அதை அனுபவிக்கிறேனே — அந்த வேதனையிலே நீ தலை வேறே, முண்டம் வேறே தனித் தனியா பிரிஞ்ச விழுறதைக் கற்பனை பண்ணிப் பார்க்கக்கூட உனக்கு — ஒரு பெண் மனத்துக்குத் தைரியம் இருக்குமா'ன்னு நினைச்சேன் நான். ஆனால் இன்னைக்கு நானே அந்தப் பாதகத்தைப் பண்ணிட்டு, பதறப் பதற நிற்கும் போதுதான் அதை உணர்கிறேன் காவேரி...

'நான் உன்னைக் காதலிச்சதும், நீ என்னை விரும்பினதும் இருச்சி வட்டாரத்துக்கே தெரிஞ்சுபோன ரகசியமாயிட்டுது. ஊருக்குத் தெரிஞ்சதுக்கப்புறமும் அதுக்குப் பேர் ரகசியமா? ஆமா... நாம் அது ரகசியமாயிருக்கும்னுதான் நம்பினோம். ஆனால் அது உன் அப்பாவுக்கு ரசிக்கக்கூடிய விஷயமா இல்லைன்னு தெரிஞ்சதுக்கப்புறம் நாம் ரகசியமா வெச்சிருந்தது தப்புத்தான்.

'அன்னிக்குமட்டுமில்லாமல் இன்னிக்கும், பெரிய தப்புத்தான் நான் செஞ்சிட்டேன். எத்தனை கஷ்டப்பட்டேன்? பணம் காசு சேர்த்துக்கத்தான் என்ன? நிதானமிங்கிற ஒன்றை மட்டும் சேர்த்துக்க மறந்திட்டேன் நான். அதுக்குரிய தண்டனையை நான் அனுபவிக்கறதுக்குத் தயாராக இருக்கிறேன்.

'சாதாரணமா எல்லாத் தகப்பனுக்கும் இருக்கிற பிடிவாதம் உங்கப்பாவுக்கும் இருந்தது. வேலை வெட்டியில்லாமல் வெறும் ஏட்டுப் படிப்பை மட்டுமே நம்பியிருந்து இன்னும் அது சோறு போடும்னு மனப்பால் குடிக்க வாழ்க்கையை வீணாகக் கழிச்சுக்கிட்டிருந்த எனக்கு உன்னைக் கல்யாணம் செய்துக்கிற யோக்கியதை இல்லையாதுன்னு உங்கப்பா நெனைச்சதுலே தப்பில்லே. ஆனால் அவரோட நினைப்பை நல்லதனமா சொல்லியிருக்கலாமே காவேரி! யாரோ

கையாலாகாதவன், மூணும் மனுசனைப் பொறுப்பிலே எடுத்தெறிஞ்சு பேசிட்டாரே உங்கப்பா. அதுதான் எனக்கும் ரோஷம் தாங்கல்லே.

'காவேரி, சத்தியமாச் சொல்றேன். அன்னைக்கு என்னைப் பெத்தவ எனக்குப் பெரிசாப் படலே. நீயும் உங்கப்பாவும்தான் பிரமாதமா பட்டீங்க. கூழோ, கஞ்சியோ உள்ளூரில் இருந்து, நாயும் பிள்ளையுமா சேர்ந்து சாப்பிட்டு ஒன்னா இருக்கலாம்னு எங்கம்மா சொன்னதை நான் கேட்டேனா? இல்லே. கேட்டிருந்தால் இந்தக் கதியே வந்திருக்காது. அவளோட கதறலையோ கண்ணீரையோ பொருட்படுத்தாமல் காசுக் கடைச் செட்டியார் கானா நாவன்னாவின் கணக்குப்பிள்ளையாக நான் சிங்கப்பூர் பயணம் போனது உனக்கு நினைவிருக்கும். உன்னாலேதான் தன் பிள்ளை பிரிஞ்சு போயிடுவன்னு எங்கம்மாவுக்கும் உன் மேலே கோபமாக இருந்துச்சே...

'நான் ரொம்பப் பிடிவாதக்காரன்னு உனக்குத் தெரியும், காவேரி. சிங்கப்பூர் போய்ச் சேர்ந்த எனக்கு ஒரே குறி பணம். அதுலே நியாய வழியிலேயும் கிடைக்கணும். உன் அப்பா கேட்ட மாதிரி நாலு காசு பணத்தோட நாலும் கௌரவமா வாழணும்னு நினைச்சுத்தான் வாழ்ந்தேன். என் நினைவு முழுதும் நீதான். எந்த நிமிஷமும் சொந்த ஊர் திரும்புவோம், உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவோம்ங்கிற ஆசையிலே நான் அல்லும் பகலுமா உழைச்சேன். செட்டியார்கிட்டே விசுவாசமா நடந்துக்கிட்டதுக்காக அவரோட தனி அன்பையும் மதிப்பையும் பெற்றேன். அவ்வளவும் யாருக்காக? உனக்காகத்தான் காவேரி. ஐந்து வருஷங்கள் அங்கே என்னைக் கரைச்சு நான் உழைச்சபோது இறுதியில் ஒருநாள் செட்டியார் உருக்கமா என்கிட்டே கேட்டுக்கொண்டார். நம்பகமான ஆள் என்கிறதினாலே அவரோட சொத்து சுகத்தை என்கிட்டே கொடுத்து அதை ஊரிலே அவருடைய சம்சாரம் மீனும்மா ஆச்சியிடம் ஒப்படைக்கச் சொல்லி அனுப்பினாரு. அதோடு நிறுத்தல்லே. அவருடைய ஒரே மகள் வடிவை நான் கலியாணம் செஞ்சுக்கிடணும்'னு ஆசைப்பட்டுச் சொல்லியும் அனுப்பிச்சார். ஆனால் உன்னைத் தான் கலியாணம் பண்ணிக்கணும்கிறதுக்காக அவர் வலிய கொடுத்த சொத்து சுகத்தை உதறி, நான் சுயமாகச் சம்பாதித்த பணத்தோட இங்கே திரும்பி வந்திட்டேன்.

'எவள் ஒருத்திக்காக நான் தாயாரைக் கண் கலங்க வைச்சுட்டுச் சிங்கப்பூர் பயணம் போனேனோ, எவள் ஒருத்திக்காக நான் ஐந்து வருஷங்கள் என்னையே தேய்ச்சுக் கரைச்சு ஓடாய் உழைச்சேனோ, எவள் ஒருத்திக்காக வாளிருந்த சொத்து சுகத்தையும், அழகான பெண்ணையும் உதறி விட்டு ஓடோடி வந்தேனோ, அந்தக் காவேரி.... நீ யாரோ ஒருவனின் மனைவியாகி விட்டாய் என்பது கேட்டுப் பொங்கினேன்; பொருமினேன். ஆனாலும் பொங்கித் தெளிஞ்ச அறிவிலே மணமான உன்னைப் பற்றி இனி நினைக்கிறதும் பாவம் என்கிற முடிவுக்கு வந்தேன். உன்னைப் பற்றிய நினைவை வெள்ளம் காவ வெள்ளத்திலே கரைந்து போகிற கனவுத் தேக்கமா மறந்து விட நினைச்சுக் காவேரியிலே ஆழ்ந்து அமிழ்ந்து



பிரசங்கம் முடிந்த பின் பிரசங்கியிடம் வந்து நின்றான் சங்கர். "நீங்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் எங்கள் வீட்டிலுள்ள ஒரு புத்தகத்தில் இருக்கிறது!" என்றான்.

"அப்படியா, அந்தப் புத்தகத்தைக் கொண்டுவா" என்றார் பிரசங்கி.

பையன் புத்தகத்தைக் கொண்டு வந்தான். அது ஓர் அகராதி!

குளிக்க வந்தேன். நாம் முன்னே வழக்கமா சந்திக்கிற படித்துறையிலே வந்து நின்றதும் பழைய நினைவுகள் படமெடுக்கத் தொடங்கின. ஆனால் அதை யெல்லாம் மறந்திட்டுக் கருக்கல் நேரத்திலே ஆற்றிலே இறங்கினவன் கைகால் சலிக்கிறவரைக்கும் தண்ணீருக்குள்ளே முங்கிக் கிடந்தேன். உன்னைப் பற்றின நினைவுகளுக்கே முழுக்குப் போட்டுவிட்டு விச்ராந்தியா தோப்புக்குள்ளே புகுந்து இளநீரைச் சீவிப் பதம் பார்த்துக்கிட்டிருக்கும்போது கலகல வென்ற சிரிப்பொலியும் கனிப்புப் பேச்சொலியும் எங்கிருந்தோ மிதந்து வந்து என் செவியிலே மோதின.

'காவேரி! அது நீயா இருக்கும்னு நான் துளியும் நினைக்கலே காவேரி....

'நீயும் இன்னொரு ஆளும்.... உன் புருஷன் அவன்தான் என்கிறது அப்புறம் தெரிய வந்தது....பண வெறியிலே உங்க அப்பா எவனுக்காவது பலியிட்டிருப்பாரோன்னு நினைச்சேன். ஆனால் புத்திசாலித்தனமா அழகும் படிப்பும் பணமும் நிறைஞ்ச வாலிபனுக்கே தான் உன்னைக் கொடுத்திருக்கிறார். நீயும் அவனும் மூணு வயசுப் பயலோட ஆற்று மணலில் உட்கார்ந்திருந்தது எனக்குத் தெரியல்லே.

'இந்த மணலும் இந்தப் பாலமும் என் ஆயுளிலே மறக்கவே முடியாது அத்தான்.... என்று, இங்கேதானே, உங்களை முதல் முதலிலே சந்திச்சேன்'னு ஒரு பெண் குரல் கேட்டதும், 'ஐந்து வருஷங்கள் ஆனாலும் கலியாணமான தேதிக்கு வருஷா வருஷம் இந்த இடம் வந்து போற பழக்கத்தைக் கட்டாயமா ஏற்படுத்திட்டியே காவேரி'ன்னு ஓர் ஆண்

> தாழ்த்தப்பட்டவர்களும், அறியாத மூடர்களும், ஏழைகளும், எழுத்து வாசனையற்றவர்களும், சண்டாளர்களும், தோட்டிகளும் உன் சகோதரர்கள்; உன் இரத்தக் கலப்புள்ளவர்கள் என்பதை மறவாதே!
>
> — ஸ்வாமி விவேகானந்தர்

குரலும் கேட்டது. பேசின பெண் குரல் தியாகத்தான் இருக்குமோன்னு எனக்கொரு சந்தேகம். பேசின சூழ்நிலையும் விஷயமும் அது நீதான் என்பதை நிரூபித்து விட்டன. தொடர்ந்து கவனிச்சேன். 'காவேரியோட உன் பேச்சிலே என்னைப் பற்றின விவரம் எதுவும் இருக்கிறதாகத் தெரியல்லே. நீ பேசினதைப் பார்த்தால் சிறு வயசிலிருந்தே அவளையேதான் பார்த்துப் பழகி உறவுகொண்டாடின மாதிரிப் பேசினாய். காவேரித் தண்ணீர், பாலம், கருக்கல் நேரத்து ரயில் வண்டி, அந்த மணல் எல்லாவற்றையும் அவளோடு இருந்து ரசிச்சது மாதிரி பேசினாய்...

'காவேரி.... மனித மனம் எவ்வளவுதான் இருந்துவிட்டாலும் வேஷம் போட்டாலும் நீறு பூத்த நெருப்பு மாதிரிக் கனன்று விட்டே தான் இருக்கும். உன்னைப் பற்றின நினைவுகள் இனி மேல் என் நெஞ்சிலே இருக்கக் கூடாதுன்னு நான் அடியோடு துடைச்சிட்டுப் பிரிந்தப்போ எதிரிலே நீயே நின்னு போது அதுவும் நான் இருக்க வேண்டிய இடத்திலே இன்னொருத்தன் நின்றபோது, மனுஷ காரியம் எல்லாமும் தவறாக நடக்க வச்சுடுச்சு.

'என்னை மன்னிச்சுடு, காவேரி.... என்னை மீறின நிலையிலே நான் உங்க இரண்டு பேருக்கும் நடுவிலே இடிபோல வந்தது போலதான். ஆனால் நீ என்னை முன்பின் தெரியாதவன் மாதிரி நினைச்சு, உன் புருஷன் உன்னைச் சந்தேகப்படாமல் இருக்க நடந்திலே, அது என்னை வெறியனாகவே ஆக்கி விட்டது. என்னை அன்னியனா.... அதுவும் இனத்தோட எடுத்த அசிங்கமான எதிர்மையா நின்ன போது கொலைகாரனு என்னைக் கூக்குரல் போட்டியே. அப்போ எனக்கிருந்த உணர்ச்சி இல்லே, வெறி என் கண்ணை மறைச்சிட்டுது.

'அதே ஆற்று மணலிலே, அதே காவேரியின் தெளிவுற்ற வெள்ளத்தையும், அதே கருக்கல் நேரத்து ரயிலையும் பாலத்தையும் பார்த்து ரசிச்ச இன்னொருத்தனுடன் நீ பேசினது, அதுவும் என்னையே அன்னியனா நினைச்சு, கொலைகாரனு என்னை, உன் புருஷனிட்டே தான்டிக் கொடுத்தது என்னை நிஜமாகவே கொலைகாரனாக்கிடுச்சு.

'காவேரி! காவேரியிலே குளிருதுன்னு சித்திரையிலே வெயிலா செக்கச் செவேல்னு — அது என்ன வெயில்னு நீ நடந்து நினைச் நினைச் ஆச்சரியப்பட்டுக் கேட்டாயே, அந்தச் சூரியனோட காலை நிறத்தைச் சிவப்புத் தோல்வியுறச் செய்யும் போல் சூடாகுமென்று....

'ஐயோ, காவேரி! எந்த வாயினாலே இனிக்க இனிக்கப் பேசி என்னை மகிழ்விச்சாயோ, அந்த வாயாலே, அதே காலை நேரத்திலே 'ஐயோ, ஐயோ' என்று நீ அலற அலற உன் கழுத்திலே இரண்டு வெட்டு... உன் தாம்பத்திய வாழ்வு கசப்படையாமலிருக்காக என்னைத் தெரியாதவ மாதிரி வேஷம் போட்ட உன் வாழ்க்கை துடித்துத் துடித்து ஓடுங்கிறது. உன்னைக் காப்பாற்ற வந்த உன் புருஷனுக்கும் கழுத்திலும் தோளிலும் சரமாரியான வெட்டுக்கள்....

'காவேரி! காதலிலே தோல்வி ஏற்பட்டதற்காக நான் வெறியனாகல்லே... அந்தத் தோல்வியைக் கூடத் தியாகப் பண்ணுகிற அதுவும் நீயே அப்படிச் செய்ததுதான் என்னை மிருகமாக்கி விட்டது. அதற்குப் பிறகு நடந்ததைத் தெரிஞ்சுக்க நீயோ உன் புருஷனோ உலகத்திலே இல்லே. கையிலே அரிவாளுடன் நான் வெறியன் போல் நிற்க, ஆற்று மணலிலே ரத்தம் சிந்தியபடி இரண்டு உடல்கள் கிடக்க, நடக்கும் கோரத்தை உணர்ந்து இரசித்துக் கொள்ள முடியாமல் தள்ளி நின்று கிலைக் குரல் எழுப்பும் சிறுவன் — உன் மணி வயிற்றுப் பிள்ளை — ஆறுமணி நிற்கும் போது இனதிர் விற்றவரும் மற்றும் தொடர்ந்து கரையில் படித்துறையில் குளித்துக் கொண்டிருந்தவர்களும் ஓடி வந்தனர்.

* * *

ஆறும் சொல்லும் போதே, வெடிக்கப் போகும் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விட்டபோதும், தாயாம் தான் கண்டது நின்றாள். நீதிபதியின் தீர்ப்பைக் கண்டு அவள் உள்ளம் நடுங்க வில்லை, ஓலமிட வில்லை. கல்லில் அடித்த சிலையாக அவள் நின்ற போதும் கண்களில் உதிரம் பெருகிய கோலத்தைக் காணச் சகியாமல் ஓவென்று ஓலமிட்டுத் தாய் — மகன் உருவை சிரஞ் தாமிக்க பாரதத்தின் கோலந்தான் பரிதாபத்துக்குரியதாயிருந்தது.

நீதி மன்றத்தை மௌனமாக ஒரு முறை நோக்கிய நடராஜன் அமைதியாக — ஆனால் — அழுத்தமாகக் கூறினான்.


''காவேரியின் பொருட்டுச் செய்யப்பட்ட கடமையாக நான் உழைத்துச் சம்பாதித்துச் சேர்த்த சொத்து அனைத்தையும் அவளது நான்கு வயது மகன் — இந்தச் சிறுவனுக்கு — உரிமையாக்குகிறேன். விவரம் தெரியாத அந்தக் குழந்தை ஆற்று மணலில் நடந்ததை மறந்து விடும் சூழ்நிலையில், அவனது பெற்றோரைப் பற்றிய செய்திகளை அறிவிக்காமலே வளர்த்து அவனுக்கு 'கார்டியன்'ஆக இருக்கும் பொறுப்பை என் தாயார் மரகதத்திடம் ஒப்படைக்கிறேன்.''

மரகதம் விசித்தழுதாள். குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கொலைகாரன், அவனுடைய சிறுவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் விலையுருவாய் அவனுக்கெதிரே நிற்கும் நடராஜன் தாயிடம் கூறினான்.

''அம்மா.... நீ குற்றவாளியின் தாயாக இருக்க வேண்டாம். ஒரு குழந்தையின் தாயாகவே என்றைக்கும் இரம்மா....''

மரண தண்டனை விதிக்கப்பட்ட அந்தக் கொலையாளிக்காக, தண்டனை வழங்கிய நீதிபதியும் இரு சொட்டு அனுதாபக் கண்ணீர் உகுத்தார்....!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon